Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ



MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து


(C/1187)

முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 25 செவ்வாய்க்கிழமை (10.01.2012) பக்கங்கள் 16 ஓசை - 101



தலைசிறந்த வீரர்

11




யுத்தம் இல்லை

13



வேண்டாம் அலங்காரம்

05



தூக்கமில்லா கனவு

12

# இலங்கையை தண்டிக்கும் நடவடிக்கை ஆசிய நாடுகள் அனைத்தும் எதிர்க்கும்

## இந்திய முன்னாள் இராஜதந்திரி பார்த்தசாரதி தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையிலுள்ள தமிழ் மக்களை பொருளாதார ரீதியாக வலுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து இந்தியா ஆலோசிக்க வேண்டுமெனவும் முன்னாள் இந்திய இராஜதந்திர உத்தியோகத்தரான ஜி.பார்த்தசாரதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

இலங்கையுடனான அனுபவங்கள் இந்திய அமைதிப்படையும் அதற்கப்பாலும் என்னும் தலைப்பில் கருத்தரங்கொன்றில் பேசியபோதே அவர் இவ்வாறு கூறினார். அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கு, கிழக்கில் கைத்தொழில் பயிற்சி மற்றும் பொறியியல் நிறுவனங்களை இந்தியா அமைக்க வேண்டும். இதனால் இப்பகுதிக்கும் தமிழ் நாட்டுக்கும் பொருளாதார ஒன்றிணைவு ஏற்படும். இது தனித்து (15 ஆம் பக்கம் பார்க்க)

## வேட்டைக்கு சென்றவர் சடலமாக மீட்பு

(முல்லைத்தீவு)

வேட்டைக்குச் சென்ற இளைஞர் கட்டுத்துவக்கு சூட்டுக்கு இலக்கான நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்றுக் காலை 9.00 மணியளவில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு உடையார்கட்டு தெற்கைச் சேர்ந்த நமசிவாயம் அரசரட்ணம் (வயது - 21) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த 8 ஆம் திகதி மதியம் அருகிலுள்ள காட்டில் வேட்டையாடுவதற்காக வளர்ப்பு நாயுடன் சென்றுள்ளார். ஆனால் பின்னர் இவரது தொடர்பு துண்டிக்கப் பட்டிருந்தது. நேற்றுக்காலை உடையார்கட்டு குளமொன்றின் அருகில் இடுப்பு பகுதியில் 3 ஈய துகள்கள் பாய்ந்த நிலையில் (15 ஆம் பக்கம் பார்க்க)

## தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு


(யாழ்ப்பாணம்)

இரவு படுக்கைக்கு போனவர் அடுத்தநாள் காலையில் பலா மரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் உரும்பிராயில் இடம்பெற்றுள்ளது.

உரும்பிராய் தெற்கு யோகபுரம் பகுதியில் உள்ள அகதி முகாமொன்றில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தம்பு சத்திலிங்கம் (வயது - 44) என்பவரே இவ்வாறு தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டவராவார். இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

குறித்த நபர் கடந்த சனிக்கிழமை இரவு உணவை உட்கொண்டு விட்டு படுக்கைக்கு சென்றார். எனினும் அவரை அதிகாலையில் இருந்து காணவில்லை. அவரின் மனைவியும், பிள்ளையும் அவரைத் தேடிய போது அவர்களின் (15 ஆம் பக்கம் பார்க்க)

# போரினால் அழிவடைந்த வீடுகளை புனரமைக்க கனடா உதவ வேண்டும்



## யாழ். ஆயர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

கடந்தகால போர் நடவடிக்கை காரணமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள பொதுமக்களின் 80 வீதமான வீடுகள் முற்றாக அழிவடைந்துள்ளன.

அவற்றை மீள நிர்மாணித்துக் கொடுக்க கனேடிய அரசாங்கம் தன்னாலான உதவியைப் புரிய முன்வர வேண்டுமென யாழ். மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை (15 ஆம் பக்கம் பார்க்க)

# வடமாகாண சபைத் தேர்தலை நடத்த கூட்டமைப்பு வலியுறுத்த வேண்டும்



(கொழும்பு)

அரசியல் தீர்வு தொடர்பில் ஆராய நியமிக்கப் பட்டிருக்கும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு இடம்பெற வேண்டியது அவசியமாகும். நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் இடம்பெற்று அவர்கள் தமது நிலைப்பாடுகளையும் எதிர்ப்புக்களையும் அறிவிக்கலாம். ஆனால் அதில் பங்கெடுக்காமல் எதிர்ப்பதானது கேள்விக்குரிய விடயமாகும். தெரிவுக்குழுவுக்குள் வராமல் எதிர்ப்பதற்கும் (15 ஆம் பக்கம் பார்க்க)

# வேகமாக பரவுகிறது "தைபஸ்" அவதானமாக இருக்க அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் சடுதியாக அதிகரித்துவரும் தைபஸ் காய்ச்சலிற்கு 74 பேர் இலக்காகியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் தொற்று நோய் தடுப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் காய்ச்சலினால் பீடிக்கப்படுவோரின் தொகை நாளுக்குநாள் அதிகரித்துவருவதாகவும் அப்பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட சுமார் 101 பேர் யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் அவதானிக்கப் பட்டிருந்தனர். இவர்களில் சுமார் 57 பேருக்கு தைபஸ் காய்ச்சல் ஏற்பட்டிருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் இம்மாதத்தின் முதல் வாரத்தில் மட்டும் 40 பேர் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட நிலையில் (15 ஆம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சி மாவட்டத்திலும் சமுர்த்தி திட்டம் அறிமுகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் முதல் தடவையாக சமுர்த்தித் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நேற்றுக் காலை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

சமுர்த்தித் திட்டத்தின் அறிமுகத்தின்போது முதற்கட்டமாக 30 வீதமான பயனாளிகள் முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு உதவி வழங்கப் படவுள்ளது.

பச்சிலைப்பள்ளி, பூநகரி, கண்டாவளை, கரைச்சி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் சமுர்த்தி வங்கிகள் தற்காலிகமாக இயக்கப்படவுள்ளது. இதேவேளை பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு அங்குள்ள பூகோள அமைப்பைக் கருத்திற் கொண்டு இரண்டு வங்கிகள் இயங்குமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

(15 ஆம் பக்கம் பார்க்க)

# ஆணைக்குழுவின் அறிக்கை மூலம் வெளிப்படைத்தன்மை நிரூபணம்

## அமைச்சர் மகிந்த சமரசிங்க கூறுகிறார்

(கொழும்பு)

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் சுயாதீனமாகவும் சர்வதேச நாடுகளின் குற்றச்சாட்டுக்களுக்கு பதில் கூறுவதாகவும் அமைந்துள்ள நிலையானது அரசாங்கத்தின் வெளிப்படைத் தன்மையை உலக நாடுகளுக்கு எடுத்துக் காட்டியுள்ளதென மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப் பட்டதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகளுக்கு அவசியம் இல்லை.

ஜெனீவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளையும், சுட்டிக்காட்டப்பட்டுள்ள உள்நாட்டு விசாரணைகள் தொடர்பாகவும் எடுத்துரைத்து இலங்கையின் வெளிப்படைத் தன்மை குறித்து விளக்கமளிக்க முடியும்.

இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணைகள் அவசியம் என்று அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் (15 ஆம் பக்கம் பார்க்க)

# சோலைவரிப் பிணக்குகளைத் தீர்க்க அமைச்சர் டக்ளஸ் விசேட நடவடிக்கை




(யாழ்ப்பாணம்)

விசேட அமைச்சரவைப் பத்திரம் மூலம் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவின் கீழான கிராம மக்களின் காணி உறுதி மற்றும் சோலைவரிப் பிரச்சினைகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதிமொழி வழங்கினார்.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கிராமங்களைச் சேர்ந்த பலநூற்றுக் கணக்கான மக்கள் நேற்று அமைச்சரின் யாழ். அலுவலகத்திற்கு முன்பாக வருகைதந்து தமது பிரச்சினைகள் தொடர்பில் கோரிக்கைகளை முன்வைத்த போதே அவர் இந்த உறுதிமொழியை வழங்கினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குறிப்பிட்ட கிராம மக்களது கோரிக்கைகள் மற்றும் தேவைகள் தொடர்பாக ஏற்கனவே துறைசார்ந்தவர்களால் எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இது வியடம் தொடர்பில் அவற்றை நிறைவேற்றுவது முக்கிய கடமையாகும் எனவும் அதற்கு குறைந்தது ஒரு மாத கால அவகாசம் தேவை எனவும் தெரிவித்தார்.

அத்துடன் குறித்த விடயங்கள் தொடர்பாக இம்மாதம் 12 ஆம் திகதி விசேட கலந்துரையாடலொன்றுக்கு ஏற்பாடு செய்துள்ளதாகவும் அதன் போது துறைசார்ந்த அதிகாரிகள் உள்ளடங்கலாக ஒவ்வொரு கிராமங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும வகையில் மக்கள் பிரதிநிதிகளும் சமுகமளித்து தமது பிரச்சினைகள் தொடர்பாக எடுத்துரைக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இதன்பிரகாரம் விசேட அமைச்சரவைப் பத்திரம் மூலம் மக்களின் தேவைகள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பில் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமெனவும், அதற்கு மக்களது ஒத்துழைப்பும் ஒத்தாசையும் முக்கியமானது என்றும் சுட்டிக்காட்டிய அமைச்சர் குறித்த கிராமங்களுக்கு தாம் நேரடியாக விஜயம் மேற்கொண்டு நிலமைகள் குறித்து ஆராயவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன்போது ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்), யாழ். மாநகரசபை உறுப்பினர் றீகன், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமையாளர் திருமதி சுலோஜனா கிரிதரன், யாழ்.பிரதேச செயலர் பிரிவின் தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் சிவசுப்பிரமணியம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1186)


# மின்வெட்டு இல்லை

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்கென உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்யும் பொருட்டு ஏற்கனவே மின்சார சபையினால் மின் தடைப்படும் என அறிவிக்கப்பட்ட கால அட்டவணையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இன்று காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் போன்ற இடங்களில் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த மின் தடை நீக்கப்படுவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எப்.எஸ்)

# விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய நிபுணர்களும் சாவகச்சேரி சுகா தார வைத்திய அதிகாரி பணிமனையினரும் இணைந்து பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் பல்வேறு கருத்தரங்குகளை தொடர்ச்சியாக நடத்தவுள்ளனர்.

வைத்தியசாலையின் அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் நடைபெறும் இக்கருத்தரங்கில் நீரிழிவு, மார்பு நோய், புற்றுநோய் தொடர்பாக கிராம மக்கள் மத்தியில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்துவதுடன், பாடசாலைகளில் க.பொ.த (உ/த) மாணவர்களுக்கு நோய்க்கட்டுப்பாடு தொடர்பான கருத்தூட்டல்களும் நடத்த திட்டமிட்டுள்ளனர்.(11)

# இன்று விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையால் நடத்தப்படும் ஜே/82 கிராம சேவையாளர் பிரிவின் மக்கள் பங்கேற்புடனான கிராம அபிவிருத்தி திட்டமிடல் தொடர்பான கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

எனவே இக்கூட்டத்தில் பங்குபற்றி தங்கள் பிரிவின் கிராம அபிவிருத்திக்கான ஒத்துழைப்பினை வழங்குமாறு மேற்படி கிராம மக்களை யாழ். மாநகர சபை கேட்டுள்ளது.

# பட்டம் விடும் சீசன் ஆரம்பம்

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியில் பட்டம் விடும் சீசன் ஆரம்பமாகியுள்ளது. கார்த்திகை மாதம் தொடக்கம் தைப்பொங்கல் மற்றும் தைப்பூசம் வரையான காலப்பகுதியில் சிறியவர் முதல் பெரியவர் வரை இதைப் பொழுது போக்காகச் செய்து வருகின்றனர்.

தைப்பொங்கல் தினத்தில் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை முனை, பொலிகண்டி, வதிரி ஆகிய இடங்களில் பட்டப் போட்டிகள் வைத்து பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்குவதை வருடாவருடம் ஒரு நிகழ்வாகச் செய்து வருகின்றனர்.(116)


## சிங்கள வகுப்புக்கள்

**சிங்கள மொழியில் சரளமாக பேச, எழுத, வாசிக்க புதிய பிரிவுகள் ஆரம்பம்**

**14.01.2012 மாலை 4:30, காலம் : 10 மாதம்**

உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழகம் செல்ல உள்ள மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆர்வமுடையவர்கள் அனைவரும் பயில அரிய வாய்ப்பு. தொடர்புகளுக்கு :

**Jaffna Technical Institute**

இல.45 மணிக்கூட்டு வீதி, பெருமாள் கோவில் முன் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 0778249949, 0778561654 (C/1191)

கிளை : New Asian Center, 56/15B ஸ்ரான்லி வீதி, சம்பத் வங்கி அருகாமை, யாழ்ப்பாணம். T.P : 0779254078



## பாராட்டி வாழ்த்துகின்றோம்









ஜே/89மணியம்தோட்டம் கிராம மாதர் சங்கத்துக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் மூலம் 50 ஆயிரம் ரூபா மனமுவந்து வழங்கிய கௌரவ அமைச்சர் கே. என்.டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) ஈ.பி.டி.பி, யாழ். மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன், ஈ.பி.டி.பி. நல்லூர் அமைப்பாளரும், பிரதேசசபை எதிர்க் கட்சித் தலைவருமான அ.ரவீந்திரதாசன் (ஜே.பி) ஆகியோருக்கு எமது பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்

கிராம மாதர் சங்கம்
மணியம்தோட்டம்

(B/1522)








**நாளை ஆரம்பம்**

தைப் பொங்கலை முன்னிட்டு
ஆண்டு தோறும் **சரவணா ரெக்ஸ்** இன்
மாபெரும் பிரமாண்டமான மலிவு விற்பனை

**6 நாட்கள் மட்டும்**



இடம் : கே.கே.எஸ் வீதி, தட்டாதெருச் சந்தியில் இருந்து இடது பக்கமாக 300 M தூரத்தில் உள்ள கெங்காதரன் மருத்துவமனை முன்பாகவுள்ள சிவப்பிரகாசம் வீதி (ஆடித்தள்ளுபடி நடைபெற்ற இடம்)

காலம் : 11-01-2012 முதல் 16-01-2012 வரை

நேரம் : காலை 9.00 மணி முதல் இரவு 7.30 மணி வரை

- இந்தியன் திருமணப் பட்டுச் சாறிகள்
- இந்தியன் சீக்குன்ஸ் சாறிகள்
- இந்தியன் சில்க்ஸ் சாறிகள் (Office Wear Saree)
- இந்தியன் கொட்டன் சாறிகள் (Office Wear Saree)
- இந்தியன் பஞ்சாபிகள், பஞ்சாபித் துணிகள்

மற்றும் ஆண்களுக்கான அனைத்து ஆடைத் தெரிவுகளும்



ஆடித் தள்ளுபடி நடைபெற்ற விஸ்திரமான இடத்தில்

தைப் பொங்கலை முன்னிட்டு இந்தியாவில் இருந்து விசேடமாக இறக்குமதி செய்யப்பட்டது

Office Wear Saree Special Selection

(C/1193)

கடுமையான கஞ்சத்தனம், தகுதியற்ற தற்பெருமை
எல்லையற்ற பேராசை
இந்தமூன்றும் மனிதனை நாசமாக்கிவிடும்

-முகமதுநபி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## சேதுவை மேடுறுத்தி வீதி?

இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவின் இலங்கை விஜயம் தொடர்பாகப் பேசப்படும் பல்வேறு விடயங்களுள் ஒன்றாகவே இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுப் பேச்சுக்களின் நிலை குறித்தும் அவர் விசாரிப்பார் என்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதானமாக போரில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கென இந்தியா அறிவித்த 50 ஆயிரம் வீடமைப்புத் திட்டத்திற்குப் புத்துயிரளித்தல், தெற்கில் காலி புகையிரதப் பாதையை ஆரம்பித்தல், வடக்கு புகையிரதப் பாதைக்கு 382.9 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்குதல் போன்றனதான் அவரது நிகழ்ச்சி நிரலில் இருப்பதாக இதுவரை தெரியவருகிறது.

இலங்கையில் சீன திட்டங்கள் தொடர்பான அவதானிப்பும், அது குறித்த இந்தியாவின் எச்சரிக்கையுணர்வை இலங்கைக்கு உணர்த்துவதும் இந்த விஜயத்தின் மறைமுக நோக்கத்தில் இருக்கக் கூடும். இலங்கையரசை தனக்கு வாகானதாக இறுக்கி அணைத்துக் கொள்வதைத்தான் இந்தியா தனது நலனுக்குகந்த நோக்கமாகக் கருதுமே தவிர, நம் தீவிரவாதத் தேசியர்கள் குடிக்கும் மனப்பால் போல தமிழர்களுக்காக மகிந்தவை ஒரு மிரட்டு மிரட்டிவிட்டுப் போவார் என்பதல்ல.

இலங்கையைத் தன் கையை விட்டு நழுவ விடாதிருக்கும் வகையில் பார்த்துக்கொள்வதுவே இந்தியாவின் முதனிலை யோசனையில் இருக்கும். ரணில் விக்கிரமசிங்க பிரதமராயிருந்த பொழுதில், இராமேஸ்வரத்திலிருந்து மன்னாருக்குப் பாக்குநீரிணையில் பாலம் அமைத்து, இலங்கையை நேரடி இணைப்பில் வைத்துக்கொண்டு விடவும் இந்திய அரசுக்கு ஒரு யோசனையிருந்தது.

அப்போது தி.மு.க வின் டி.ஆர்.பாலு மத்தியில் கப்பற் போக்குவரத்து அமைச்சராக இருந்ததால், பாலம் வேண்டாம்... இந்திய ரூபா 2,440 கோடி செலவிலான சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம்தான் நிறைவேற்றப்பட வேண்டும் என்று ஒற்றைக் காலில் நின்றது திராவிட முன்னேற்றக் கழகம். 2005-ம் ஆண்டு சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் தொடங்கப்பட்டபோது, இது வெறும் அரசியல் நாடகம், தி.மு.க தரும் நெருக்கடியைத் தாங்கிக்கொள்ள முடியாமல் காங்கிரஸ் அரசு இந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டுள்ளது என்று இந்திய அளவில் பல்வேறு எதிர்க்கட்சிகள் விமர்சித்தன.

கால்வாய் அமைக்கும் பணியில் ஈடுபட்ட இராட்சத இயந்திரம் இரண்டுமுறை நடுக்கடலில் பழுதடைந்ததாலும், மன்னார் வளைகுடா மற்றும் பாக்குநீரிணையில் உள்ள அரிய கடற்தாவரங்கள் அழிந்துவிடும் என்பதோடு, புராதனச் சின்னமாகிய ராமர் பாலம் இடிக்கப்படக்கூடாது என்றும் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடுக்கப்பட்டதாலும் பணிகள் நிறுத்தப்பட்டன.

2007 செப்டம்பரில், நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்த இந்தியத் தொல்லியல் துறை, "ராமர் இருந்ததற்கு வரலாற்று ஆதாரம் இல்லை ராமர் பாலம் மனிதரால் உருவாக்கப்பட்டது அல்ல" என்று தெரிவித்தது. இதற்கு கடும் எதிர்ப்புகள் கிளம்பின.

இந்தத் திட்டத்தை மதரீதியாகப் பார்ப்பதைவிடவும், அறிவியல்பூர்வமாகவும் பொருளாதார ரீதியிலும் பார்க்கும்படி துறைசார் வல்லுனர்களும் ஊடகங்களும் வலியுறுத்தின. இந்தத் திட்டம் நிறைவேறினாலும் சேது சமுத்திரக் கால்வாய் வழியாக 50 ஆயிரம் தொன் எடையுள்ள கப்பல்கள் மட்டுமே செல்ல முடியும் என்றும், பயண தூரம் சுமார் 300 மைல்கள் மிச்சப்படும் என்றாலும், இதனால் பெரும் லாபம் இல்லை என்றும் கப்பல் துறை வல்லுநர்கள் தெரிவித்தனர். அதிக கப்பல்கள் இந்தக் கால்வாயைப் பயன்படுத்தாத நிலை உருவானால், மிகப்பெரும் நஷ்டம்தான் ஏற்படும் என்றனர்.

மேலும், மன்னார்வளைகுடா கடல்வாழ் பல்லுயிர் பெருக்கத்துக்கான பாதுகாக்கப்பட்ட கடற்பகுதி. பவழப் பாறைகள், அரிய கடற்பாசிகள் ஆகியவை பாதிக்கப்படும். இப்பகுதியில் 6 சதுர கி.மீ பரப்புக்கு பல்லுயிர் பெருக்கம் நிரந்தரமாக அழிந்துபோகும் என்றும் சுற்றுச்சூழல் பொறியியல் ஆய்வு நிறுவனம் தெரிவித்திருக்கிறது.

எனவே, பாக்குநீரிணையை அகழ்ந்து கப்பற் போக்குவரத்திற்குப் பாதை அமைக்கும் பணியை இந்திய அரசு கைவிடும் என்றே தெரிகிறது. ஒருவேளை, பழையபடி இலங்கைக்குப் பாலம் அமைக்கும் யோசனையைக் கையிலெடுத்துக் கொள்ளலாம். எனில், தமிழ் மக்களின் பிரச்சினையும் வேறு பரிமாணத்துக்குள் போய்விடும் சாத்தியமிருக்கிறது.

- ஆசிரியர்

# அபிவிருத்தியை விரும்பாதவர்கள் காலத்தை வீணடித்து வருகின்றனர்

## அமைச்சர் ரிசாத் குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

வன்னிமாவட்டத்திற்கான அபிவிருத்திகளை தாங்கிக்கொள்ள இயலாதவர்கள் மக்களுக்கு கிடைக்கும் நன்மைகளை தடுத்துநிறுத்துவதிலும் எனக்கு எதிரான அபாண்டங்களை சுமத்துவதிலும் காலத்தை வீணடிக்கின்றார்களே தவிர, வேறெதையும் அவர்களால் சாதிக்கமுடியவில்லை யென வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் அமைச்சருமான றிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்

இலங்கையின் முதற்தர ஆடை உற்பத்தி நிறுவனமான டைமெக்ஸ் மற்றும் பெர்கஸ் நிறுவனத்தின் ஆடைத் தொழிற்சாலைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வுமன்னார் கைத்தொழில் பேட்டையில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்

சில்லறைத்தனமான அறிக்கைகளை விடும் சக்திகள் மீண்டும் ஒரு யுத்தத்தை தோற்றுவிக்கலாமென மனப்பால் குடிக்கின்றனர். அவர்களது மாயாஜால மாயக்கருத்துக்களை வன்னி மாவட்ட மக்கள் நிராகரித்துள்ளனர்.

வடமாகாணத்தை பொறுத்தவரையில் எமது மாவட்டம் பாரிய இழப்புக்களை சந்தித்த மாவட்டமாகும். யுத்தம், இயற்கை அழிவு, பொருளாதார ரீதியான பின்னடைவுகள் எமது பின்னடைவுக்கும் காரணங்களாகும். அதனை மேம்படுத்தி மக்களது வாழ்வை வளப்படுத்தவேண்டிய தேவை எமக்கிருக்கின்றது. நாம் கைத்தொழில் அமைச்சுப் பதவியினை பொறுப்பெடுத்தபோது எமக்கு வழங்கப்பட்ட பொருளாதார 'அபிவிருத்தி இலக்கு 2015 ஆம் ஆண்டுவரை 4 பில்லியனாக இருக்க வேண்டும். ஆனால் நாம் 2011 ஆம் ஆண்டு முடிவில் 3.2 பில்லியனை ஆடைத்துறை மூலம் எட்டியுள்ளோம்.

## கிளிநொச்சியில் ஆடைத் தொழிற்சாலை அறுநூறு பேருக்கு வேலைவாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் 'விடியல் லைன்' ஆடைத் தொழிற்சாலை தைப்பொங்கலை முன்னிட்டு ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஆடைத் தொழிற்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

புதிதாக நிர்மாணிக்கப்படும் இவ் ஆடைத் தொழிற்சாலையில் 600 இற்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படவுள்ளதாகவும், இதன் மூலம் தமது வாழ்வாதார ரீதியில் பயனைப் பெறமுடியும் எனவும்தெரி விக்கப்படுகிறது.

இருந்த போதிலும், தற்போது 60 பேருக்கு ஆடை வடிவமைப்பிற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

ஆடைத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டு சில வாரங்களின் பின்னர் மேலதிகமான இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படவுள்ளதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(எஸ்)

# வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் நோயாளர்களின் எண்ணிக்கை வீழ்ச்சி

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலையில் 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது கடந்த வருடம் பொது சிகிச்ஞ்சக்காக குறைந்தளவு நோயாளர்களும், கிளினிக் சிகிச்சைக்காக கணிசமான அளவு நோயாளர்களும் சிகிச்சை பெற்றுள்ளதாக வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2011 ஆம் ஆண்டு இவ் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற நோயளர்கள் எண்ணிக்கை குறைவானது. இதன்படி வெளி நோயாளர் பிரிவில் கடந்த ஆண்டு 71 ஆயிரத்து 611 நோயாளர்கள், தடிமன் காய்ச்சல், தலையிடி போன்ற நோய்களுக்காக நாளாந்தம் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இதேவேளை, விடுதியில் தங்கிருந்து 2 ஆயிரத்து 426 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். (116)

அத்துடன் இறந்தவர்களில் 2010 ஆம் ஆண்டு 13 பேரும், 2011 ஆம் ஆண்டு 7 பேரும் விபத்து நோய்த்தான்னம், தற்கொலை போன்றவற்றால் இறந்துள்ளனர்.

இதேவேளை குழந்தை பிரசவித்ததில் கடந்த ஆண்டு 119 பேருக்கு பிரசவம் இடம்பெற்றுள்ளது. வசதிகள் கூடிய அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகள் மக்கள் நாடுவதாலேயே குழந்தை பிறப்பு வீதம் இவ் வைத்தியசாலையில் குறைந்திருக்கலாம் என தெரிவித்தார்.

இதேவேளை, வாராந்த, மாதாந்த கிளினிக் சிகிச்சைக்காக 2 ஆயிரத்து 426 நோயாளர்களும், மாவட்ட வைத்தியசாலைகளில் இருந்து நோயாளர்களின் நலன்கருதி பிரதேச வைத்தியசாலைக்க கிளினிக்குக்கு அனுப்புவதால் 2010 ஆம் ஆண்டை விட கடந்த வருடம் வெளிநோயாளர் பிரிவில் நோயாளர்கள் அதிகளவில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

அத்துடன் பிரதேச வைத்தியசாலை தரத்தை கொண்டுள்ள நிலையில் வளப்பற்றாக்குறை காணப்படுவதுடன், இந்த வைத்தியசாலைக்கு வைத்தியர் உட்பட தாதியர்கள், சிற்றூழியர்கள் போன்ற ஆளணியினருக்கு பற்றாக்குறை நிலவுவதாகவும் வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (116)

# கலாசார பண்பாடு குறைவடைய விழிப்புணர்வு இன்மையே காரணம்

## யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

கலாசார விழுமியங்களும் விழிப்புணர்வுகளும் போதியளவு இல்லாத காரணத்தினால் எமது மாணவர்களுக்கிடையே கலாசார பண்பாடுகள் குறைவடைகின்றன.

இதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என யாழ். வலயக்கல்விப் பணிபபாளர் வ.செல்வராஜா தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை திக்கம மத்திய சனசமூக நிலையத்தின் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பாடசாலை மாணவர்களிடையே கைத்தொலைபேசிப் பாவனையும், பணப் புழக்கமும் அதிகரித்துக் காணப்படுகின்றது. அண்மைக் காலமாக போதை வஸ்துப் பாவனையும் மாணவர்களிடையே அதிகரித்து அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதைப் பத்திரிகை வாயிலாக நாம் அறிந்துள்ளோம்.

வீதிக்கு வீதி மதுபானக் கடைகள் இருக்கின்றது. அங்கு முதியவர்கள் குடிப்பது ஓரளவு குறைந்து விட்டபோதிலும் பாடசாலை மாணவர்களுக்குத்தான் இரகசியமான முறையில் மது விற்பனை இடம்பெறுகின்றது.

அன்னைய காலத்தில் எமது பாரம்பரியங்கள், பண்பாடுகள், கலாசாரங்கள் என்பவற்றை உணர்ந்து பாடல்கள் மூலமாகவும், கவிதை மூலமாகவும் வட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், கண்ணதாசன் போன்றவர்கள் எமது பண்பாடு அர்த்தத்துடன் பாடினார்கள். ஆனாலும் இன்றுள்ள கலைஞர்கள், கவிஞர்கள் அர்த்தமில்லாத பாடல்களையும் கருத்தாளமற்ற பாடல்களையும் பாடிக்கொண்டிருக்கின்றார்கள் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வடமராட்சி நல்லொழுக்க நிறுவன தலைவர் பா.ரகுநாதன், ஓய்வு பெற்ற கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் த.தபேந்திரராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், யாழ். மாவட்ட சனசமூக நிலைய உத்தியோகத்தர் திருமதி வி.யோகராஜா, திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலய அதிபர் க.ரவீந்திரன், கிராம அலுவலர்களான தி.ரங்கநாதன் அன்ரன் நிஷாந்தன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர். (116)

# மண் அணையை அகற்றுமாறு மாதகல் மக்கள் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

குடியிருப்புக்கு இடையூறாகவுள்ள மண் அணையை அகற்றித் தருமாறு மாதகல் கிழக்கு கோணாவளைப் பகுதி மக்கள் ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரனிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இக் கோரிக்கையை அடுத்து அப்பகுதிக்குச் சென்ற மாவட்ட அமைப்பாளர் கமல், மீள்குடியமர்ந்த அப்பகுதியைச் சேர்ந்த 150 குடும்பங்களை நேரடியாகச் சந்தித்து எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிக் கேட்டறிந்து கொண்டார்.

மாதகல் - கீரிமலை நோக்கி சுமார் ஒரு கிலோ மீற்றர் நீளமான இந்த மண் அணையால் மழைநீர் தேங்கிநின்று குடியிருப்புக்கு இடையூறாக இருப்பதாகவும், பல காணிகள் நீரில் மூழ்கியுள்ளதால் மேலும் 75 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீளக் குடியேற முடியாத நிலையில் இருப்பதையும் அப் பகுதி மக்கள் மாவட்ட அமைப்பாளரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

மேலும் தமது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு வசதியான மாதகல் குசுமன் துறை, நுணசை மகா வித்தியாலயத்தை மீள இயங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தருமாறும் அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

அனைத்து நிலைமைகளையும் கேட்டறிந்து கொண்ட மாவட்ட அமைப்பாளர் கமல் இவ் விடயத்தை உடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு வந்து ஒரு வார காலத்திற்குள் உரிய தீர்வைப் பெற்றுத் தருவதுடன் மலர்ந்திருக்கும் புதுவருடத்தில் மீள்குடியேறிய இம் மக்கள் அனைத்து வசதிகளுடன் தம் வாழ்வை முன்னெடுக்க உரிய ஏற்பாடுகளை மேற்கொள்வதாகவும் அம்மக்களிடம் தெரிவித்தார்.

இதன்போது ஈ.பி.டி.பி.யின் மானிப்பாய் பிரதேச இணைப்பாளரும் வலி.தென் மேற்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான ஜீவா உடனிருந்தார்.

## சமுர்த்தி நிவாரணம் பெறுவோரை பதிவு செய்யும் நடவடிக்கை

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் சமுர்த்தி நிவாரணம் பெறுவோரின் விபரங்கள் சமுர்த்தி உத்தியோகத்தர்களால் பதிவு செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்து தினமும் கிராமசேவை அலுவலகங்களில் மக்களில் நீண்டநேரம் காத்து நின்று இப்பதிவுகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இப்பதிவு நடவடிக்கைகளில் புதிதாக பதிவு செய்வதற்கு பலர் வருகை தருவதுடன், பதிவு இல்லாதவர்களையும் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (104)

## ஒட்டுசுட்டான் படைப்பிரிவின் ஏற்பாட்டில் மருத்துவம், வீட்டுத்தோட்டக் கண்காட்சி

(கிளிநொச்சி)

ஒட்டுசுட்டான் 64 ஆவது இராணுவப் படைப்பிரிவின் ஏற்பாட்டில் மருத்துவம், வீட்டுத் தோட்டம்சார் இரண்டு நாள் கண்காட்சி துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

கடந்த சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் நடைபெற்ற இக் கண்காட்சியில் முல்லைத்தீவு மாவட்ட கட்டளைத் தளபதி எல்.பி. ஆர்.மார்க் கலந்துகொண்டு வைபவரீதியாகத் திறந்த வைத்தார்.

இக்கண்காட்சியில் மருத்துவம் சம்பந்தமான பொது விடயங்கள் மற்றும் வீட்டுத்தோட்ட அவசியம், அதனால் ஏற்படும் நன்மைகள் தொடர்பாகவும் மற்றும் பல்வேறு சமூக நலன் சார்ந்த விடயங்கள் பொதுமக்களின் பார்வைக்காக கண்காட்சிக்கு வைக்கப்பட்டது.

இரண்டு நாட்கள் நடைபெற்ற இக்கண்காட்சியில் அதிகளவிலான பாடசாலை மாணவர்கள் பயன்பெற்றதுடன் 1500 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு கண்காட்சியைப் பார்வையிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கண்காட்சியில் கலந்து கொண்ட மக்களுக்கு விசேடமாக ஒரு பற்சுகாதார மருத்துவ சேவையும் இடம்பெற்றது. இதில் 200 இற்கும் மேற்பட்ட மக்கள் இச் சேவையைப் பெற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகம், பொலிஸ் அத்தியட்சகர் ஜானக குணதிலக உட்பட அரச அதிகாரிகள், பொதுமக்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (04)

## சேவை நீடிப்பு

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் ஓய்வு பெற்ற 3 கிராமசேவையாளர்களுக்கு மேலும் 6 மாதகால சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி சண்டிலிப்பாய், இளவாலை, நாவற்காடு ஆகிய பிரிவு கிராம சேவையாளர்களுக்கே இச்சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (104)

## தென்னங்கன்று விநியோகம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு தென்னங் கன்றுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

திவிநெகும திட்டத்தின்கீழ் ஒவ்வொரு பயனாளிக்கும் தலா இரண்டு தென்னங்கன்று வீதம் வழங்கப்பட்டு வருவதுடன், இவற்றைப் பயனாளிகள் தத்தம் கிராமஅலுவலர் பிரிவுகளூடாக பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நூல் வெளியீடும் பாராட்டு விழாவும்

(இணுவில்)

இணுவையூர் தம்பு சிவசுப்பிரமணியத்தின் 'முதுசம்' நூல் வெளியீடும் சிகரம் தொட்ட செம்மல்களைப் பாராட்டும் விழாவும் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

பேராசிரியர் சபா ஜெயராசாவின் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், வவுனியூர் இரா.உதயணன் பிரதம விருந்தினராகவும், கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் உடுவை. தில்லை நடராசா, செ.அமிர்தலிங்கம், சி.சிவநிர்னந்தானந்தா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் சிகரம் தொட்ட செம்மல்களான பேராசிரியர் சபா ஜெயராசா, கலாநிதி ஆறு.திருமுருகன், வவுனியூர் இரா.உதயணன், கலைச்செலவன் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

நூலாசிரியர் தம்பு சிவாவின் எழுத்துலக சேவையைப் பாராட்டி, இலண்டன் இணுவில் ஒன்றியம் 'தமிழ்த் தென்றல்' என்னும் விருது வழங்கி கௌரவிக்கப்படவிருப்பதும் குறிப்பிடத்தக்கது.



## பாதிக்கப்பட்டோருக்கும் சமூக அங்கீகாரம் தேவை

### வட மாகாண கல்விப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

மனநிலை குன்றிய மாணவர்களுக்கும், மாற்றுவலுவுள்ள மாணவர்களுக்கும் சமூக அங்கீகாரத்தைக் கொடுக்க வேண்டும் என வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வடமாகாணத்தில் முழுநிலா முத்து பௌர்ணமி நாள் கலைவிழா நிகழ்வு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு தலைமையுரை ஆற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

30 வருடங்களின் பின்பு பௌர்ணமி விழா கொண்டாடப்படுகின்றது. முன்னைய காலங்களில் பலதரப்பட்ட கலாசார நிலைமைகளை தோற்றுவிக்க முன்னோர்கள் தமது வாழ்க்கை வட்டத்தை நாடகமாக மாற்றினார்கள் அவற்றையே மேடைகளிலும் நடித்தார்கள்.

அவைகள் கடந்த காலங்களில் அமிழ்ந்து போகும் நிலைக்குத் தள்ளப்பட்டது. அவ்வாறான காலப்பகுதிகளில்தான் சாந்தி, சமாதானத்தை மதிக்கவும், தோற்றுவிக்கவும் பௌர்ணமி விழா நடத்த ஏற்பாடுகள் செய்யப்படடன. எங்கள் உறவுகளையும், கலாசாரத்தினையும் கட்டி எழுப்ப நாட்டார் பாடல்களும், நாட்டியக் கலைகளும் முக்கியமாகக் கருதப்பட்டன.

அவற்றை இனிவரும் இளம் சந்ததியினர் அழியாமல் பாதுகாக்க வேண்டும்.

பல்வேறுபட்ட தேவைகளையுடைய பிள்ளைகளை இணைகக வேண்டும். கலை, பண்பாடு, பாரம்பரியம், தமிழ், கலாசாரம் என்பன கலை வடிவத்தில் பெறப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். (எஸ்)

## சமாதான நீதவானாக நியமனம்



(யாழ்ப்பாணம்)

நல்லூர் மத்தியஸ்தசபை உறுப்பினரான எஸ்.சி.செல்வராசா சமாதான நீதவானாக நீதி அமைச்சினால் நியமனம் செய்யப்பட்டதை அடுத்து, யாழ். மாவட்ட நீதவான் அ.பிரேம்சங்கர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.


அரியாலை - நாவலர் வீதியைச் சேர்ந்த இவர் இளைப்பாறிய மக்கள் வங்கி உத்தியோகத்தரும், சமூக சேவையாளருமாவார்.

அரியாலை அபிவிருத்திச் சங்கம், யாழ். மாவட்ட மக்கள் வங்கி ஓய்வூதியர் சங்கம், சித்துப்பாத்தி இந்து மயான அபிவிருத்திச்சபை போன்ற பல்வேறு சமூக அமைப்புகளில் முக்கியமான பதவிகளை வகித்து வரும் இவர், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், பார்வதி வித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவரும், சயன்ஸ் அக்கடமியின் ஆலோசகருமாவார்.



வடமாகாணத்தின் "முழுநிலா முத்து" பௌர்ணமி விழா நேற்று முன்தினம் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற போது வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவனிடம் முழுநிலா முத்து இதழின் முதற்பிரதியை வழங்கி வைப்பதனையும், மாணவிகளின் கலை நிகழ்வையும், கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம். (சுமித்தி)

# ‘காரை.மான்மியம்’ நூல் வெளியீட்டு விழா



(யாழ்ப்பாணம்)

லண்டன் காரை. நலன்புரிச்சங்கமும், கனடா காரை. கலாசார மன்றமும் இணைந்து “முதுசங்களைத்தேடி” எனும் தலைப்பின் ஊடாக காரை மான்மியம் என்னும் நூலின் இரண்டாம் பதிப்பு நூல் வெளியீட்டு நிகழ்வு கடந்த சனிக்கிழமை ஈழத்து சிதம்பர வசந்த மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பண்டிதை செல்வி யோகா சோமசுந்தரம் வெளியீட்டுரை வழங்க, மட்டக்களப்பு பல்கலைக்கழக நூலகர் திருமதி தவமணிதேவி அருள்நந்தி ஆய்வுரையை வழங்கினார்.

தொடர்ந்து, கௌரவவிருந்தினராக கலந்து கொண்ட யாழ். போதனாவைத்தியசாலையின் புற்றுநோய் வைத்திய நிபுணர் ந. ஜெயக்குமாரன் நூலின் முதற்பிரதியை ஈழத்துச்சிதம்பர ஆதீன கர்த்தாக்களுக்கும் தொழிலதிபர் இ.எஸ்.பி. நாகரத்தினத்திற்கும் வழங்கி வைத்தார். (50)

# எளிமையான வாழ்வும் மனத்திடமும் பேராசிரியர் சண்முகதாஸின் சிறப்பு

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் சண்முகதாஸ் அவர்களின் எளிமையான வாழ்வும் எந்தக் கஷ்டம் வந்தாலும் தொடர்ந்தும் யாழ்ப்பாணத்திலேயே வாழ்வது என்ற மனத்திடமுமே அவரை சர்வதேச அரங்கில் முன்னணித் தமிழறிஞராக நிலை நிறுத்தியிருக்கிறது என கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித்தார்.


பேராசிரியர் அ.சண்முகதாஸின் 72 ஆவது அகவை நிறைவையொட்டி அவரது துணைவியார் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய இலங்கைத் தமிழியல் -சில பதிவுகள், நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி என்ற இருநூல் வெளியீட்டு விழா அண்மையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றபோது அவர் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஒரு காலத்தில் பல்கலைக்கழகம் என்பது உயர் கல்வியாளர்களின் பீடம் என்ற நிலைப்பாடு இருந்தது. சமூக இணைப்பு அருகிக்காணப்பட்டது. பேராசிரியர் க.கைலாசபதியின் வருகைக்குப்பின் சமூகமும் பல்கலைக்கழகமும் இணைந்தன.

இவ்விணைப்பைத் தொடர்ந்து முன்னெடுத்து வலுப்படுத்தியவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆவார். இன்று உலக அரங்கில் தமிழியல் சார்ந்த ஆய்வுகளில் முன்னணி வகிக்கும் பேராசிரியர் தம்பதிகள் யாழ்ப்பாணச் சமூகப் பிரதிநிதிகளாக ஆய்வுக்களத்தில் பிரகாசிக்கின்றனர் என்றார்.

நிகழ்வில் நல்லை. ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கினார். பேராசிரியர் சண்முகதாஸின் தலைமாணாக்கரும் யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைத் தலைவருமாகிய பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் வேல். சிவானந்தன் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினர். திருகோணமலைக் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எஸ். ஆனந்



தன், சொல்லின் செல்வர் ஆசிரியர் இரா.செல்வவடிவேல் ஆகியோர் வெளியீட்டுரைகளையும், சரவணை நாகேஸ்வரி வித்தியாலய ஆசிரியர் கு. பாலசண்முகன், கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் எஸ். சந்திரசேகர் ஆகியோர் நயப்புரைகளையும் வழங்கினர். கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் எஸ். லலீசன் நிகழ்வுகளை முன்னிலைப்படுத்தினார். (10)

# 100 வீடுத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு வீடமைப்பு

(ஆனைக்கோட்டை)

வீடமைப்பு அதிகார சபையினால் 2012 ஆம் ஆண்டுக்கான 100 வீட்டுத்திட்டத்தின் கீழ் வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் 36 பேருக்கு இவ்வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது. இதில் வீடு அமைப்பதற்கு ஒரு இலட்சம் ரூபா மானியமாகவும், 2 இலட்சம் ரூபா கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது.

பயனாளிகள் வீடுகளை 3 மாத காலத்திற்குள் கட்டி முடிக்க வேண்டும். அத்துடன் கடனைப் பெறுவதற்கு பிணையாளியாக ஒருவர் கையொப்பமிடப்பட்டபின்னரே கடனைப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்படுள்ளது.

யாழ். மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் இவ்வருடம் கூடுதலான பயனாளிகளுக்கு இவ் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளதாக வீடமைப்பு திட்ட உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (104)

# தேவைக்கு அதிகமான அலங்காரங்களை முச்சக்கர வண்டிகளிலிருந்து நீக்குக

## -யாழ். போக்குவரத்து பொலிஸ் அதிகாரி

(யாழ்ப்பாணம்)

முச்சக்கரவண்டிகளில் தேவைக்கு அதிகமாகப் பொருதப்பட்டிருக்கும் அலங்காரங்களை நீக்குமாறு யாழ்.மாவட்ட போக்குவரத்து பொலிஸ் அதிகாரி கே.ரி.ரி.எஸ். குணசிங்க முச்சக்கர வண்டிச் சாரதிகளிடம் வேண்டுகோள் விடுத்தார்.

நேற்றுமுன்தினம் காலை மத்திய கல்லூரிக்கு அருகில் உள்ள ரிம்மர் மண்டபத்தில் இடம்பெற்ற யாழ். மாவட்ட முச்சக்கர வண்டிகள் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்திலேயே இவ்வேண்டுகோளை விடுத்தார்.

வாடகைக்குச் செல்லும் முச்சக்கர வண்டிகளில் அளவுக்கு அதிகமான சத்தத்துடன் பாட்டுக்கள் ஒலிக்கச் செய்வதும் குற்றமான செயலாகும். வீதி ஒழுங்குகளை மதித்து நடக்க வேண்டும்,முச்சக்கர வண்டிச்சாரதிகள் சீருடை அணிந்து பணியாற்றுவது அவர்கள் செய்யும் பணிக்கு மதிப்பளிக்கும். அதனால் சீருடை அணிவது சிறந்து என்றார்.

இதேவேளை வாடகை முச்சக்கர வண்டிச் சாரதிகளுக்கு சீருடை, அடையாள அட்டை மற்றும் வண்டிகளுக்கு மீற்றர் பூட்டுவது பற்றி ஏற்கனவே யாழ். செயலகம் யாழ். மாவட்ட முச்சக்கர வண்டிகள் சாரதிகள் சங்கத்திடம் கலந்தாலோசித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முரசின் இன்றைய பலன்

(10.01.2012 -செவ்வாக்கிழமை)

கர வருஷம் மார்கழி 25 ஆம் திகதி பிரதமை
பிற்பகல் 1.34 வரை. நட்சத்திரம் பூசம் பின்இரவு 6.23 வரை.
சித்தம்
இராகுகாலம் 3.33 - 5.03 வரை. சுபநேரம் 11.03 - 12.33 மணிவரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் :- | நண்பரால் உதவிகள், தொல்லைகள் அனாவசிய செலவு, உறவினர் வருகை. |
| ரிஷபம:- | தெளிவு, சொத்து பலிதம், உறவினர் வருகை, விருந்துபசாரம். |
| மிதுனம் :- | சலிப்பு, பணப்புழக்கம், அலைச்சல், மனதில் சோர்வு. |
| கடகம்:- | அன்னியர் உதவி, சொத்து சேரும், பிரயாணங்களில் வெற்றி. |
| சிம்மம்:- | இலாபதினம், சொத்துக்கள் குவியும், தொழில்வாய்ப்பு, ஆரோக்கியம். |
| கன்னி :- | அரச நன்மை, அதிர்ஷ்டம், வீண்பயம், பிரயாணத்தில் விரயம். |
| துலாம் :- | அதிகாரம், நண்பர்கள் உதவி, பணவசதி, சொத்துச் சிக்கல். |
| விருச்சிகம்- | நல்ல தகவல், சுபகாரியங்கள், வேலைப் பளு குறையும், திருமணம் கூடிவரும். |
| தனுசு:- | பயணம்தவிர், புதுமுயற்சிகள், குதூகலம், காரிய அனுகூலம். |
| மகரம:- | நண்பர் உதவி, சஞ்சலம், மனதில் குழப்பம், பொன்பொருள்சேரும். |
| கும்பம் :- | தெளிவு, பந்தயங்களால் பலன், சுபச்செலவு, அகால போஜனம். |
| மீனம் :- | பணவரவு, பணப்புழக்கம், பதவி தேடிவரும், இடமாற்றம். |

# வாகன அனுமதிக்கான பத்திரம் வழங்கல்

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் வழங்கப்படும் வாகன அனுமதிப் பத்திரங்களைப் பெறுவோருக்கு இலக்கங்கள் வழங்கப்பட்டு அதன் பின்னரே ஒழுங்கு முறைப்படி பத்திரங்கள் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி இலக்கங்கள் வழங்கப்பட்டும் நாள் ஒன்றுக்கு 150 பேருக்கு மட்டுமே பத்திரங்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் இவ் வாகன அனுமதிப் பத்திரம் பெறும் கால எல்லை எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் செயலகத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (104)


# நிறுவுனர் உதயநாளும் பரிசளிப்பு வைபவமும்

(உடுவில்)

வாழ்வக இல்ல நிறுவுனர் அன்னலட்சுமி சின்னத்தம்பியின் உதயநாளும் பரிசுத்தினமும் நாளை 11ஆம் திகதி புதன்கிழமை வாழ்வகத்தில் காலை 8.45 மணிக்கு நடைபெறவுள்ளது.

வாழ்வகத்தலைவர் ஆர்.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ் பிரதமஅதிதியாகவும், அண்ணாதொழிலக தொழிலதிபர் பொ.நடராசா, முருகேசு சரவணபவன், சுன்னாகம் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி ஜி.டி.ஆர்.கங்கநாத், திருமதி ஸ்ரீமா ஜெயசேகரா ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் ஆறு.திருமுருகன், சின்மயமிஷன் யாக்ரத சைதன்ய சுவாமிகள் ஆகியோர்ஆசியுரையையும் வரவேற்புரையை வாழ்வகப் பொருளாளரும், கொக்குவில் இந்துக்கல்லூரி முன்னாள் அதிபருமான பொ.கமலநாதனும் வழங்கவுள்ளனர். இந்நிகழ்வில் சேவையாளர் கௌரவிப்பில் வைத்தியக்கலாநிதி ம.மகேசன் கௌரவிக்கப்படவுள்ளதுடன், வாழ்வக மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.



ஆனைக்கோட்டை துரைஜயா ஞாபகார்த்தமாக யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்திய அதிகாரிகளினால் துரைஜயா மண்டபத்தில் நடத்தப்பட்ட நீரிழிவு, புற்றுநோய் என்பவற்றுக்கான இலவச மருத்துவ பரிசோதனையில் வைத்திய அதிகாரி, பெண் ஒருவரைப் பரிசோதனை செய்வதையும், அருகில் நாலாம் ஆண்டு மருத்துவ பீட மாணவன் நிற்பதையும் காணலாம். (104)



# ஊடகங்களின் பொறுப்பு குறித்து...




இலங்கையின் ஊடகங்களில் பெரும்பாலானவையும் இன்னும் சார்பு நிலைப்பட்டும், அரசியல் மயப்பட்டும், இனரீதியாகச் சிந்திப்பனவாகவுமே இருக்கின்றன.

யுத்தமோ அதன் விளைவான அழிவுகளோ மக்களின் துயரங்களோ இந்த ஊடகங்களின் சிந்தனை முறையை மாற்றவில்லை. அணுகுமுறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தவுமில்லை.

பதிலாக இன்னும் இனவாதத்தை வளர்க்கக்கூடிய மாதிரியான உணர்ச்சிகரமான விடயங்களையே எடுத்தாள்கின்றன. உணர்ச்சிகரமான மொழியையும் வெளிப்பாட்டையும் கையாள்கின்றன.

இது நிலைமையை பாதக நிலையில் - ஆபத்து நிலையில் வைத்திருக்கவே செய்கின்றது. சமூகங்களை எரிபற்று நிலையில் வைத்திருப்பதே இதில் முக்கிய உபாயமாகும்.

ஏட்டிக்குப் போட்டி, எரிபற்று நிலை என்பது எப்போதும் ஊடகங்களுக்கான தீனியை அதிகமாகத் தரும். அதே வேளை மக்களையும் இந்தத் தீனிகள் அதிகமாகக் கவரும். ஆனால், இந்தத் தீனிகள் மக்களையே தீனியாக்கி விடும். அவர்களறியாமலே அவர்கள் தீனியாகி விடுகின்றனர். இது மோசமானதொரு நிலையே.

இப்படியான அணுகுமுறையும் தந்திரோபயமும்தான் கடந்த காலத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. இப்போதும் ஏறக்குறைய இந்த நிலைதான் தொடருகிறது.

அதாவது, எரிபற்று நிலைக்குரிய அரசியலில் மையங்கொள்ள வைப்பதன் மூலம் மக்களை ஒருவிதமான மயக்க நிலைக்கும் - போதைக்கும் உள்ளாக்கி வைத்திருப்பது இதுவாகும்.

இதனால், மக்களின் ஏராளம் பிரச்சினைகளும் தேவைகளும் கவனிக்கப்படாது திசை திருப்பப்படுகின்றன. மட்டுமல்ல தங்கள் பிரச்சினைகள் தொடர்பாகவும் தங்களுடைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதைப் பற்றியும் மக்களிடம் உருவாகி வரும் புதிய அனுபவங்களும் புதிய நிலைப்பாடுகளும் கண்டு பிடிக்கப்படாது விடப்படுகின்றன..

மக்கள் தங்களுடைய தேவைகளைப் பெறுவதற்கான வழிமுறைகளை மிக இயல்பாகத் தங்களிடம் வைத்திருக்கிறார்க்ள். இது மனிதர்களின் சிறப்பியல்பாகும்.

இந்த இயல்பை மேலும் வலுவூட்டி அவர்களுடைய சிரமங்களைக் குறைப்பதற்கு ஊடகங்கள் முயற்சிப்பது அவசியம். இதற்கு மக்களுடன் அதிக தொடர்புடைய - மக்களில் அதிக கரிசனையுடைய ஊடகவியலாளர்கள் வளர்த்தெடுக்கப்படுவது அவசியம். அப்படி வளர்த்தெடுக்கப்படும் ஊடகங்கள் தங்கள் ஊடகவியலாளர்களை மக்களிடம் செல்லும்படி வற்புறுத்துகின்றன. அவர்கள் மக்களிடம் சென்று அவர்களிடம் இருக்கின்ற உண்மைகளையும் நிலைவரங்களையும் வெளியே கொண்டு வருகிறார்கள்.

எங்கள் மக்களிடம் இருக்கின்ற பல விடயங்களை வெளி ஊடகங்கள் பல தடவைகள் வெளியே கொண்டு வந்திருககின்றன. அதற்குப் பிறகு அவற்றை மேற்கோள்காட்டி நமது ஊடகங்கள் மறுவெளியீடு செய்கின்றன. இது நமது பார் வைக்குறைபாட்டையும் மக்களைப் பொருட்படுத்தா மனோபாவத்தையும் உழைப்பின்மையையும் வெளிப்படுத்துகின்றது.

ஆனால், கடுமையான உழைப்பைச் செலவிடும் ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் மக்களிடம் செல்வதால் - அவர்களுடன் தங்களை ஐக்கியப்படுத்திக் கொள்வதால் தமது ஊடகச் செல்வாக்கை மக்களிடம் வலுவான தாக்கிக் கொள்கிறார்கள்.

ஆகவேதான் தங்களுடைய தரப்பின் குரல் என்றவகையில் அந்த ஊடகங்களை மக்கள் ஆதரிக்கிறார்கள்.


பொதுவாக தங்கள் வாழ்வின் கணிசமான பகுதி நேரத்தையும் உழைப்பின் கணிசமான தொகையையும் அவர்கள் ஊடகங்களுக்காகச் செலவிடுகிறார்கள். தமக்கான குரல்களாகவும் வெளிப்பாட்டுச் சாதனங்களாகவும் ஊடகங்கள் செயற்படட்டும் என்றே மக்கள் கருதுகிறார்கள்.

ஆகவே மக்களின் நம்பிக்கைக்கும் அவர்களுடைய உரிமைகளுக்கும் அவர்களுடைய எதிர்காலத்துக்கும் பொறுப்புச் சொல்ல வேண்டிய கடப்பாடும் பண்பும் ஊடகங்களுக்குரியது.

இலங்கையில் இத்தகைய பண்பில் இயங்குகின்ற ஊடகங்களைப் பட்டியலிட்டால் நமக்கு எத்தனை ஊடகங்கள் தேறும்?

நன்றி : **naalupakkam.blogspot.com**

# விரல் வளர்க்கலாம்!



சீனாவின் லியோனிங் மாகாணத்தை சேர்ந்த இளைஞர் வாங் யாங் சூன். மரச் சாமான்கள் செய்யும் தொழிலாளி. சமீபத்தில் வாளால் மரத்தை அறுத்துக் கொண்டிருக்கும் போது, இவரது கை விரல் ஒன்று, பாதிக்கு மேல் துண்டிக்கப்பட்டது. அவரை பரிசோதித்த மருத்துவர்கள், துண்டிக்கப்பட்ட விரலால், இனி எந்த பயனும் இல்லை என்று கூறி விட்டனர்.

அந்த விரலின் எலும்பு மட்டுமே சேதமடையாமல் இருப்பதாகவும், தசை உள்ளிட்ட மற்ற பாகங்கள் முழுவதும் சேதமடைந்து விட்டதாகவும் தெரிவித்தனர்.

அப்போது தான் ஆபத்பாந்தவனாக வந்தார், டாக்டர் ஹுவாங். விரலின் சேதமடைந்த பகுதியை, வாங்கின் மற்ற உடல் பாகங்களைக் கொண்டே, வளர்ச்சியடையச் செய்ய முடியும் என்றார் அவர்.

இதன்படி, துண்டிக்கப்பட்ட விரலை, வாங்கின் வயிற்றில் உள்ள தசையுடன் பொருத்தி, அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. வயிற்றில் உள்ள தசை, துண்டிக்கப்பட்ட விரலுடன் பொருத்தப்பட்டுள்ளதால், துண்டிக்கப்பட்ட விரலுக்கு, வழக்கம் போல் ரத்த ஓட்டம் கிடைக்கும் என்றும், விரலில் சேதமடைந்த பகுதியில் தசைகள் வளரத் துவங்கும் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார் டாக்டர் ஹுவாங்.

ஓரளவு வளர்ச்சி அடைந்ததும், வயிற்றில் இணைக்கப்பட்டுள்ள விரல், அறுவைச் சிகிச்சை மூலம் துண்டித்து விரலில் பொருத்தப்படும். இதன்பின், வாங் வழக்கம் போல் செயற்படலாம். துண்டிக்கப்பட்ட விரல், ஏற்கனவே இருந்தது போல் இல்லாவிட்டாலும், ஓரளவு முழுமையாக இருக்கும் என்றும், மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

தாவரங்கள் வளர்ப்பதைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறோம். துண்டிக்கப்பட்ட விரலையே வளர்க்கலாம் என்று கண்டுபிடித்திருப்பது விந்தைதான்.

# பிழையின்றித் தமிழ் எழுதுவோம்

**மருந்துகடை - மருந்துக்கடை**

“விருந்தும் மருந்தும் மூன்று நாளுக்குத்தான்” என்பது பழமொழி.

பெரும்பாலான மருத்துவர்கள் மூன்று நாளுக்குத்தான் மருந்து தருவர். மருந்து என்பது நோயைக் குணப்படுத்தும் பொருள். அந்த மருந்தைத்தான் சொல்கிறோம்.


கடை என்பதற்குப் பல பொருள்கள் இருந்தாலும் பொருள்களை விற்பனை செய்யும், மருந்துகளை விற்பனைசெய்யும் கடையைத்தான் நாம் இங்கே பார்க்கிறோம்.

மருந்துகள் விற்கும் கடையை மருந்துக்கடை என்றுதான் சொல்லவேண்டும், எழுதவேண்டும். ஒரு மருந்துக்கடையின் பெயர்ப் பலகையில் “மருந்துகடை” என்று எழுதப்பட்டிருந்ததைப் பார்த்தேன்.

மருந்துகடை என்றால் மருந்தைக் கடை என்று பொருள்.

பரியாரிமார், சிலவேளை மருந்துக்கடையிலும் கூட மாத்திரையைச் சின்ன உரலில் போட்டு இடித்துத் தூளாக்கித் தாளில் மடித்துத் தருவதுண்டு.
அப்படிச் செய்யும் செயல்தான் மருந்துகடை.

*மருந்துகடை - மருந்தைக் கடை*
*மருந்துக்கடை - மருந்து விற்கும் கடை*




***ஜெயலலிதா பேச்சு : நான் ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மக்களுக்கு நன்மை செய்வேன்.***

***கருணாநிதி பதில் : அம்மையார் ஆட்சியில் இல்லாமல் இருப்பதே மக்களுக்கு செய்யும் பெரிய நன்மை. அதைத்தான் அவர் இப்படி கூறுகிறார்.***

# மாற்றுக் கருத்துக்களைப் பரிசீலியுங்கள்!

ஒரு இனத்திற்கோ அல்லது விடுதலைப் போராட்டத்திற்கோ தலைமை தாங்குபவர்கள் தீர்க்கதரிசனமாக சிந்திக்க முடியாது விட்டாலும், மாற்றுக் கருத்துக்களுக்கு மதிப்பளித்து அதில் கூறப்பட்ட விடயங்கள் இனத்தின் எதிர்காலத்திற்கு ஏற்றதாக இருக்கின்றதா என்று ஆய்வு செய்யக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.



முதலமைச்சர் தேர்தலில் தனக்கு எதிராக போட்டியிட்டவரை அழைத்து தனது ஆட்சியில் அமைச்சர் பதவி கொடுத்த காமராஜரின் பண்பு ஒரு உதாரணம். முதலமைச்சர் ஆனதும், த்ன்னை எதிர்த்து முதல்வர் வேட்பாளராக போட்டியிட்ட சி.சுப்பிரமணியத்தையும், அவரது பெயரை முன்மொழிந்த பக்தவத்சலம் அவர்களையும் அழைத்து காமராஜர் அமைச்சர் பதவிகள் கொடுத்தார். ஏன காமராஜர் அவ்வாறு நடந்து கொண்டார்? திறமையும் தூய்மையும் இருந்தால் ஒருவன் தன்னை எதிர்த்தாலும் தமிழ் சமூகத்துக்கு பயன்படுவான் என்பதினால்.

இவ்வாறு நடந்துகொள்ளாது மாறுபட்டு சிந்திப்பவர்களை “மண்டையில் போட்டால் அல்லது போடும்படி தூண்டினால் எப்படி ஆற்றலும் அறிவும் எமது சமூகத்தில் வளரும் எமது சமூகத்தில் எப்படி அறிவாளிகள் தோன்றுவார்கள்.” எமது சமூகத்தில் அறிவாற்றலில் பாரிய வெற்றிடம் ஏற்பட்டு உள்ளது என்பதினை யாரும் மறுக்க முடியுமா?

அதற்காக கல்விமான்கள் எல்லோருக்கும் அரசியல் தெரியும் என்றோ, சிந்தனை ஆற்றல் உள்ளவர்கள் என்றோ நான் சொல்ல வரவில்லை. கல்விமான்கள் பொதுவாக அவர்களின் கல்வி சார்ந்த விடயங்களிலேயே திறன் கொண்டவர்களாக இருப்பார்கள். படித்தவர்கள் படிக்காதவர் என்று பாரபட்சம் காட்டக்கூடாது என்பதும், எல்லோரும் சமமாக நடத்தப்பட வேண்டும் என்பதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தாலும், ஒரு இனத்தின் தலைவர்களாக இருப்பவர்கள் தொலை நோக்குடையவர்களாகவும் தீர்க்கதரிசனத்துடன் செயற்படுவர்களாகவும் இருக்க வேண்டும்.

புலிகளை தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு அவர்களின் அனைத்து செயல்களையும் நியாயப்படுத்தி வந்த தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரும் தொலை நோக்குடையவர்களாகவோ, தீர்க்கதரிசிகளாகவோ இருக்கவில்லை. அது மட்டும் அல்லாது இத்தனை அழிவுகளை மக்கள் எதிர்கொண்ட நிலையிலும், தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைமை தம்மைத் தக்க வைத்துக்கொள்ளும் வகையில் காய்நகர்த்தும் நடவடிக்கைகளையே மேற்கொண்டு வருகின்றது.

சம்பந்தர் மற்றும் சேனாதிராஜா போன்றவர்கள் அன்றும் பொறுப்புடைய தலைவர்களாக இருக்கவில்லை. இன்றும் தாம் சார்ந்த தமிழரசுக் கட்சியினை பலப்படுத்தி தம்மை முன்னிலைப்படுத்தும் திட்டங்களினூடே செயற்பட்டு வருகின்றனர். தன்னினத்தின் பிரச்சினையினை முன்னிலைப்படுத்தாது, தம்மை முன்னிலைப்படுத்தும் எந்த தலைமையும் நிலைத்து நின்றதாக வரலாறு இல்லை என்பதோடு, இவ்வகையானவர்களினால் இனத்திற்கு எவ்வித நன்மை ஏற்பட்டதும் இல்லை. இதற்கு உதாரணமாக நாம் வேறு நாடுகளின் வரலாற்றினை பார்க்க வேண்டிய அவசியம் இல்லை.

*- அர்ச்சுணன் கட்டுரையிலிருந்து*

## சொன்னார் கேட்கிறோம்

"**க**லாசார சீரழிவுகள் மூலம் தமிழ் இனத்தை அழிக்கும் முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது கமலவாசனின் கல்விச் சாதனை...

புகழ்பெற்ற நகரப் பாடசாலைகளில் கற்றுச் சாதனை படைக்கலாம் என்பதையும் மாற்றிக் காட்டியவர் கமலவாசன்."

மேற்கண்டவாறு கூறியவர் வேறு யாருமல்ல கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன். ஐயாவிடம் ஒரு கேள்வி. கலாசார சீரழிவிற்கும், கமலவாசனின் கல்விச் சாதனைக்கும் தொடர்புதான் என்ன? உண்மையில் குறித்த மாணவன் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையத் தவறிய நிலையில் அதனையே சவாலாக எடுத்து கல்வி கற்று தேசிய ரீதியில் முதலிடம் பெற்றவர். அவரது இந்தச் சாதனைக்காக நீங்கள் அவரைப் பாராட்டுவதை விடுத்து, அவரது கல்விப் பெறுபேற்றுக்குள் ஏனய்யா உங்களது அரசியலை நுழைக்கிறீர்கள்?

**அடுத்து,**

நகரப் பாடசாலைகளை விடவும், கிராமப்புறப் பாடசாலைகளில் கல்வி கற்றால் சாதனை படைக்கலாம் என்று கூறியுள்ளீர்கள். நல்லது வரவேற்கத்தக்கது. ஆனால், இதே கேள்வியை உங்களிடம் திரும்பிக் கேட்கலாம்தானே? இங்கே பல பாடசாலைகள உள்ளபோது நீங்கள் ஏனய்யா உங்களது மகளை கொழும்பிலுள்ள பிரபல பாடசாலையொன்றில் சேர்த்துள்ளீர்கள். அவரைப் பிடித்து, இவரைப் பிடித்து அமெரிக்காவிற்கு அனுப்பிய இரண்டு மாணவிகளில் ஒருவர் உங்களது மகளாமே?

இதனையும்விட ஜனாதிபதி கலந்து கொண்ட நிகழ்வொன்றில் உமது மகளும் கலந்து கொண்டபோது யாழ்ப்பாணம் எப்படி உள்ளது என ஜனாதிபதி கேட்டபோது, உமது மகள் யாழ்ப்பாணம் எனக்குத் தெரியாது என்றதாகவும், ஜனாதிபதியுடனான உங்களது சந்திப்பின் போது, மகளை யாழ்ப்பாணம் சுற்றிக் காட்டுமாறு கூறியதாகவும் செய்திகள் வெளிவந்தனவே அது உண்மைதானே?

அவ்வாறெனில் ஊருக்கடி உபதேசம்

உனக்கில்லையடி மகளே கதைதானா? - **சிவகரன்**

## விமானத்திற்கு முன்பு!



**ஓ**ர்வில் ரைட் என்பவரே முதலில் வானத்தில் பறப்பதற்கு வழி கண்டுபிடித்தவர். இவரது சின்னஞ்சிறு பருவத்திய வாழ்வு வறுமை நிறைந்தது.

இவர் / சிறுவனாக இருந்தபோது தெருவில் கிடக்கும் துருப்பிடித்த இரும்புகளையும் எலும்புத் துண்டுகளையும் பொறுக்கி விற்று வாழ்வு நடத்தி வந்தவர். அதன் பின்னர் எத்தனையோ தொழில்கள் தொடங்கினார். அத்தனையிலும் தோல் வியேதான் மிஞ்சியது. ஒருநாள் இவர் நூல் நிலையம் சென்றிருந்தார். அங்கே அவர் படித்த புத்தகத்தில் ஒரு மனிதன் தனக்கு இறக்கைகள் எதுவுமின்றி காற்றாடி போன்ற ஒன்றின் துணையால் வானத்தில் பறந்து சென்றதாக வர்ணிக்கப்பட்டிருந்தது.

இதைப் படித்ததும் ரைட்டின் உள்ளத்திலும் மனிதன் ஏன் வானத்தில் பறக்கக்கூடாது என்ற கேள்வி எழுந்தது. இதைக்குறித்து தம் சகோதரருடன் ஆலோசனையில் ஈடுபட்டார். ஆலோசனை ஆராய்ச்சி ஆனது. பல சோதனைகளை இச்சகோதரர்கள் செய்து பார்த்தனர். முடிவில் 1903 ஆம் ஆண்டு டிசம்பர் 17 ஆம் நாள் வானத்தில் பறந்தனர். அவர்களால்தான் விமானம் கண்டுபிடிக்கப் பட்டது.

## நாடகம் தொடரும்....

**நா**ற்பது ஆண்டுகளுக்கு முன் நடந்த சம்பவம் இது. பெங்களூர் நாடக அரங்கு ஒன்றில் ஒரு நாள் மாலை...

நாடகம் துவங்கும் நேரம். அணைந்த விளக்குகள் திடீரென்று மீண்டும் எரிய ஆரம்பித்தன. அரங்கில் ஒரே சலசலப்பு. காரணம், முதல் வரிசையில் அமர்ந்திருந்த ஒரு கிழவர் திடீரென்று கீழே விழுந்து விட்டார். ஒலி பெருக்கியின் மூலம், "தயவு செய்து அரங்கில் யாரேனும் டாக்டர் இருந்தால் வரவும்..." என்று கோரப்பட்டது.

விரைந்து வந்த டாக்டர் ஒருவர், கிழவரை பரிசோதித்தார். பொலிஸ் அதிகாரிகள் சிலரும் அரங்கில் நுழைந்தனர்.

டாக்டரும், பொலிஸ் அதிகாரிகளும் கலந்து பேசிய பின்னர், ஒலி பெருக்கி மீண்டும் ஒலித்தது. "இந்தப் பெரியவர் இறந்து விட்டார். பொலிஸ் விசாரணை முடியும் வரை அரங்கிலுள்ள யாரும் வெளியே போக வேண்டாம்!"

அரங்கத்தில் ஒரே சலசலப்பும், குழப்பமும் நிலவின. சில வினாடிகள் கழித்து மீண்டும் ஒலித்தது ஒலி பெருக்கி... "இதுவரை நீங்கள் பார்த்தது, பெங்காலி அசோசியேஷன் அளிக்கும் நாடகத்தின் முதல் காட்சி. அடுத்த காட்சி உடனே தொடரும்!"




**ம**ந்திரிகுமாரி தமிழ் இலக்கிய மரபிலிருந்து உருவானதொரு திரைப்படம்.

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான குண்டலகேசியே இதன் மூலம். மூன்று தமிழ்காப்பியங்கள் பெண்களை முக்கிய கதாபாத்திரமாகக் கொண்டு உருவாக்கப்பட்டவை. கண்ணகி, மணிமேகலை, குண்டலகேசி ஆகிய மூன்று பெண்களும் தனித்துவமானவர்கள். குண்டலகேசி ஒரு பௌத்த காப்பியம். அழிந்து போன அந்தக் காவியத்தின் பத்தொன்பது பாடல்கள் மட்டுமே இன்று வாசிக்க கிடைக்கின்றன. தேரிகதையில் வரும் புத்த பிக்குணியான குண்டலகேசியின் கதையை அடிப்படையாகக் கொண்டு இக்காப்பியம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

தம்மபதத்தில் இக்கதை பற்றிய குறிப்பு இடம்பெற்றுள்ளது.

மனம் திருந்திய திருடனைப் பற்றிய கதைகள் பௌத்த கதைமரபில் காணப்படுகிறது. அந்த வகையின் தொடர்ச்சியே குண்டலகேசி காப்பியம். குண்டலகேசி என்றால் சுருண்ட கூந்தலை உடையவள் என்பதே பொருள்.

குண்டலகேசி காப்பியத்திலிருந்து மந்திரிகுமாரி திரைக்கதை எப்படி மாறிவந்திருக்கிறது என்பதை அறிந்து கொள்ள அதன் காப்பியக் கதையை அறிய வேண்டியது அவசியம்.

குண்டலகேசி காப்பியம் திருடனைக் காதலித்த ஒரு இளம்பெண்ணைப் பற்றியது. பூம்புகாரில் உள்ள செல்வமிக்க வணிக குடும்பத்தில் பிறந்த அவள், தோழிகளுடன் பூப்பந்து விளையாடிக் கொண்டிருந்த போது பந்து தவறிப்போய் சாலையில் சென்று கொண்டிருந்த ஒரு ஆணின் மீது விழுகிறது. குண்டலகேசி குனிந்து பார்க்கும் போது அவனும் திரும்பிப் பார்க்க, முதல்பார்வையில் அவளுக்கு அந்த ஆணைப் பிடித்துப் போய்விடுகிறது. அவன் யாரென விசாரிக்கத் துவங்குகிறாள்.

அவன் பெயர் காளன், மந்திரியின் மகன் என்றும் அவன் ஒரு திருடன் கொலையாளி, கொள்ளைக்காரன் என்பதால் மரணதண்டனை நிறைவேற்றக் கொண்டு போகப்படுகிறான் என்றும் தகவலை அறிகிறாள்.

பெற்ற தந்தையே இந்த தண்டனையை விதித்து அவனைக் கொல்ல அனுமதித்துள்ளார் என்பது அவளை வியப்பூட்டுகிறது.

பூம்புகாரில் இந்திரவிழா துவங்கிய நாட்களில் கொலைத்தண்டனை நிறைவேற்ற மாட்டார்கள். ஆகவே அவள் இதைப் பயன்படுத்தி திருடனை விடுவித்து மணம் செய்து கொள்ள ஆசைப்படுகிறாள் மகளின் பிடிவாதத்தை கண்ட அவளது தந்தை அரசனிடம் சென்று காளனை விடுவிக்கும்படி கேட்கிறார். அவன் எடைக்கு எடை பொன்னும் எண்பத்தியொரு யானைகளும் தந்து காளனை விடுவிக்க வைத்து மகளுக்கு திருமணம் செய்து வைக்கிறார்.

காளனோடு குண்டலகேசி இன்பமாக வாழத் துவங்குகிறாள். காவிரியில் புதுவெள்ளம் வரும்போது புனலாட அவர்கள் கிளம்புகிறார்கள். காளன் வேண்டுமென்றே குண்டலகேசியின் குங்குமச்சிமிழை எடுத்து ஒளித்து வைக்கிறான். அதைக் காணாமல் தேடி அலைகிறாள் குண்டலகேசி. காளன் வேடிக்கை முடிந்து எடுத்து தந்துவிடவே உங்கள் கள்ளத்தனம் மாறவேயில்லையே என்று கேலியாக சொல்கிறாள். அது அவன் மனதில் தன்னைக் குத்திக்காட்டுவது போல படுகிறது. தன் கடந்தகாலத்தை அவள் சொல்லிக்காட்டுவதாக நினைத்துக் கொண்டு அவளைக் கோவித்துக் கொள்கிறான்.

வீடு வந்த போதும் அவன் மனதில் குண்டலகேசியின் வார்த்தைகள் மறையவேயில்லை. மறுநாள் அவளைக் கொல்ல முடிவு செய்து மலைஉச்சியில் உள்ள தெய்வத்தை வழிபட துணை வர வேண்டும் என்று அழைத்துப் போகிறான். அங்கே காளன் தன்னைக் கொல்ல முயற்சிப்பதை அறிந்து அவனைத் தந்திரமாக கீழே தள்ளி கொன்றுவிடுகிறாள் குண்டலகேசி. பிறகு தானும் குதித்து உயிர்விட முயற்சிக்கிறாள். அவளை ஒரு வேடுவப்பெண் தடுத்துக் காப்பாற்றுகிறாள். அதன்பிறகு அவள் பௌத்த சமயத்தில் சேர்ந்து துறவியாகி பல இடங்களில் தன் அறிவுத் திறனால் வாதிட்டு, பௌத்த சமயத்தைப் பரப்பி ஞானம் அடைந்தாள் என்கிறது காப்பியம்.

காப்பியத்தின் சாரத்தை மட்டுமே திரைக்கதையாகக் கொண்டு சுவாரஷயமான புனைவை மேற்கொள்கிறது திரைப்படம். கருணாநிதியால் நாடகமாக எழுதப்பெற்று பல ஊர்களிலும் நடத்தப்பட்ட மந்திரிகுமாரியை மார்டன் தியேட்டர்ஸ் சுந்தரம் திரைப்படமாக்க முன்வந்தார்.

முல்லை நாட்டு மன்னரின் மகள் ஜீவரேகாவும் (ஜி.சகுந்தலா) மந்திரியின் மகள் அமுதாவும் (மாதுரிதேவி) தோழிகள். தளபதி வீரமோகனை (MGR) ராஜகுமாரி காதலிக்கிறாள். மன்னரை ஆட்டிப்படைக்கும் ராஜகுருவின் (எம்.என்.நம்பியார்) மகன் பார்த்திபன் (எஸ்.ஏ.நடராஜன்) ஒரு திருடன், அதிலும் ராஜகுருவின் மகன். 'கொள்ளையடிப்பது ஒரு கலை' என்பது அவனது கொள்கை.

பார்த்திபனை அவனது சுயரூபம் அறியாமல் மந்திரிகுமாரி அமுதா மணக்கிறாள். கொள்ளையர்களைப் பிடிக்கும் முயற்சியில் ராஜமோகன் ஈடுபட்டு, பார்த்திபனைப் பிடித்து அரச சபையின் முன் நிறுத்துகிறான். ஆனால் ராஜகுருவின் சூழ்ச்சியால் பார்த்திபன் விடுவிக்கப்பட்டு ராஜமோகன் குற்றப் பழிக்கு ஆளாகிறான்.

தன் கணவன் கொள்ளைக்காரன் என்பதை அறிந்த அமுதா அவனைத் திருத்த முயற்சி செய்கிறாள்.

ஆத்திரத்தில், அவளைக் கொல்ல முடிவு செய்த பார்த்திபன் "வாராய் நீ வாராய்" என்று பாட்டுப்பாடி, மலை உச்சிக்கு அழைத்துச் சென்று தள்ளிவிட முயற்சிக்கும் போது, அவனைக் கீழே தள்ளி அமுதா கொன்றுவிடுகிறாள். ராஜகுருவாக வரும் நம்பியாரின் வழியே சனாதன அரசியல் சுட்டிக்காட்டப்படுகிறது.

காப்பியக்கதையை அன்றைய தமிழக அரசியல் நிகழ்வுகளின் எதிரொலிப்பு போல உருமாற்றியதே திரைக் கதையின் தனிப்பலம். கருணாநிதியின் வசனங்கள் அதற்கு கூடுதல் துணை செய்கின்றன. மந்திரிகுமாரி காப்பியத்தில் இருந்த பௌத்த கூறுகள் திரைப்படத்தில் பெரிதும் அகற்றப்பட்டு அந்த இடத்தில் பிராமண ஆதிக்கமும் அதன் எதிர்ப்பு அரசியலும் முதன்மைப்படுத்தப் பட்டிருக்கிறது. காட்சிப்படுத்தபட்ட விதம், நடிப்பு, பாடல்கள், கூர்மையான வசனங்கள் என்று பலவிதங்களிலும் மந்திரிகுமாரி முக்கியமான ஒன்றாக விளங்குகிறது.

குற்றம் என்று அடையாளம் காணப்பட்டவற்றை மறுதலிக்கும் குரலை படம் முழுவதும் நாம் கேட்க முடிகிறது. ஒரு இடத்தில் ராஜகுரு தன் மகனிடம் கொள்ளை அடிப்பதை நிறுத்தச் சொல்கிறார். அவன் பதில் சொல்கிறான்: "கொள்ளையடிப்பது ஒரு கலை. வில்லில் இருந்து புறப்படும் அம்பு எத்தனையோ உயிர்களைக் குடிக்கிறது. ஆனால், வில்வித்தை என்ற பெயரால், கொலை அங்கே கலையாகிறது. ஓவியக் கலைஞன், பெண்ணின் அங்கங்களை வரைந்து காட்டுகிறான். ஓவியக் கலையின் பெயரால், காமம் அங்கே கலையாகிறது. அதுபோல இதுவும் ஒரு கலைதான்!"

அதைக்கேட்டு ஆதங்கமாக ராஜகுரு கேட்கிறார், "மகனே இந்தக் கலையை விட்டுவிடக் கூடாதா?"

அதற்கு பார்த்திபன் உற்சாகமாக பதில் சொல்கிறான்: "கொக்கு மீனைப் பிடிக்காமல் இருந்தால், பாம்பு தவளையை விழுங்காமல் இருந்தால், நானும் என் கலையை விட்டு விடுவேன்." இப்படி கொலையைக் கலையாக்கும் காரசாரமான விவாதம் இன்றைய சமகால உண்மைகளுக்கு நெருக்கமாகவே இருக்கிறது.

- **எஸ்.ராமகிருஷ்ணன்.**

### சம்பளப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு இல்லையேல்

# பாரிய தொழிற் சங்கப் போராட்டம்; பல்கலை.கல்விசாரா ஊழியர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

சம்பளப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு வழங்கப்படாத பட்சத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதியின் பின்னர் பாரிய தொழிற்சங்க நடவடிக்கையொன்றை முன்னெடுக்கவுள்ளதாக பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கல்விசாரா ஊழியர்களின் தொழிற்சங்கத்துடன் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எட்டபபட்டதாக பல்கலைக்கழக தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் விஜயதிலக ஜயசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று கல்விசாரா ஊழியர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளும்போது தொழிற்சங்கத்தின் கருத்துக்களை உள்வாங்கவும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை சம்பளப் பிரச்சினை தொடர்பிலான கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 17 ஆம் திகதி தொழிங்சங்க நடவடிக்கையொன்றை முன்னெடுக்கவுள்ளதாக பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்க சம்மேளனத்தின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி மஹீம் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன தெரிவிக்கையில், கடந்த வெள்ளிக்கிழமை கல்விசாரா ஊழியர்களின் சம்பளம் தொடர்பிலான சுற்றறிக்கை தயாரிக்கப்பட்டது. இந்தச் சுற்றறிக்கை உரிய தரத்தினைக் கொண்டிருக்கவில்லை எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதால், அது தொடர்பான சில திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

நாளை புதன்கிழமை இந்தச் சுற்றறிக்கை வெளியிடப்படும். இதனால் எவ்வித பிரச்சினைகளும் ஏற்படாது எனவும் தெரிவித்தார்.

## 10000 ஹோட்டல்களில் சுகாதாரப் பரிசோதனை

(கொழும்பு)

உணவு விற்பனை நிலையங்களைத் தரப்படுத்தும் திட்டத்தின் கீழ், இதுவரை பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் பேக்கரிகளை பரிசோதனை செய்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதற்கமைய 'யு' தரத்தில் வகைப்படுத்துவதற்கான ஆயிரம் உணவகங்கள் இனங்காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் சுற்றாடல் மற்றும் தொழில் சுகாதார நடவடிக்கைகள் பணிப்பாளர் டாக்டர் ஆனந்த ஜயலால் தெரிவித்துள்ளார்.

உணவகங்களைத் தரப்படுத்தும் நடவடிக்கை நாடு பூராகவும் இடம்பெறுகின்றது. இதன்போது குறைபாடுகள் உள்ள நிலையங்களும், சிறந்த முறையில் பராமரிக்கப்படும் நிலையங்களும் அடையாளப் படுத்தப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# அதிவேக நெடுஞ்சாலையில் வாகனங்கள் மீது தாக்குதல்

(கொழும்பு)

தெற்கு அதிவேக பாதையில் பயணிக்கும் வாகனங்கள் மீது கற்கள் உள்ளிட்ட பொருட்களால் தாக்குதல் மேற்கொள்கின்றவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகன தெரிவித்துள்ளார்.

குறித்த பாதையில் வேகமாகப் பயணிக்கும் வாகனங்கள் மீது தாக்குதல் மேற்கொண்டுவிட்டு மறைந்து கொள்ளும் நபர்கள் தொடர்பாக தற்போது தகவல்கள் கிடைத்துள்ளது.

நேற்றுமுன்தினம் இவ்வாறான சம்பவம் ஒன்று, முதல் நுழைவாயிலிலிருந்து 5 கிலோ மீற்றர் தொலைவில் இடம்பெற்றுள்ளது. இதன்போது, மோட்டார் வாகனமொன்றில் பயணித்த பெண்ணொருவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சில தினங்களாக இது போன்ற பல முறைப்பாடுகள் தமக்குக் கிடைத்து வருவதாகவும், இது தொடர்பாக விசாரணைகள் நடத்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வருமானம் குறைவு; தொலைபேசி பாவனை அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் குறைந்த வருமானம் பெறுபவர்களில் 88 வீதமானோர் கையடக்கத் தொலைபேசிப் பாவனையில் ஈடுபடுவதாக புதிய ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது.


இவர்களில் 62 வீதமானோர் அவற்றைத் தொடர்ந்தும் பயனபடுத்துவதில்லை என்பது இதிலிருந்து கண்டறியப்பட்டுள்ளது.

ஆசியாவில் நாளாந்தம் இரண்டு மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் குறைந்த வருமானம் பெறும் ஆறு நாடுகளின் தகவல் தொழிநுப்ப பயனபாடு தொடர்பில் LEARNASIA நிறுவனம் ஆராய்ந்துள்ளது.

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து மற்றும் இலங்கை உள்ளிட் நாடுகள் இவற்றில் அடங்குகின்றன.

இதேவேளை குறைந்த வருமானம் பெறுபவர்கள் தகவல் பரிமாற்றத்திற்காகத் கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்துவது கண்டறியப்பட்டுள்ளது. இவர்களுள் 49 வீதமானவர்கள் சொந்தமாகவே கையடக்கத் தொலைபேசிகளை வைத்திருக்கின்றமையும் தெரியவந்துள்ளது.

# புத்தரின் மஹியங்கனை விஜயம்; 2600 ஆவது வருட நிறைவு நிகழ்வு



(கொழும்பு)

புத்த பகவா்ன் இலங்கைக்கு வருகை தந்த 2600 ஆவது வருட நிறைவு தின நிகழ்வுகள் மற்றும் புத்தபகவானின் புனிதகேசம் காட்சிப்படுத்தப்பட்ட நிகழ்வும் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் மஹியங்கனை ரஜமகா விகாரையில் நடைபெற்றது. இந்த நிகழ்வுகளில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.

மஹியங்கனைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, மஹியங்கனை ரஜமகா விகாரையில்-நடைபெற்ற சமய வழிபாடுகளில் கலந்து கொண்டதுடன், புத்தபகவானின் புனித கேசத்தை மக்கள் தரிசனத்துக்காகக் காட்சிப்படுத்தும் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். புனித கேசம் பங்களாதேஷின் சித்தகொங் பௌத்த விகாரையிலிருந்து இலங்கைக்கு எடுத்துவரப்பட்டது. புத்தபகவானின் இலங்கை வருகையைக் குறிக்கும் வகையில் இப் புனிதகேசம் மக்கள் தரிசனத்துக்காகக் காட்சிப் படுத்தப்பட்டது.

புத்தபகவான் இலங்கை வருகையின் போது மஹியங்கனை ரஜமகா விகாரைக்கே விஜயம் செய்துள்ளார். அதனைக் குறிக்கும் பல்வேறு நிகழ்வுகள் தொடர்ந்து மூன்று தினங்களுக்கு மஹியங்கனையில் நடைபெறவுள்ளன.

இதனையொட்டி மஹியங்கனை நகரம் மற்றும் அதனையொட்டிய பிரதேசங்கள் பலத்த பாதுகாப்புக்கு உட்பட்டிருந்ததுடன், இலட்சக்கணக்கில் திரண்டு வரும் மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான பொதுவசதிகள் அனைத்தும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. 2600 வருட புத்த ஜயந்தியையொட்டி ரஜமகா விகாரையில் விசேட ஞாபகார்த்த முத்திரையொன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த விசேட நிகழ்வுகளில் ஜனாதிபதியுடன் அமைச்சர்கள், பௌத்த மதத் தலைவர்கள், நாடாளுமனற உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## மொறட்டுவையில் வர்த்தகர் கடத்தல்

(கொழும்பு)

மொறட்டுவ பகுதியில் வாகனத்தில் வந்த இனந்தெரியாத குழுவினர் வர்த்தகர் ஒருவரை கடத்திச் சென்றுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாத்துவ பகுதியைச் சேர்ந்த வர்த்தகரான டொனால்ட் ரஞ்சித் என்ற நபர் கடத்திச் செல்லப்பட்டதாக முறைப்பாடு கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார.

குறித்த வர்த்தகர் வாத்துவவையில் இருந்து தமது வாகனத்தில் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோதே கடத்திச் செல்லபபட்டுள்ளார். கடத்தப்பட்ட வர்த்தகர் தொடர்பில் மூன்று நாட்களாகியும் இதுவரை எவ்வித தகவலும் கிடைக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 15 ஆவது பட்டமளிப்பு விழா



(மட்டக்களப்பு)

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் 15 ஆவது பட்டமளிப்பு விழா பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் யோகா. இராசநாயகம் தலைமையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு-வந்தாறுமூலை வளாகத்தில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம அதிதியாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க கலந்து கொண்டார்.

அதிதிகள் வரவேற்கப்பட்டதைத் தொடர்ந்து விழா ஆரம்பமானது. திருகோணமலை, மட்டக்களப்பு, வந்தாறுமூலை வளாகங்களைச் சேர்ந்த மாணவர்கள் பட்டமளிப்பு விழாவின் போது பிரசன்னமாகியிருந்தனர்.

கலை, விவசாயம், விஞ்ஞானம், வர்த்தகம், முகாமைத்துவம் ஆகிய துறைகளில் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்த மாணவர்கள் இதன் போது பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டனர்.

## சர்வதேச வரவேற்பை அதிகரிக்க பிளாஸ்ரிக் கூடைகளில் தேயிலை

(கொழும்பு)

தேயிலைக் கொழுந்து போக்குவரத்தின் போது பிளாஸ்டிக் கூடைகளை பயன்படுத்துவதை கட்டாயமாக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இலங்கை தேயிலையின் தரத்தை பாதுகாத்துக்கொள்ளும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக பெருந்தோட்டக் கைத்தொழில் பிரதி அமைச்சர் ஏர்ல் குணசேகர தெரிவித்துள்ளார். இது தொடர்பிலான சட்டமூலம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளது.

தேயிலைக் கொழுந்து போக்குவரத்தின் போது கட்டாயமாக பிளாஸ்டிக் கூடைகள் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற நடைமுறை இன்னும் ஓரிரு மாதங்களில் அமுலுக்கு வரும்.

இந்த நடவடிக்கை காரணமாக இலங்கையின் தேயிலை உற்பத்தி தொடர்பில் சர்வதேச சமூகத்தில் நிலவும் வரவேற்பு மேலும் அதிகரிக்கும். தேயிலைக் கொழுந்து போக்குவரத்தின் போது பிளாஸ்டிக் கூடைகள் பயன்படுத்தப்படுவதனால் வீண் விரயமாகும் கொழுந்தின் அளவை குறைத்துக்கொள்ள முடியும்.

தரமான முறையில் உற்பத்தி செய்யப்படும் தேயிலைகளை சந்தைக்கு விநியோகிக்கும் போது அதிக விலையைப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உரிமைகள் மீறல்

(கொழும்பு)

2011ஆம் ஆண்டு தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கான வேதனம் தொடர்பிலான கூட்டு உடன்படிக்கை கைச்சாத்தானதைத் தொடர்ந்து, தொழிலாளர்களின் பல்வேறு உரிமைகள் மீறப்படுவதாக குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

தற்போது பல தோட்டங்களில் தொழிலாளர்கள் மேலதிக கொழுந்தைப் பறிக்க நிர்ப்பந்திக்கப்படுவதாக இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் தலைவர் தெரிவித்துள்ளார்.

உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட தொழிற்சங்கமான தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் க.வேலாயுதமும் இவ்வாறான கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்.

## 141 அமைப்பாளர்கள் இந்த வாரம் நியமனம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் அனைத்து தேர்தல் தொகுதிகளுக்குமான அமைப்பாளர்கள் இந்த வாரத்துக்குள் நியமிக்கப்படவுள்ளனர். வடக்கு, கிழக்கு உள்ளிட்ட அனைத்து பகுதிகளுக்குமான 141 பேர் இவ்வாறு நியமிக்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் எதிர்வரும் 16ஆம் திகதி நடைபெறவுள்ள கட்சியின் செயற்குழுக் கூட்டத்தின் பின்னர் அவர்களின் செயற்பாடுகள் ஆரம்பிக்கும் எனக் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.



# மக்கள் உரிமைக்காகப் போராடினார்கள் நாட்டைப் பிரிப்பதற்கு முனையவில்லை

(கொழும்பு)

வடக்கு மக்கள் தமது உரிமைக்காகப் போராடினார்களே தவிர, நாட்டைப் பிரிப்பதற்காகப் போரில் ஈடுபடவில்லை என்று உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2009 - 2010 பொது பட்டமளிப்பு விழா வந்தாறுமூலை வளாக மண்டபத்தில் நடைபெற்றது. வேந்தர் பேராசிரியை யோகா இராசநாயகம் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் இந்தப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களாக நீங்கள் அனுமதி பெற்றபோது இந்தப் பிரதேசத்தில் யுத்த சூழ்நிலை காணப்பட்டது.

தற்போது பட்டம் பெற்று வெளியேறும் போது அமைதியும் சமாதானமும் நிறைந்த-மகிழ்ச்சிகரமான சூழ்நிலையில் பட்டதாரிகளாக வெளியேறுகிறீர்கள்.

அண்மையில் அமெரிக்காவிலுள்ள 11 பல்கலைக்கழகங்களுக்குப் பயணம் செய்தபோது அங்கு நமது நாட்டைச் சேர்ந்த 11 தமிழர்களும், 2 சிங்களவர்களும், மலேசியாவிலுள்ள 7 பல்கலைக்கழகங்களுக்குச் சென்றபோது எமது நாட்டைச் சேர்ந்த பலரும் பேராசிரியர்களாகப் பணியாற்றுவதைக் காண முடிந்தது.

மலேசியாவிலுள்ள பல்கலைக்கழகங்களில் 99 சதவீதமானோர்கள் தமிழ் கல்விமான்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் நினைவுபடுத்துகிறேன்.

1970 ஆண்டு காலப்பகுதியில் உங்களைப் போல மாணவனாக, ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட போது, வர்த்தகத் துறையில் 70 மாணவர்கள் இருந்தனர். அவர்களில் 23 பேர் தமிழ் மாணவர்கள்.

அவர்கள் தமிழைப் போல் ஆங்கிலமும் சரளமாகப் பேசக் கூடியவர்களாக இருந்தனர். இந்த 23 பேரில் 4 பேர் இப்போது பேராசிரியர்களாகப் பணியாற்றுகிறார்கள். இன்னும் 15 பேர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் பதவிகளில் உள்ளனர்.

1965 ஆண்டு வரை மலேசியாவிலுள்ள அஞ்சல் நிலையங்களிலும் தொடருந்து நிலையங்களிலும் அதிபர்களாக வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழர்களே பணியாற்றினார்கள்.

இப்படி வடக்கு, கிழக்குத் தமிழர்கள் கல்வித்துறையில் முன்னேற்றமடைந்தவர்களாகவும் உயர்ந்த இடத்திலும் இருந்துள்ளார்கள். இன்று எமது நாட்டில் யுத்தம் ஓய்ந்து அமைதியான சூழ்நிலை காணப்படுகிறது. நாட்டில் அன்றைய யுத்த நிலைக்குக் காரணம் சிலர் அல்ல. அரசியல்வாதிகள் மற்றும் அரசியல் கட்சிகளின தலைவர்கள் உட்பட இந்தத் தவறை விட்டவர்கள் நூற்றுக்கணக்கில் உள்ளனர்.

இந்த யுத்த காலத்தில் ஏற்பட்ட அனர்த்தங்கள் மற்றம் இழப்புகளுக்கு எல்லாம் இவர்கள்தான் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் என்றார்.

# புதுக்குடியிருப்பில் ஆயுதங்கள் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு-புதுக்குடியிருப்புப் பகுதியில் இருந்து பெருந்தொகையான வெடி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் அதிகாரிகள் குழுவொன்று மேற்கொண்டு தேடுதல் நடவடிக்கையின் போது 30 மில்லிமீற்றர் ரகத்தைச் சேர்ந்த 16 பீரங்கி குண்டுகளும், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட நான்கு மோட்டார் குண்டுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ரி-56 ரகத் துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் ஐயாயிரம் ரவைகள், வெடிப்பொருட்களுடன் கூடிய இரண்டு எறிகணைகள், 12 ஷெல் மற்றும் குண்டு ஆகியனவும் இதன்போது மீட்கப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

# தமிழர்களுக்கு ஆதரவாக இந்தியா குரலெழுப்ப வேண்டும்

## கூட்டமைப்பு எம்.பி.யோகேஸ்வரன்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை தமிழர்களுக்கு ஆதரவாக இந்தியா குரல் எழுப்ப வேண்டும் எனக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழகம், திருநெல்வேலியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போது இதனைத் அவர் குறிப்பிட்டதாக, தமிழக ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

எதிர்வரும் மார்ச் மாதம், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் மாநாடு நடைபெறவுள்ளது.

இதன்போது, இந்தியா-இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகச் செயற்பட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, தேர்தல் நிறைவடைந்த பின்னரும், தமிழர்களுக்காக குரல் எழுப்பி வரும் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா ஜெயராமுக்கு சீனித்தம்பி யோகேஸ்வரன் நன்றி தெரிவித்துள்ளார்.

# பல்கலைக்கழகங்களில் போராட்டம்

(கொழும்பு)

பல்கலைக்கழக நிர்வாகத்தினைக் கண்டித்து ரஜரட்ட மற்றும் ஸ்ரீஜயவர்தனபுர ஆகிய பல்கலைக்கழகங்களின் மாணவர்கள் ஆரம்பித்த எதிர்ப்பு நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தமது பல்கலைக்கழக நிர்வாகம் மாணவர் ஒடுக்குமுறையை கையாள்வதாக ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட மாணவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். மருத்துவ பீட மாணவர்களுக்கு இழைக்கப்படும் அநீதியை முடிவுக்கு கொண்டுவந்து பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணுமாறு வலியுறுத்துவதாகவும் தமது எதிர்ப்பு நடவடிக்கை தொடர்வதாகவும் ரஜரட்ட மருத்துவ பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சமிந்த புஸ்ப குமார தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உபவேந்தரைப் பதவியில் இருந்து நீக்குமாறு வலியுறுத்தி ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் குழுவொன்று ஆரம்பித்த சத்தியாக்கிரக போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

பல்கலைக்கழகத்தை மூடுவதற்கு நிர்வாகத்தினர் நடவடிக்கை எடுத்தாலும், தமது சத்தியாக்கிரகப் போராட்டம் தொடரவதாக மாணவர் சங்கத்தின் பிரதிநிதி கிம்புல்லேவ சந்தரத்ன தேரர் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும், அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதாக ஒரு சில மாணவர்கள் மாத்திரம் ஒழுக்கத்தை மீறும் வகையிலான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதாக ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் கலாநிதி என்.எல்.ஏ.கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

# 100 மில்லியன் பயன்பாட்டாளர்கள் ஹிரு எப்.எம்.இணையம் சாதனை




(கொழும்பு)

சூரியனின் சகோதர வானொலியான ஹிரு எம்.எம். இணையத்தளம் கடந்த டிசம்பரில் மாத்திரம் 100 மில்லியனுக்கும் அதிகமான இணையப் பயன்பாட்டாளர்களைப் பெற்று வரலாற்றுச் சாதனையை எட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், ஹிரு எப்.எம் அதிகளவான, நிலையான உள்ளீடுகளுடன் இலங்கையின் முன்னணி இணையத்தளமாகத் தெரிவாகியுள்ள நிலையில், சர்வதேச ரீதியாக ஹிரு எப்.எம். இன் இணையத்தளத்திற்கு நேயர்கள் இருக்கின்றமை தெரிவாகியுள்ளது.

தெற்காசியாவைப் போன்றே இலங்கையிலும், சிறந்த வானொலியாகத் தெரிவுசெய்யப்பட்ட ஹிரு எப்.எம், இந்த வரலாற்று ரீதியான அதிக எண்ணிக்கையான பயன்பாட்டாளர்களைப் பெறறமைக்கு, அறிவிப்பு மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களால் மாத்திரம் இன்றி சரியான தருணத்தில் தகவல்களை வழங்கியதினாலேயாகும்.

உலகின் எந்த இடத்தில் இருந்தும் ஹிரு எப்.எம் மூலம் தரவிறக்கம் செய்துக்கொள்ள முடியும். இந்த வசதி, கையடக்கத் தொலைபேசிகளிலும் உள்ளன. சூரியனின் சகோதர வானொலியான ஹிரு எப்.எம். இன் கிசு கிசு பகுதிக்கு, இலட்சக்கணக்கான இரசிகர்கள் சேர்ந்திருக்கின்றமை, அதன் பக்கசார்பற்ற தகவல் வழங்கலே காரணமாகும என‌க் கூறப்படுகிறது. விளையாட்டுத் தகவல்களுடன், பல்வேறு தொழில்நுட்பத் தகவல்களையும் இந்த இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

2012ஆம் ஆண்டின் புதிய நாளைச் சிறப்பாக ஆரம்பித்தமைக்கு, கடந்த வருடம் டிசம்பர் மாதம் வரையில் மாத்திரம், 100 மில்லியன் இணைய இரசிகர்களை ஹிரு எப்.எம். கொண்டுள்ளமையே காரணமாகும்.

இலங்கையில் முதல் முறையாக, தாம் விரும்பும் அறிவிப்பாளருடன் 24 மணித்தியாலங்களும் நேரடியாகத் தொடர்பு கொள்ளக்கூடிய வசதியை ஹிரு எப்.எம். வழங்கி இருந்தது.

டிசம்பர் மாதத்துக்குள் மாத்திரம் 100 மில்லியன் இரசிகர்களைக் கொண்ட ஹிரு எப்.எம். வானொலி, அதில் ஒலிபரப்பான எந்த நிகழ்சியையும் தரவிறக்கம் செய்துக்கொள்ளும் வசதியையும் வழங்கியுள்ளது.

2011ஆம் ஆண்டு, தெற்காசியாவின் சிறந்த வானொலிக்கான மந்தன் விருதினைப் பெற்றுக் கொண்டது. சூரியனின் சகோதர வானொலியான ஹிரு எப்.எம் மாத்திரமே இந்த மந்தன் விருதுக்குத் தெரிவான ஒரே ஒரு வானொலியாகும்.

# சர்வதேச தபால் ஒன்றிய விதிகளை புறக்கணிப்பதற்குத் தீர்மானம்

(கொழும்பு)

புலிகள் தொடர்பான படங்கள், சின்னங்கள் கொண்ட கடிதங்கள் மற்றும் பொதிகளைக் கையாளும் போது, சர்வதேச தபால் ஒன்றியத்தின் சில விதிகளைப் புறக்கணித்துச் செயற்படுவதற்கு இலங்கை தபால் அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

புலிகளின் படங்கள், சின்னங்கள் கொண்ட முத்திரைகள் பிரான்ஸ், கனடா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகளால் வெளியீடு செய்யப்பட்டுள்ளன.

சர்வதேச தபால் ஒன்றியத்தின் விதிகளின்படி எந்தவொரு முத்திரையும் அங்கத்துவ நாடொன்றினால் அங்கீகரிக்கப்பட்டால் அது சர்வதேச நாடுகளின் தபால சேவைகளின்போது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அதாவது அங்கத்துவ நாடொன்றின் தபால் முத்திரை ஒட்டப்பட்ட தபால்கள் எந்த நாட்டுக்கும் அனுப்பப்படலாம்.

எனினும், புலிகளின் முத்திரை ஒட்டப்பட்ட தபால்களை இலங்கைக்கு அனுப்பவேண்டாம் என பிரெஞ்சு தபால்துறைக்கு, தான் கூறியுள்ளதாக இலங்கை தபால் மா அதிபர் எம்.கே.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சூழ்நிலையில் சர்வதேச தபால் ஒன்றியத்தின் விதிகள் எப்படியிருந்த போதிலும், உள்நாட்டுச் சட்டங்கள், விதிகளின் படி நாம் செயற்படுவோம் என அவர் கூறினார்.

இம்முத்திரை வெளியீடு தொடர்பாக வெளிவிவகார அமைசசர் ஜீ.எல்.பீரிஸ் ஏற்கெனவே பிரெஞ்சுத் தூதரகத்திடம் இலங்கை அரசாங்கத்தின் ஆட்சேபத்தை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மிகப்பெரிய பயணிகள் விமானம் இலங்கையில் தரையிறக்கம்

(கொழும்பு)

உலகின் மிகப் பெரிய பயணிகள் விமானமான ஏ-380 ரக விமானமொன்று நேற்றுக் அதிகாலை 4.30 அளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டுள்ளது. சுமார் ஒரு மணித்தியாலத்திற்குப் பிறகு குறித்த விமானம் மீண்டும் புறப்பட்டுச் சென்றுள்ளது.

ஏ-380 ரக விமானமொன்று இலங்கையில் தரையிறக்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகுமென விமான நிலையத்தின் கடமைநேர முகாமையாளர் கூறினார்.

அவுஸ்ரேலியாவின் சிட்னி விமான நிலையத்திலிருந்து துபாயை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த விமானம் எரிபொருள் தேவைக்காக கட்டுநாயக்க விமானநிலையத்தில் தரையிறக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஐந்து வாகனங்கள் ஒரேயிடத்தில் விபத்து

(கொழும்பு)

பேலியகொடை, நான்காம் மைல்கல் பிரதேசத்தில், நேற்றுக் காலை 9.30 மணியளவில் ஐந்து வாகனங்கள் ஒன்றோடொன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இரண்டு லொறிகள், இரண்டு கார்கள் வான் ஒன்றும் இதன் போது விபத்துக்குள்ளாகியுள்ளன.

திருகோணமலையிலிருந்து சிமெந்து ஏற்றிவந்த லொறி முன்னால் வந்த காருடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. விபத்தில் ஒருவர் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாது ஒழிக்க வேண்டும்

## ஜே.வி.பி. கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் நடைமுறையில் உள்ள நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இரத்து செய்யப்பட வேண்டுமென ஜே.வி.பி கோரிக்கை விடுத்துள்ளது.

தேர்தல் முறைமையில் மாற்றம ஏற்படுத்தப்படும் போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையையும் இரத்து செய்ய வேண்டும் என்ற நிபந்தனை உள்ளது என ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்ல, பெலவத்தையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். விருப்பு வாக்குமுறைமை குறித்த மக்களின் அதிருப்தியை, அரசாங்கம் தேர்தல் சட்டதிருத்தங்களுக்கு பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கின்றது. உரிய ஜனநாயக முறையில் தேர்தல் சட்டங்களில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டியது அவசியமானது.

அரசியல் நிலைமைகள் நாளுக்கு நாள் மோசமடைந்து செல்கின்றன. தேர்தல் சட்டங்களில் திருத்தம் ஏற்படுத்துவதன் மூலம் இதனை தடுத்து நிறுத்த முடியாது. மேலும், மக்களின் ஜனநாயக உரிமைகளை சட்டமொன்றை நிறைவேற்றுவதன் மூலம் பறித்துக்கொள்ள அரசாங்கம் முயற்சிக்கின்றது என அனுரகுமார திஸாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.



## வன்னியில் கிராம ரீதியாக அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுப்பு

(கொழும்பு)

வன்னி மாவட்டத்திலுள்ள அனைத்து கிராமசேவக பிரிவுகளிலும் தலா ஒவ்வொரு அபிவிருத்தித் திட்டத்தை முன்னடுப்பதறகான நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதாக வன்னி மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவரும் அமைச்சருமான றிசாட் பதியுதீன் தெரிவித்தார்

இதற்கிணங்க முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்த தேவையான ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளும் வகையில் ஒவ்வொரு கிராம அதிகாரி பிரிவிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான செயலமர்வு வவுனியா நகர கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது

இக்கூட்டத்தில் கைத்தொழில் மற்றும் முதலீட்டு அமைச்சர் றிசாட் பதியுதீன், கமநல சேவைகள் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன, நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் மற்றும் வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டதுடன் வன்னி மாவட்டத்திலுள்ள சுமார் 300 இற்கும் மேற்பட்ட கிராம சேவகர் பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தி பலர் கலந்துகொண்டனர்

## வேலணையிலிருந்து ஐயப்ப பக்தர்கள் சபரிமலைக்குப் பயணம்



(கொழும்பு)

வேலணை பிரதேசத்திற்குட்பட்ட கரிகர புத்திர ஐயனார் ஆலயத்தில் இருந்து ஐயப்பன் பக்தர்கள் ஏழு பேர் நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் இந்தியாவில் உள்ள சபரி மலைக்கு பயணமாகியுள்ளனர்.

யுத்த காலத்தில் இவ்வாலயங்களிலிருந்து ஐயப்பன் பக்தர்கள் செல்லவில்லை தற்போது சுமுகமான சூழல் உருவாகியிருப்பதால் இப் பக்த்தர்கள் மிகவும் சந்தோஷத்துடன் பக்திப்பரவசத்துடனும் சென்றிருப்பதாகத் தெரியவருகின்றது.

இப்பயணத்தை முத்தையா (ஐயனார் கோவில் பரிபாலன சபைத்தலைவர்) மற்றும் மு.பரமேஸ்வரன், ப.கோபினாத், திரு.சுகநதன் , கந்தசாமி குஞ்சன், கருணாநிதி றெஜிபன், த.அருந்தவம் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர். (85)

## அதிகரிக்கும் அகதிகள் விவகாரம் அவுஸ்ரேலியா - இந்தோனேசியா பேச்சு

(கொழும்பு)

இலங்கையில் இருந்து செல்லும் அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், அவுஸ்ரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் கெவின்ரட், இந்தோனேசிய வெளிநாட்டு அமைச்சரைச் சந்திக்கவுள்ளார்.

அண்மையில் இலங்கையில் இருந்து அவுஸ்ரேலியாவுக்கு படகு மூலம் செல்ல முற்பட்ட 22 பேர கைது செய்யப்பட்டனர்.

இந்தோனேசியாவில் வீசாவுக்கான கட்டுப்பாடுகள் தளர்த்த தீர்மானிக்கப்பட்ட நிலையில், இலங்கையில் இருந்து அகதிகளின் வருகை மீண்டும் அதிகரித்துள்ளதாக அவுஸ்ரேலியா கருதுகிறது.

இந்த நிலையில் இது தொடர்பில் கலந்துரையாடும் பொருட்டு, கெவின் ரட் இந்தோனேசியா சென்றுள்ளார்.

இதன்போது இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கான வீசா கட்டுப்பாட்டை தளர்த்தும் இந்தோனேசியாவின் தீர்மானத்தை மாற்றிக் கொள்ளுமாறு கோரப்படலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

### வேவிலானின் இன்ப இசை

அருள்மிகு வல்வெட்டி வேவில் ஸ்ரீவீரகத்தி விக்னேஸ்வரப் பெருமானின் "வேவிலானின் இன்ப இசை" இறுவெட்டு வெளியீடு எதிர்வரும் 12. 1.2012 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஆலய முன் மண்டபத்தில் வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் தலைமையில் நடைபெறவுளளது.

பிரதம விருந்தினராக நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பராமாசசார்ய சுவாமிகள், சிறப்பு விருந்தினராக செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன், கௌரவ விருந்தினராக பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் பி.கிருஸ்ணானந்தனும், அகில இலங்கை சைவப் புலவர் சங்க சைவப்பிரசார அமைச்சர் பண்டிதா சைவப்புலவர் பொன்.சுகந்தனும் கலந்துகொள்ளவுள்ளனர். (116)

## ஆயுர்வேத மருத்துவ அதிகாரிகள் சுகயீன விடுமுறைப் போராட்டம்



(கொழும்பு)

அரச ஆயுர்வேத மருத்துவ அதிகாரிகள் சங்கம் நேற்று சுகயீன விடுமுறைப் போராட்டத்தை நடத்தியுள்ளது.

எமது பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக்கொடுக்குமாறு வலியுறுத்தி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக சங்கத்தின் பிரதம செயலாளர் டாக்டர் பீ.ஹேவாகமகே தெரிவித்துள்ளார்.

சுதேச மருத்துவ துறையிலுள்ள வைத்திய அதிகாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பாக பல வருடங்களாக அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தப் பட்டுள்ளது.

எவ்வாறாயினும் தமது பிரச்சினைகளுக்கு இதுவரை தீர்வு வழங்கப்படவில்லை என்றார்.

இது தொடர்பாக சுதேச மருத்துவ பிரதி அமைச்சர் பண்டு பண்டாரநாயக்க தெரிவிக்கையில்,

ஆயுர்வேத மருத்துவ அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி பிரச்சினைகளுக்கு உரிய தீர்வினைப் பெற்றுக்கொடுப்பதாக பதிலளித்தார்.

## கூட்டமைப்பை அரசாங்கம் உடனடியாக தடைசெய்ய வேண்டும்

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

(கொழும்பு)

நாட்டுக்குத் துரோகமிழைக்கும் தீய சக்தியாகக் கூட்டமைப்பு உருவெடுத்து வருகின்றது. எனவே, அதை உடனடியாக அரசாங்கம் தடைசெய்ய வேண்டும் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றம் சாட்டியுள்ளது.

ஜெனிவா மாநாட்டின் போது இலங்கையை சர்வதேச பிடிக்குள் சிக்கவைப்பதற்கான சூழ்ச்சித் திட்டங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீவிரமாக வகுத்து வருகின்றது. நாட்டுக்கு எதிரான நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்து வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடனடியாகத் தடை செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயமாக மாறிவிட்டது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் நூற்றாண்டு விழா அழைப்பை அரசு நிராகரித்துள்ள நிலையில், அதில் தமிழ்த தேசியக் கூட்டமைப்பு கலந்து சிறப்பிப்பதன் உள்நோக்கத்தை நாம் அறிவோம்.

ஜெனிவா மாநாடு நெருங்கி வரும் நிலையில் இலங்கைக்கு அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கான சதித்திட்டங்களை கூட்டமைப்பு வகுத்து வருகின்றது.

எனவே அரசு, கூட்டமைப்பை தடைசெய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்காது தொடர்ந்தும் மௌனம் காத்தால், அது நாட்டுக்குப் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## லசந்த படுகொலையைக் கண்டித்து கொழும்பில் எதிர்ப்புக் கூட்டம்

சிரேஷ்ட ஊடகவியலாளரும் சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டு மூன்று வருடங்கள் பூர்த்தியடையதையிட்டு நாளை புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கொழும்பு ஜயவர்த்தன நிலையத்தில் எதிர்ப்புக் கூட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

சுதந்திரத்துக்கான அரங்கம் இதனை ஏற்பாடு செய்துள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன், பேராசிரியை நிமல்கா பெர்னாந்து, பாக்கியசோதி சரவணமுத்து, சட்டத்தரணி ஜே.சி. .வெலி அமுன, சட்டத்தரணி சுதர்ஷன குணவர்த்தன, சட்டத்தரணி கே.டப்ளியூ ஜனரஞ்சன, சுதந்திரத்துக்கான அரங்கத்தின் முக்கியஸ்தர் பிரிட்டோ பெர்னாந்து, பாடகர் ஜயதிலக பண்டார உட்பட மேலும் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர்.

## ஓய்வூதியம் இன்று

(ஆனைக்கோட்டை)

அரச ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான ஜனவரி மாதக் கொடுப்பனவு இன்று செவ்வாய்க்கிழமை வழங்கப்படவுள்ளது.

கொடுப்பனவுக்கான வவுச்சர்கள் பிரதேச செயலகங்களினால் ஓவ்வூதியர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், இக் கொடுப்பனவுடன் வரவு செலவுத் திட்டத்தில் அதிகரிக்கப்பட்ட பணத்தின். ஒரு பகுதியும் சேர்க்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றனர். (104)

## நடித்தவர் கைது

(கொழும்பு)

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க போன்று நடித்து கேகாலை பொலிஸ் அத்தியட்சகரிடம் தனது மகனுககு பாதுகாப்பு அளிக்கக் கோரிய ஒருவரை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்

31 வயதான இச்சந்தேக நபர், கேகாலை பொலிஸ் அத்தியட்சகருக்கும் கேகாலை பொலிஸ் தலைமையகத்திற்கும் இரு தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன கூறினார்

இதற்காக, பயிற்சிகளின் போது சிறப்பாக செயற்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை தெரிவு செய்தபின் தனக்கு தொலைபேசி அழைப்பு விடுக்குமாறு அந்நபர் பொலிஸாரை கோரியுள்ளார்

இது குறித்து பொலிஸாருக்கு சந்தேகம் ஏற்பட்டதையடுத்து குற்றப் புலனாய்வுப் பரிவுக்கு தகவல் வழங்கப்படடது. அதையடுத்து மேற்படி சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

# பெண் குழந்தைக்கு தந்தையானார் முரளி



(சென்னை)

பிரபல கிரிக்கெட் நட்சத்திரமான முத்தையா முரளிதரன், பெண் குழந்தை யொன்றுக்கு தந்தையாகியுள்ளார்.

இந்திய மருத்துவமனையொன்றில் முரளிதரனின் மனைவி மதிமலருக்கு பெண் குழந்தை பிறந்தது.


2005 ஆம் ஆண்டு திருமணம் செய்த முரளிதரன் - மதிமலர் தம்பதியின் இரண்டாவது குழந்தை இதுவாகும். இவர்களின் முதலாவது குழந்தையான நரேன் 2006 ஜனவரியில் பிறந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆஸி. ஓப்பனில் நடால் சந்தேகம்

அவுஸ்ரேலிய பகிரங்க ரென்னிஸ் தொடரில் விளையாடுவது உறுதியற்றது என ஸ்பெய்னின் முன்னணி ரென்னிஸ் வீரர் ரபேல் நடால் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டின் இறுதிப் பகுதிகளில் நடைபெற்ற போட்டிகளில் பிரகாசிக்க தவறிய ரபேல் நடால் இந்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

இந்த ஆண்டின் முதலாவது கிரான்ஸ்லாம் தொடரான அவுஸ்ரேலிய பகிரங்க ரென்னிஸ் போட்டிகள் எதிர்வரும் 16 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.



கடந்த ஆண்டினை விட மனதளவில் தான் தற்போது உறுதியற்றிருப்பதாக 2009 ஆம் ஆண்டு அவுஸ்ரேலிய பகிரங்க டென்னிஸ் சம்பியன் ரபேல் நடால் குறிப்பிட்டுள்ளார்.

# முர்ரே சம்பியன்



(பிரிஸ்பேன்)

பிரிஸ்பேன் சர்வதேச ரென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவில், இங்கிலாந்து வீரர் ஆன்டி முர்ரே சம்பியன் பட்டம் வென்றார்.

நேற்று முன்தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், இங்கிலாந்தின் ஆன்டி முர்ரே, உக்ரைனின் அலெக்சாண்டர் டோல்கோபோலோவை சந்தித்தார். இதில் அபாரமாக ஆடிய ஆன்டி முர்ரே 6-1, 6-3 என்ற நேர செட்டில் வெற்றி பெற்று, சம்பியன் பட்டம் வென்றார்.

# பயஸ் ஜோடி சம்பியன்



(சென்னை)

சென்னை ஓப்பன் ரென்னிஸ் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் லியாண்டர் பயஸ், டிப்சரிவிச் (சேர்பியா) ஜோடி சம்பியன் பட்டம் வென்றது. இஸ்ரேலின் ஜோனாதான் எல்ரிச், ஆன்டி ராம் ஜோடியை பயஸ், டிப்சரிவிச் ஜோடி 6-4, 6-4 என்ற நேர் செட களில் சுலபமாக வென்று சம்பியனானது.

# டில்லி அணியில் பீற்றர்சன்

(புதுடில்லி)

இங்கிலாந்து அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சன் டெக்கான் அணியில் இருந்து டெல்லி டேர் டெவில்ஸ் அணிக்கு ஒப்பந்தம் செய்யப் பட்டுள்ளார். கடந்த ஐ.பி.எல். போட்டியில் பீற்றர்சன் ரூ. 3.25 கோடிக்கு (இந்திய நாணயப்படி) டெக்கான் அணியில் ஏலம் எடுக்கப்பட்டார். ஆனால் காயம் காரணமாக அவர் கடந்த ஐ.பி.எல். போட்டியில் விளையாடவில்லை.

தற்போது பீற்றர்சனை ரூ. 10 கோடிக்கு டில்லி அணி ஒப்பந்தம் செய்துள்ளது. ஆனால் இந்த தொகை அதிகாரபூர்வமாக இன்னும் அறிவிக்கப்படவில்லை. இதன்படி பீற்றர்சனுக்கு ரூ. 3.25 கோடி கிடைக்கும். மீதியுள்ள ரூ. 5.75 கோடி டெக்கான் அணிக்கு கிடைக்கும்.

2009ஆம் ஆண்டு ஐ.பி.எல். ஏலத்தில் அதிக தொகைக்கு விலை போனவர் பீற்றர்சன். அவரை ரூ. 7.7 கோடிக்கு பெங்களூர் அணி எடுத்தது. 2 ஆண்டுகளாக அவர் அந்த அணியில் விளையாடினார். 5ஆவது ஐ.பி.எல். போட்டியில் பீற்றர்சன் டில்லி அணியில் விளையாடுகிறார். மொத்தம் உள்ள 16 லீக் ஆட்டத்தில் அவர் 8 போட்டியில் மட்டுமே ஆடுவார். அதற்காக அவருக்கு டில்லி அணி நிர்வாகம் கொடுத்த விலை ரூ. 10 கோடி என்பது குறிப்பிடத்தக்கது.

# கடந்த ஆண்டின் முதல்வன்



கடந்த ஆண்டின் தலை சிறந்த கால்பந்து வீரருக்கான விருதை ஆர்ஜென்டீனாவின் லயோனல் மெஸ்ஸி 3 ஆவது தடவையாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். சர்வதேச கால்பந்து சம்மேளனம் இவருக்கான விருதை அறிவித்துள்ளது.

24 வயதுக்குள் இந்த விருதைத் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் பெற்ற வீரர் என்ற பெருமையும் அவருக்குச் செல்கிறது. இதற்கு முன்னர் பிரான்ஸின் ஜிடேன், பிரேசில் வீரர் ரொனால்டோ ஆகியோர் இந்த விருதை மூன்றுமுறை பெற்றுள்ளனர். 1991ஆம் ஆண்டு முதல் இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டில் சர்வதேசப் போட்டிகளில் மெஸ்ஸி 53 கோல்கள் அடித்துள்ளார். இது தவிர மற்றவர்கள் கோல் அடிக்க பல முறை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். கால்பந்து விளையாட்டின் மூலம் அதிக அளவு பணத்தையும், அதைவிட அதிகமான புகழையும் சம்பாதித்தவர்கள் வரிசையில் இவர் முதலிடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுழற்சி முறையில் வாய்ப்பு ஆஸியின் புதிய முடிவு

(பெர்த்)

சுழற்சி முறையில் கிரிக்கெட் வீரர்களுக்கு வாய்ப்பளிக்க அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது. அதன்படி அதிக முக்கியத்துவம் வாய்ந்த தொடர்களில் மட்டும் முன்னணி வீரர்கள் களம் இறங்குவார்கள். பலம் குறைந்த அணிகளுக்கு எதிரான போட்டிகளில் அணியில் உள்ள இளம் வீரர்களுக்கும், புதுமுக வீரர்களுக்கும் அதிக வாய்ப்பு அளிக்கப்படவுள்ளது. இதுவும் சுழற்சி முறையில்தான் இருக்கும்.

அவுஸ்ரேலியாவில் இரு கிரிக்கெட் அணிகள் இருக்கும் என்பது இதன் பொருள் அல்ல. அனைத்து வீரர்களுக்கும் சமமான வாய்ப்புகள் வழங்கவும், இளம் வீரர்களுக்கு அதிக வாய்ப்பு வழங்கவும் இந்த புதிய முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. இந்த முயற்சியால் அணியின் வெற்றியில் பின்னடைவை ஏற்படலாம் என்ற கருத்தும் உள்ளது. அதுவும் கருத்தில் கொள்ளப்பட்டு சமபலம் வாய்ந்த அணி களம் இறக்கப்படும் என அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபையின் துணைத் தலைவர்களில் ஒருவரான பேடே ஹோவர்ட் தெரிவித்துள்ளார்.

# மோர்கலுக்கு வாய்ப்பு



(கேப்டவுன்)

இலங்கை அணியுடன் நடைபெறவுள்ள ஒருநாள் கிரிக்கெட் தொடருக்கான தென்னாபிரிக்க அணிக்கு சகலதுறைவீரர் அல்பி மோர்கல் மீண்டும் அழைக்கப்பட்டுள்ளார்.

உபாதைக்குள்ளான சகலதுறை வீரர் டீன் எல்ஹருக்குப் பதிலாக அவர் அணியில் இணைக்கப்பட்டுள்ளதாக தென்னாபிரிக்க கிரிக்கெட் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

தென்னாபிரிக்க அணியைப் பிரதி நிதித்துவப்படுத்த கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பாகிஸ்தான் அணிக்கெதிரான போட்டியில் மோர்கல் இறுதியாக விளையாடியிருந்தார். இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்தத் தொடருக்கான தென்னாபிரிக்க அணியின் தலைவராக ஏ.பி.டி.வில்லியஸ் செயற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உளவியல் ஆலோசனை சச்சினுக்குத் தேவை

(புதுடில்லி)

இந்தியாவின் நட்சத்திர கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கருக்கு தன்னுடைய 100 ஆவது சதத்தை அடைவதன் காரணமாக பெரிய மன அடைப்பு ஏற்பட்டுள்ளது. எனவே அவருக்கு உளவியல் ஆலோசனை தேவை என்று பாகிஸ்தான் அணியின் முன் னாள் தலைவர் ரஷீத் லத்தீப் தெரிவித்துள்ளார்.

சச்சினுக்கு மன நெருக்கடி உள்ளதில் சந்தேகம் இல்லை. இதை அவர் ஒப்புக் கொள்ளமாட்டார். என்றாலும் அது தான் உண்மை. அவர் உளவியல் ஆலோசனை எடுத்துக்கொள்வது குறித்து தவறான எண்ணம் கொள்ளக்கூடாது. உலகின் பல முன்னணி வீரர்கள் எல்லாம் மனநெருக்கடி ஏற்பட்ட சமயத்தில் ஆலோசனைகள் எடுத்துள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முத்தரப்புத் தொடரில் நிச்சயம் ஆடுவேன்




(சிட்னி)

முத்தரப்பு ஒருநாள் தொடரில் நிச்சயம் விளையாடுவேன், என, அவுஸ்ரேலிய வேகப்பந்துவீச்சாளர் ஜேம்ஸ் பட்டின்சன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

காயம் காரணமாக இந்தியாவுக்கு எதிராக மீதமுள்ள டெஸ்டில் விளையாடாதது ஏமாற்றம் அளிக்கிறது. இருப்பினும் இதுகுறித்து அதிகம் கவலைப்பட போவதில்லை. ஏனெனில் காயம் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தாததால், முத்தரப்பு ஒருநாள் தொடரில் நிச்சயம் பங்கேற்பேன் என்ற நம்பிக்கை உள்ளது அணியின் வெற்றிக்கு துணை புரிந்தது மகிழ்ச்சி என்றார்.

# சிறப்பான இணைப்பாட்டம் இன்மையே இந்திய அணியின் தோல்விக்குக் காரணம்



(சென்னை)

சிறப்பான இணைப்பாட்டம் இல்லாததே இந்திய அணியின் அவுஸ்ரேலிய அணியுடனான தோல்விக்குக் காரணம். இருப்பினும் அடுத்த போட்டிகளில் சிறப்பான ஆட்டத்தினை இந்திய அணி வெளிப்படுத்தும் என இந்திய அணியின் தேர்வுக் குழுத் தலைவர் ஸ்ரீகாந்த் தெரிவித்துள்ளார்.

முதல் இரு டெஸ்டில் ஏற்பட்ட தோல்விகளுக்கு, ஒரு குழுவாக இந்திய அணியின் துடுப்பாட்டம் போதுமானது அல்ல. அவுஸ்ரேலிய மண்ணில் இந்தியா சிறப்பாக விளையாடும் என்று நாங்கள் நம்பினோம். ஆனால் இந்திய அணி விளையாடிய விதம் ஆச்சரியம் அளிக்கிறது. அதே சமயம் இந்திய அணியை விட அவுஸ்ரேலிய அணி மிகச்சிறப்பாக விளையாடி யதை ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். தோல்விகளுக்கு வேறு காரணங்களைத் தேடுவது அர்த்தம் இல்லை. அதனை மறந்து விட்டு, அடுத்த போட்டியில் கவனம் செலுத்த வேண்டும்.

ஒரு போட்டியில் தோல்விய டையும் போது, தோல்விக்குரிய காரணமாக நீங்கள் எதையும் சொல்லலாம். ஆனால் இந்த விடயத்தில் டோனி நேர்மை யாக நடந்து கொண்டார். யார் மீதும் அவர் பழி போடவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.





சியோலில் நடந்த கொரிய ஒப்பன் பட்மிரன் தொடரின் இறுதிப் போட்டியில் சீனாவின் ஷிஜியன் வாங், சக நாட்டவரான யான்ஜியோ ஜியாங்கை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார்.

# ஹர்பஜன் ஆடாததே இந்தியாவிற்கு பின்னடைவு

**கூறுகிறார் அக்ரம்**




(சிட்னி)

அவுஸ்ரேலிய அணிக்குகு எதிரான டெஸ்ட் தொடரில், அனுபவ சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் விளையாடாதது, இந்திய அணிக்கு பின்னடைவான விடயம் என பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன் வசீம் அக்ரம் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே அவுஸ்ரேலிய மண்ணில் விளையாடிய அனுபவம் ஹர்பஜனுக்கு இருப்பதால், இவருக்கு முன்னுரிமை அளித்திருக்க வேண்டும். ஒரு ஓட்டம் கூட எடுக்கவிடாமல், அவுஸ்ரேலிய துடுப்பாட்ட வீரர்களுக்கு எப்படி நெருக்கடி கொடுக்க வேண்டும் என்பது இவருக்கு நன்றாகத் தெரியும். இதுபோன்ற சூழ்நிலையில், அனுபவ வீரரான ஹர்பஜன் சிங் தேர்வு செய்யப்பட்டிருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# தார்மீக ஆதரவு கோரும் நக்கீரன் கோபால்



"தார்மீக ஆதரவு கொடுங்கள்" எனக்கோரி "நக்கீரன" கோபால் விடுத்த வேண்டுகோளில் மேலும் தெரிவித்திருப்பதாவது, பொலிஸ் உயர் அதிகாரியைத் தொடர்பு கொண்டு பாதுகாப்பு கேட்ட போது, குறைந்த எண்ணிகையில் நிறுத்தப்பட்ட பொலிசார் முன் அராஜகம் நடந்தது. மின் வாரியத்தினர் நக்கீரன் அலுவலக மின் இணைப்பை துண்டித்து விட்டனர். குடிநீர் வாரிய ஊழியர்கள், அலுவலக குடிநீர் இணைப்பை துண்டிக்க முயன்றனர் "உத்தரவு உள்ளதா, இல்லையென்றால் காரணத்தை எழுதிக் கொடுத்துவிட்டு துண்டியுங்கள்" என்று தெரிவித்தோம். இந்நிலையில், திடீரென, நேற்று முன்தினமும் 12 மணியளவில், அ.தி.மு.க.வினர் உருட்டுக்கட்டை, கற்களுடன் வந்து கொடூர தாக்குதல் நடத்தியுள்ளனர். உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நிலையில், ஆண், பெண் பணியாளர்கள் அலுவலகத்தில் முடங்கியுள்ளனர். அரசோ, நக்கீரன் பத்திரிகை செயல்படக் கூடாது என்ற முனைப்போடு, சகல திசைகளில் இருந்து, அஸ்திரங்களை நக்கீரன் மீது ஏவி வருகிறது. நெருக்கடியான நிலையில், அரசு மற்றும் பொலிஸ் துறையின் போக்கை, பத்திரிகை, "டிவி" உள்ளிட்ட ஊடகத்தினர், அரசியல் தலைவர்கள், சமுதாய, மனித நேய அமைப்பினர், பொதுமக்களும் கண்டிப்பதோடு, நக்கீரனுக்கு தார்மீக ஆதரவு தர வேண்டும். இவ்வாறு நக்கீரன் ஆசிரியர் கோபால் தன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




# வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு சலுகைகள்




வெளிநாடு வாழ் இந்திய தொழிலாளர்களுக்கு ஓய்வூதிய திட்டம் மற்றும் காப்பீட்டுத் திட்டம் வழங்கப்பட உள்ளதாக பிரதமர் மன்மோகன் சிங் உறுதி அளித்துள்ளார்.

இந்தயாவில் ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் நேற்று முன்தினம் ஆரம்பித்த வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கான மாநாட்டில் பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும், வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு வாக்குரிமை, அவர்களின் பாதுகாப்பிற்கு தேவையான பல்வேறு நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் வாழும் இந்திய சமூக மக்களின் நலனுக்காக இந்திய அரசும், இந்திய மக்களும் பெருமளவில் பங்காற்றி வருகின்றனர். அதே சமயத்தில் நவீன இந்தியாவை உருவாக்க வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் உதவுவார்கள் என்று நம்பிக்கை வைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# இந்தியா வெங்காய ஏற்றுமதியில் சரிவு



(புதுடில்லி)


வெளிநாடுகளுக்கு வெங்காயத்தை ஏற்றுமதி செய்வதில் இந்தியா சரிவை சந்திப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்தியாவில் நடப்பு நிதியாண்டின முதல் 9 மாதங்களில் இந்தியாவின் வெங்காய ஏற்றுமதி 23 சதவீதம் சரிவடைந்துள்ளது. ஏற்றுமதிக்கான குறைந்தபட்ச விலையை மத்திய அரசு உயர்த்தியதன் காரணமாகவே வெங்காய ஏற்றுமதி சரிந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த ஆண்டு ஒரு தொன்னிற்கான ஏற்றுமதி விலை 250 டொலராக இருந்தது. கடந்த 2011ஆம் ஆண்டின் ஏப்ரல் முதல் டிசம்பர் 31ஆம் திகதி வரையிலான இந்தியாவின் வெங்காய ஏற்றுமதி 10,37,978 தொன்னாக உள்ளது. இது அதற்கு முந்தைய ஆண்டு(2010) ஏற்றுமதி அளவான 13,40,772 தொன்னை விட குறைவாகும். கடந்த ஆண்டின் ஒக்ரோபர் மாதத்தில் வெங்காய ஏற்றுமதிக்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை மத்திய அரசு 450 டொலராக உயர்த்தி உள்ளது குறிப்பிடத்தக்கது.

# என்னுடைய கனவு அதிகாரிகளை தூங்கவிடாது

(சென்னை)

தமிழக நதிகளை இணைப்பதற்காக, தொலைநோக்கு திட்டத்தை உருவாக்க வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் வலியுறுத்தியுள்ளார். தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம் சார்பில் 35 ஆவது புத்தக கண்காட்சி சென்னையில் நடந்து வருகிறது. இதன் 4ஆம் நாளான நேற்று முன்தினம், முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் சிறப்பு விருந்தினராக பங்கேற்று உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். தமிழகத்தில் ஓடும் நதிகளை இணைத்து



பலப்படுத்த வேண்டும். அப்படி இணைத்தால், தண்ணீருக்காக அடுத்த மாநிலத்தை நம்பி இருக்க வேண்டாம். ஒவ்வொரு ஆண்டுமழையினால் பெருக்கெடுத்து ஓடும் வெள்ள நீரை சேமிக்க நீர் நிலைகளை உருவாக்க வேண்டும். அப்படி செய்தால், ஆண்டுக்கு 100 டிஎம்சி தண்ணீரைச் சேமித்து வைக்கலாம். வரண்ட தமிழகத்தை வளமான தமிழகமாக மாற்ற முடியும். தமிழக நதிகளை இணைப்பதற்காக, தொலைநோக்கு திட்டத்தை உருவாக்க வேண்டும். இதற்காக, தமிழக அரசு மத்திய அரசுடனும், உலக வங்கி மற்றும் தனியார் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து திட்டத்தை உருவாக்க வேண்டும். அது உருவாகும் என்ற கனவு எனக்கு உள்ளது. அரசியல் கட்சியினரையும், அதிகாரிகளையும் எனது கனவு தூங்க விடாது என அவர் மேலும் தெரிவித்தார்.

# சசிகலா குழுவின் பிரத்தியேக புலனாய்வு அணி சிக்கியது

(சென்னை)

அ.தி.மு.க. அமைச்சர்களின் பாதுகாப்பு அதிகாரிகளாக இருந்த பலர் திடீரென நீக்கப்பட்ட பின்னணியில், சுவாரசியமான சில விஷயங்கள் நடைபெற்றதாக உளவுத்துறை வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது. பாதுகாப்பு அதிகாரிகள் நீக்கப்படும் உத்தரவு பிறப்பிக்கப்படும் முன்னர் சில பாதுகாப்பு அதிகாரிகளை கூட்டிச்சென்று விசாரித்தது அரச உளவுத்துறை.

அமைச்சர்களின் பாதுகாப்பு அதிகாரிகளில் பலர் சசிகலா குடும்ப நபர்களால் நியமிக்கப்பட்ட ஆட்கள். சசிகலா குடும்பத்தினரின் வெளியேற்றம் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர், உளவுத்துறையினர் இந்த பாதுகாப்பு அதிகாரிகளின் பின்புலங்களை அலசத் தொடங்கினார்கள்.

அப்போது கிடைத்த சில தகவல்கள் ஆச்சரியமானவை. ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூவர், மூன்று வெவ்வேறு அமைச்சர்களுக்கு பாதுகாப்பு அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். இதிலுள்ள மற்றொரு ஆச்சரியம் என்னவென்றால், இந்த மூன்று அமைச்சர்களும் ஒன்றாகக் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளில், அவர்களுடன், இந்த பாதுகாப்பு அதிகாரிகளும் சென்றபோதிலும், தமக்கிடையே பரிச்சயம் இருப்பதாகவே காட்டிக் கொண்டதில்லையாம்.

மற்றொரு விஷயம், சசிகலா குழுவால் அனுப்பி வைக்கப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகளில் கிட்டத்தட்ட அனைவருமே ஒரே சாதிக்காரர்கள். மேலும். அமைச்சர்களுக்கு பாதுகாப்பு அதிகாரிகளை நியமித்த வேலை மிகவும் கச்சிதமாக திட்டமிடப்பட்டு நிறைவேற்றப்பட்டிருந்தது என்று உளவு வட்டாரத்தில் சொல்கிறார்கள். அமைச்சரவை அறிவிக்கப்படும் முன்னரே எந்த அமைச்சருக்கு எந்த பாதுகாப்பு அதிகாரி என்று சொல்லபபட்டிருக்கிறது. அந்தளவுக்கு தீர்மானம் எடுக்கபட்டதாம்.

## சுகுமாரன் நம்பியார் மரணம்



இந்திய மாநிலமான தமிழ்நாட்டின் மறைந்த பழம்பெரும் நடிகரான நம்பியாரின் மகன் சுகுமாரன்(வயது60) கடந்த ஞாயிற்றுக்கிழமை மாரடைப்பால் மரணம் அடைந்தார். சுகுமாரன் அகில இந்திய ஐயப்பன் சேவா சங்க தலைவராகவும், மத்திய கறுப்பு பூனைப்படைக்கு பயிற்சியாளராகவும் இருந்தவர் ஆவார்.

மேலும் தமிழகத்தில் கறுப்பு பூனை படையை உருவாக்கிய பெருமையை பெற்ற சுகுமார் நம்பியார், பாரதீய ஜனதா கட்சியின் தேசிய நிர்வாகக்குழு உறுப்பினராக இருந்து வந்தார்.

# முடங்கியது கூடங்குளம் அணுமின்நிலையம்

கூடங்குளம் அணுமின் நிலையப் பணிகளுக்கு, விஞ்ஞானிகள் மற்றும் பொறியாளர்கள் செல்ல முடியாமல் தமிழக அரசு, "கிடுக்கிப்பி" போடுவதால், மின் நிலையப் பணிகள் அடியோடு முடங்கியது. இதனால், தமிழகத்திற்கு மின் தட்டுப்பாடு ஏற்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளதோடு, மூன்று மாதங்களாக பணியில்லாமல் இருக்கும் பொறியாளர்கள், வேறு மாநிலப் பணிக்கு அனுப்பப்படுகின்றனர். கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு எதிராக, ஒரு குழுவினர் போராட்டம் நடத்தி வருகின்றனர். இவர்களின் வேண்டுகோளை ஏற்று, மின் நிலையப் பணிகளை நிறுத்தி வைக்க, மத்திய அரசை தமிழக அரசு கேட்டுக் கொண்டது. அதன்படி, மூன்று மாதங்களாக மின் நிலையப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. மின் நிலையத்தின் கணினி மற்றும் குளிராக்கி பகுதிகளில், தினசரி பராமரிப்பு பணி மட்டுமே நடக்கிறது. ஆனால், போராட்டக்காரர்கள் அதையும் நிறுத்த வேண்டுமென்று, நெல்லை மாவட்ட அதிகாரியிடம் மனு கொடுத்தனர். இதையடுத்து, தமிழக அரசு உத்தரவின் பேரில், அணுமின் நிலையத்திற்குள் பணிக்குச் செல்லும் பணியாளர்கள் எண்ணிக்கையை குறைக்க கலெக்டர் அறிவுறுத்தினார்.

மூன்று மாதங்களுக்கு மேலாக, பணியில்லாமல் சம்பளம் பெறும் பொறியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளை, வேறு மாநிலப் பணிக்கு மாற்றும் பணியை, அணுமின் கழகம் துவங்கியுள்ளது. குஜராத் மற்றும் ராஜஸ் தான் மாநில புதிய மின்நிலையங்களுக்கு, எட்டு பொறியாளர்கள் மாற்றப்பட்டுள்ளனர்.

# ஆங்கிலேயர் பெரியாறு அணை கட்டினார்; அம்மா அவருக்கு மணிமகுடம் கட்டுவார்

(சென்னை)

முல்லைப் பெரியாறு அணையைக் கட்டிய பொறியாளர் கேணல் பென்னி குயிக்குக்கு ரூபா1 கோடியில் மணிமண்டபம் கட்டப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார். முல்லைப் பெரியாறு அணையின் உள்ள தமிழ்நாடு மின்சார வாரிய வளாகத்தில் சுமார் 2,500 சதுர அடி பரப்பளவில் அவரது திரு உருவச் சிலையுடன் மணிமண்டபம் கட்டப் படும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.



மேற்குத் தொடர்ச்சி மலையில் பெய்யும் மழைநீர் முல்லை ஆறு மற்றும் பெரியாறு என்ற ஆறுகளாக கேரள மாநிலத்தில் ஓடி வீணாகக் கடலில் கலப்பதைத் தவிர்க்க முல்லைப் பெரியாறு அணை உருவாக்கப்பட்டது. இந்த அணை மூலம் மக்களின் குடிநீர்த் தேவையும், பாசனத் தேவையும் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. இந்த முல்லைப் பெரியாறு அணையை உருவாக்கியவர் கேணல் பென்னி குயிக் என்ற ஆங்கிலேயப் பொறியாளர். இவர் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இராணுவப் பொறியாளராக இருந்து இந்தியாவிற்கு வந்தவர்.

பெரியாறு அணை கட்டப் படுவதற்கு முன் வைகை வடிநிலப் பரப்பில் பலமுறை மழை பொய்த்து மிகுந்த உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. இதனால் பல்லாயிரக்கணக் கான மக்கள் பாதிக்கப்பட்டனர். இதனைக் கண்ட பென்னி குயிக், மேற்குத் தொடர்ச்சி மலையில் பெரியாற்றின் குறுக்கே அணை ஒன்றைக் கட்டத் திட்டமிட்டார். வீணாகக் கடலில் கலக்கும் நீரை, கிழக்குப் புறமாகத் திருப்பி விடுவதன் மூலம் வைகை நதி நீரை மட்டுமே நம்பியுள்ள பல இலட்சம் ஏக்கர் வரண்ட நிலங்கள் விளை நிலங்களாக மாறும் எனக் கருதி அவர் இந்தத் திட்டத்தைத் தீட்டினார். பென்னி குயிக் தலைமையில் ஆங்கிலப் பொறியிய லாளர்கள் இந்தக் கட்டுமானப் பணியினை மேற்கொண்டனர்.

கடும் இன்னல்களை எதிர்கொண்டு மூன்று ஆண்டுகளில் அணை பாதி கட்டப்பட்டது. அப்போது மழை, வெள்ளத்தால் கட்டுமானப் பணிகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டது. இந்தத் திட்டத்தைத் தொடர்வதற்கு ஆங்கிலேய அரசின் நிதி ஒதுக்கீடு குறிப்பிட்ட காலத்தில் கிடைக்கவில்லை.

ஆனால், பென்னி குயிக் இங்கிலாந்துக்குச் சென்று தனது குடும்பச சொத்துகளை விற்று, அதன்மூலம் கிடைத்தப் பணத்தைக் கொண்டு, முல்லைப் பெரியாறு அணையை 1895-ஆம் ஆண்டில் கட்டி முடித்தார். இதனால், தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள 2.23 இலட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதியைப் பெற்று வருகின்றன.

# அமெரிக்காவிற்கு ஈரான் பாராட்டு

உலகச் செய்திகள்

(தெஹ்ரான்)

அமெரிக்க கடற்படை கொமாண்டோக்களின் அதிரடி மீட்பு நடவடிக்கையைப் பாராட்டி, வரவேற்று ஈரான் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

வளைகுடாக் கடலில் இருந்து அமெரிக்கா வெளியேற வேண்டும் என்று ஈரான் எச்சரிக்கை விடுத்த பின்னரும், நடுக்கடலில் கடற் கொள்ளையரால் கைப்பற்றி வைக்கப்பட்டிருந்த ஈரானியக் கப்பலை அமெரிக்க கடற்படை மீட்டுக் கொடுத்திருக்கிறது.

இந்தச் சம்பவம் நடைபெற்றபின் வெளிநாட்டு ஊடகங்கள் பலவும், ஈரான் இதுகுறித்து நன்றிகூட தெரிவிக்காத போக்கு பற்றி எழுதியிருந்தன. ஈரானின் செய்தி முகவர் அமைப்பான ஃபார்ஸ், அமெரிக்கா தமது ஹீரோயிசத்தைக் காட்டுவதற்காக ஹொலிவூட் சினிமாப்பாணியிலான அதிரடி விளையாட்டு ஒன்றைக் காட்டியிருக்கிறது என்று குறிப்பிட்டிருந்தது. மேலும் எமது (ஈரானிய) கடற்படையும் கடலில் தத்தளித்த வேறு நாட்டுக் கப்பல்களுக்கு கடந்த காலங்களில் உதவிகள் பலசெய்திருந்தது.

ஆனால், அதையெல்லாம் நாம் விளம்பரப்படுத்தி எம்மை ஹீரோக்களாக காட்டிக்கொள்ளவில்லை. என்றும் எழுதியிருந்தது.

இதில் பெரிய வேடிக்கை என்னவென்றால், ஈரானிய புரட்சிப்படை கடலில் இரு மீனவர்களைக் காப்பாற்றினாலும் போடடோவுடன் செய்தி வெளியிடுவது ஃபார்ஸ் நியூஸ் ஏஜென்ஸி செய்திச்சேவைதான் எனத் தெரியவருகின்றது. இந்த நிலையில் ஆச்சரிய நிகழ்வாக, ஈரானிய வெளியுறவு அமைச்சின் அறிவிப்பு ஒன்று வெளியாகியுள்ளது.

வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் ராமின் மெஹ்மான் பரஸ்ட், ஈரானியக் கப்பலையும் மாலுமிகளையும் அமெரிக்கக் கடற்படை மீட்டுக் கொடுத்திருப்பது, சிறந்த மனிதாபிமானச் செயலாக பார்க்கப்பட வேண்டும். மற்றைய நாடுகளும் இக்கட்டான சூழ்நிலைகளில் இப்படியான போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஷடார் டி.வி.யின் அல்-அலம் அரேபிய மொழி அலைவரிசையில் தெரிவித்துள்ளார்.

# இராணுவத்துடன் யுத்தம் இல்லை பாகிஸ்தான் அரசு அறிவிப்பு

பாகிஸ்தான் இராணுவத்துடன் தனது அரசாங்கத்துக்கு யுத்தம் எதுவுமில்லை என பாகிஸ்தான் ஜனாதிபதி ஆஷிவ் அலி ஸர்தாரி தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் உதவி கோரி பாகிஸ்தான் ஜனாதிபதி ஆஷிவ் அலி ஸர்தாரி தரப்பினரால் அமெரிக்க அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டதாகக் கூறப்படும் குறிப்பொன்று பாகிஸ்தான் அரசியலில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. "மெமோகேட்" ஊழல் இது என்று வர்ணிக்கப்படுகிறது.

அமெரிக்காவிலுள்ள வர்த்தகரும் ராஜதந்திரியுமான மன்சூர் இஜாஸ் இந்த இரகசியக் குறிப்பை கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் அம்பலப்படுத்தினார். ஒசாமா பின் லேடனுக்கு பாகிஸ்தான் இராணுவம் அடைக்கலம் கொடுத்ததாகவும் அமெரிக்க சார்பான தேசிய பாதுகாப்புக் கட்டமைப்பொன்றை ஏற்படுத்த அமெரிக்க உதவியை நாடி எழு தப்பட்ட இந்தக் குறிப்பு அமெரிக்காவின் அப்போதைய பாதுகாப்பு படைகளின் பிரதம தளபதி மைக் முல்லனுக்கு அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.



இவ்விடயம் சம்பந்தமாக சுயாதீன ஆணைக்குழுவொன்றின் விசாரணைக்கு பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. எனினும் பாகிஸ்தான் அரசாங்கம் இதற்கு ஆட்சேபம் தெரிவித்தது. தேசிய பாதுகாப்பு விடயங்களை நாடாளுமன்றத் தெரிவுக்குழு மாத்திரமே விசாரிக்க முடியும் என பாகிஸ்தான் அரசாங்கம் கூறியுள்ளது.

இந்நிலையிலேயே ஜனாதிபதி ஸர்தாரி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். மேலும் இதுவொரு மோதல் என நீங்கள் எண்ணுகிறீர்கள். ஆனால் இது பரிணாமத்தின் ஒரு பகுதி. இந்த மோதல் பரிணாமமடைந்து கொந்தளிப்பு அடங்கிவிடும்" என அவர் தெரிவித்துள்ளார்.


# ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் - சுவிஸ்சர்லாந்திற்கும் 2012 இல் உறவில் சிக்கல் வருமா?

ஐரோப்பிய ஒன்றியத்திற்கும், சுவிஸ்சர்லாந்துக்கும் இடையிலான உறவுக்கு 2012ஆம் ஆண்டில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. கடந்த 1972ஆம் ஆண்டில் தடையில்லா வர்த்தகத்துக்கான ஒப்பந்தம் உருவாகியது. இதனைத் தொடர்ந்து இந்த ஒப்பந்தத்தில் சில மாற்றங்களைச் செய்தபடியே, இன்று வரை 120 ஒப்பந்தங்கள் உருவாகிவிட்டன.

இவை தொழில்நுட்பம் சார்ந்ததும் சாராததுமாக தெளிவாக வரையறுக்கப்பட்ட ஒப்பந்தங்களாகும். இந்த ஒப்பந்தங்கள் தவிர, இரண்டாம் நிலைக்கும் அப்பாற்பட்டு வேறு பத்து ஒப்பந்தங்களுக்காக பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. குறிப்பாக உறுப்பு நாடுகளின் நிதி நெருக்கடி காரணமாகப் புதிய வரிக்கொள்கையை உருவாக்குவதில் இந்தப் பேச்சுவார்த்தை முனைப்பாக நடக்கிறது. இது தவிர மின்சார விற்பனை, வேளாண்மை போன்றவை குறித்தும் புதிய ஒப்பந்தங்கள் உருவாக உள்ளன. ஏனென்றால் இதுவரை மின்சாரச்சந்தை குறித்து ஒப்பந்தம் எதுவும் உருவாக்கப்படவில்லை. இனி புதிதாக திட்டவட்டமாக ஓர் ஒப்பந்தத்தை உருவாக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

அணுசக்திக்கு எதிர்ப்பு ஏற்பட்டு வரும் நிலையில் புதுப்பிக்கப்படும் சக்தி குறித்து அனைவரும் சிந்திக்கத் தொடங்கி விட்டனர். ஐரோப்பாவுக்கு மின்சார வழங்குவதிலும், விற்பனையிலும் முக்கிய இடம் வகிக்கும் சுவிஸ்சர்லாந்து இனி அதனை விற்பதில் மிகுந்த கவனத்தோடு இருக்க வேண்டிய காலகட்டம் உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# கிரஹாம்பெல் பெற்றோருக்கு எழுதிய கடிதம்



(லண்ட்ன்)

தொலைபேசியின் பயன்பாடு குறித்த விளக்கப்படத்துடன் அலெக்சாண்டர் கிரஹாம் பெல் எழுதிய அபூர்வ கடிதம் ஏலத்துக்கு வருகிறது. உலகில் தொலைத் தொடர்பு துறை மிக வேகமாக முன்னேறி வருகிறது. இன்றைய நவீன தொலைத்தொடர்பு மற்றும் அதுசார்ந்த கண்டுபிடிப்புகளுக்கு முழு முதல் காரணகர்த்தாவாக விளங்கியவர் அலெக்சாண்டர் கிரஹாம் பெல். இவர் தனது உதவியாளர் தாமஸ் ஏ.வாட்சன் என்பவரின் உதவியுடன் முதல் தொலைபேசியைக் கண்டுபிடித்தார்.

அந்தக் காலத்தில், தொலைபேசியை எவ்வாறு பயன்படுத்துவது என்று விளக்கி அதன் செயற்பாடுகள் குறித்த படம் வரைந்து, ஒரு கடிதத்தை அவரது பெற்றோருக்கு அனுப்பினார். அவரின் கைப்பட எழுதிய 8 பக்கம் கொண்ட அந்தக் கடிதம் 1878ஆம் ஆண்டு டிசம்பர் 30ஆம் திகதி வோஷிங்டனில் இருந்து அனுப்பப்பட்டது.

அந்தக் காலத்து தொலைபேசி வயர்களில் மின்னல் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது என்றும், அது பயன்படுத்துவோரை தாக்கலாம் என்றும் பெல் கடிதத்தில் கூறியிருக்கிறார். ஆனால், முறையான பாதுகாப்பு ஏற்பாடு செய்து கொண்டால் அச்சப்படத் தேவையில்லை என்றும்அதை எப்படி மேற்கொள்வது என்பதை ஆழமாகவும், மிகத் தெளிவாகவும் படம் வரைந்து குறிப்பிட்டிருந்தார் கிரஹாம் பெல். இவர் எழுதிய மிகவும் அரிதான அந்தக் கடிதம் விரைவில் ஏலம் விடப்படுகிறது. இதை நியூ ஹம்ஷையரை சேர்ந்த ஆர்.ஆர். அமைப்பு ஏலம் விடுகிறது.

## சீனாவில் நில அதிர்வு

(பிஜீங்)

சீனாவின் வடக்குப் பகுதியில் நேற்று அடுத்தடுத்து நில அதிர்வுகள் உணரப்பட்டுள்ளன.

சின்யாங் பகுதியில் இந்த நில அதிர்வு உணரப்பட்டுள்ளது. முதலாவது அதிர்வு ஏற்பட்ட சில நிமிடங்களில் மற்றுமொரு நில அதிர்வு உணரப்பட்டதாகத்தெரிவிக்கப்படுகிறது. சம்பவத்தின் சேத விபரங்கள் இதுவரையில் வெளியாகவில்லை.

# பதிவிறக்கப் பெட்டகம்

மனிதவாழ்க்கையை இத்தனை உட்சிக்கல்கள் கொண்டதாக ஆக்குவது எது என்பது மிக முக்கியமான வினா. மனித மனம்தான். அது பல அடுக்குகளாகப் பிரிந்து தன்னைத் தானே கண்காணித்து தன்னைத்தானே கலைத்துக் கலைத்து அடுக்கிக்கொண்டு நிகழ்கிறது. மானுட மனமே அனைத்தையும் சிக்கலாக்கிக் கொள்கிறது. வாழ்க்கை நியதிகளை, உறவுகளை மட்டுமல்ல. இயற்கையைக் கூட அது பழமங்களாக ஆக்கி சிக்கலாக்குகிறது. **– ஜெயமோகன்**

ஒரு வகையில் பார்த்தால் தூய அன்பைக் கண்டு எல்லோரும் அஞ்சுகிறார்கள். நமக்கு லௌகீகமான ஒரு அன்பை ஏற்றுக் கொள்வதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் வெறுமனே செலுத்தப்படும் தூய அன்பு நம்மை அச்சுறுத்துகிறது.

**– கரமசோவ் சகோதரர்கள் நாவலில்**

ஒரு மனிதனுடைய தர்மம் அல்லது சுபாவமான பழக்க வழக்கங்கள், அவனையுமறியாமல் இன்னொரு மனிதனை வடுப்படுத்தும் சாதனங்களாகியும் விடுகின்றன. ராமன் தன் தர்மத்தைக் காப்பாற்ற முயல முயல, லட்சுமணன், பரதன், ஊர்மிளை, சீதை, வாலி, ராவணன் முதலிய பலருடைய வாழ்க்கைகள் வெவ்வேறு விதங்களில் நிலைகுலைந்து சிதறிப் போயின. **– ஆதவன்**

நம் கண்கள் முன்னாலேயே நாம் ஏமாற்றப்படுகிறோம். நமது ஒப்புதலுடனும் ஒத்துழைப்புடனும் நாம் அழைத்துச் செல்லப்படுகிறோம் பலிபீடத்திற்கு. நிஜங்களை விடவும் கனவுகள் சிறந்தவை என செய்தி ஊடகங்கள் திரும்பத் திரும்ப முழங்குகின்றன. என்றாகிலும், எப்படியாகிலும் பளபளப்பான அந்தக் கனவு வாழ்க்கையினை நாம் எட்டிப் பிடித்திட முடியும் என நம்பிக்கையூட்டப்படுகிறோம். வாழ்க்கையில் "முன்னேற வேண்டும்" எனும் அந்தப் பழமைவாதப் பாடத்தின் காலாவதியாகிப்போன இலட்சியத்தை முன்னிறுத்தி நாம் எல்லோரும் பரஸ்பரம் எல்லோரையும் சுரண்டி வாழ்கிறோம்.

**– கருத்து இதழில்**

அச்சம் மண்டிய நமது மனம் அதிகாரத்தின் வரையறைகளை விதிமுறைகளை எதிர்ப்பின்றி ஏற்றுக் கொள்கிறது. யாரும் ஒருவரை அடித்துக் கொன்றுவிட்டு "அவன் துரோகி" என்று சொல்வதே போதுமானதாக இருக்கிறது. துரோகியைக் கொல்லலாம்; விலைமாதைப் பாலியல் பலாத்காரம் செய்யலாம் என்பதையெல்லாம் நமக்குள் உறைந்து கிடக்கும் ஒழுக்க மதிப்பீடுகள் ஒப்புக்கொள்கின்றன. **– அ.மார்க்ஸ்**

பலதடவை அவனது அரசியல் வாழ்வில் இத்தகைய நிகழ்ச்சிகள் நடந்தபோது பழிவாங்க விருப்பமில்லாத தன் குணத்தை எதிரிகளை அழிக்கும் அஸ்திரமாகப் பயன்படுத்தியதுண்டு. தான் வாயால் சொல்லாமல் இருந்தும் தான் நினைப்பதை வேறு ஆட்கள் செய்ததுண்டு. தான் கறைபடாமலிருந்து வேறு ஆட்களைப் பயன்படுத்தி ஒரு காரியத்தைச் செய்வது சரியா? இத்தகைய தர்மம் சார்ந்த பிரச்சினைகள் தலையைப் பிய்த்துக்கொள்ள வைக்கும் வெகுநுட்பமான நியாயங்களாகும். **– யு.ஆர்.அனந்தமூர்த்தி**

ஒரு கொடிய செயலைச் செய்தவனின் மனதில் ஏற்படுவதை விட, அதைச் சும்மா பார்த்துக் கொண்டிருந்தவ னின் மனதில் அதிகளவு மனவேதனையை உண்டாக்கும் குற்றங்களும் இவ்வுலகில் உண்டு.

**– நிரபராதிகளின் காலம் நாடகத்தில்**

கத்தியின்றி ரத்தமின்றியும் ஏராளமான இன, மத, அரசியல் வன்முறைகள் கலவரங்கள் நிகழ்ந்தவாறே இருக்கின்றன. அப்பாவியும் அழகியதுமான சாமானிய மனிதவாழ்வு இதிலெல்லாம் சிக்கி அல்லலுற்று அவதிக்கு ஆளாகியிருக்கிறது. **– விட்டல்ராவ்**

திறமை பற்றிப் பேசுகிற குரல்கள் வெகுமக்களை திறமையற்ற முட்டாள்களாகவே கருதும். அவர்களுக்கு வாழ்வதற்குத் தகுதியில்லை என்பதே அவற்றின் தீர்ப்பாகவும் இருக்கும். திறமைசாலிகளைத் தலைவர்களாக, வழிகாட்டுபவர்களாக வைத்துக் கொண்டாட வேண்டியதுதான் மற்றவர்களது வேலை என்று நிர்ணயிக்கும். அதிலும் குறிப்பாக சமூகத்தின் விளிம்புக்குத் தள்ளப்பட்டவர்களை முட்டாள்களாக, அசுத்தமானவர்களாக, ஏமாற்றுக்காரர்களாக, குற்றவாளிகளாக சித்தரித்துக் காட்டும்.

**– கண்காணிப்பின் அரசியல்**

பாசிசத்துக்கான வெகுமக்கள் ஆதரவு ஏன் என்பதற்கு காரணம் இருக்கிறது. பாசிசம் மனித மனத்தில் அறிவை (reason) அழித்து உணர்வையே (emotion) அதிகம் பிரதானப் படுத்துகிறது. **– அ.மார்க்ஸ்**

# சுயநிர்ணய உரிமை பற்றி மேலும்...

**- தி.ஸ்ரீதரன் (சுகு)**

பௌத்த சிங்களப் பேரினவாதம் எவ்வாறு சிறுபான்மையாக இருக்கக் கூடிய சமூகங்களின் உரிமையை மறுககிறது? அது அரசாக இருப்பதால் வலிமையுடன் மறுக்கிறது. சாம, பேத, தான, தண்டம் எல்லாவற்றையும் பாவித்து மறுக்கிறது.

ஆனால் அரசாக இல்லாத யாழ்மையவாதம் முஸ்லீம் மக்களின் பிரச்சினைகளோ அல்லது மலையக மக்களின் பிரச்சினைகளோ யாழ்ப்பாணததில் சமூகரீதியாக ஒடுக்கப்பட்டவர்களின் பிரச்சினைகளோ யாழுக்கு அப்பாலான வடக்கு கிழக்கின் பிரச்சினைகளோ இரண்டாம் பட்சமானவையாகத்தான் அணுகுகின்றன என்பது துரதிர்ஷ்டமான உண்மையாகும்.

1970களில் கொண்டு வரப்பட்ட தரப்படுத்தல் வடக்கு கிழக்கின் பிரச்சினை அல்ல அது யாழ்ப்பாணத்தின் பிரச்சினை. யாழ்ப்பாணம் தவிர்ந்த பிற வடக்குகிழக்கு மாவட்டங்களுக்கு அது பாதிப்பை ஏற்படுத்தாத ஓரளவு பயனளிக்கக் கூடிய விதமாகவே இருந்தது.

இனப்பிரச்சினையின் வரலாற்றைச் சொல்லும் போது பல்கலைக்கழக அனுமதியில் 1970களின் முற்பகுதியில் தரப்படுத்தலை கொண்டுவந்ததை சொல்வது எவ்வளவு தூரம் பொருத்தமானது என்பது கேள்விக்குறியே.

அது மிகவும் பலவீனமானது.

யாழ்மையவாதம் வெறும் பிரதேசக் குறியீடு மாத்திரமல்ல. வர்க்க ஏறறத்தாழ்வின் குறியீடும் அது.

யாழ்மையவாதம் தன்னை ஈழப் போராட்டத்தின் அறிவாகவும் யாழ்ப்பாணத்தில் வறுமையில் உழல்பவர்களையும் ஏனைய பிரதேசங்களைச் சோந்தவர்களை உடல் உழைப்பாளிகளாகவும் வரிந்துகொண்டது. இது ஒரு வகை வருணாச்சிரம தருமமாகும்.

குருதிக் கொடையை வழங்குபவர்கள் இவர்களாகவும் சித்தாந்த வசிட்டர்களாக யாழ்மையவாதிகளும் இருக்கும் படியாக பார்த்துக் கொண்டார்கள்.

பிரபாகரனை முள்ளிவாய்க்கால் வரை அழைத்து வந்தவர்கள் இவர்கள் தான்.

இவர்கள் தேசம் சுயநிர்ணயம் என்று கூறுவது யாழ்மையவாதத்தின் அதிகாரம் தொடர்பிலான அகங்காரத்திலிருந்து தான். முஸ்லீம் மக்களுக்கு, மலையக மக்களுக்குள்ள உரிமைகள் பற்றி இவர்கள் பெரிதாக அலட்டிக் கொண்டதில்லை. 'தமிழ் பேசும்மக்கள்' என்ற அகத்தியரின் கமண்டலத்தில் முழுக் காவிரியையும் 'அடக்க' முயல்கிறார்கள். இந்த மக்களனைவரும் தேசமாக அமைவது வரலாற்றுவழிப்பட்டு சமத்துவமான உறவு முறைகளிலேயே. ஆனால இங்கு அந்த குணங்குறிகள் எதுவும் இருக்கவில்லை.



ஈழப்போராட்டத்தில் பங்குபற்றி மறைந்து போன மலையக இளைஞர்கள் பற்றி ஏன் முஸ்லீம் இளைஞர்கள் பற்றி மனக் கிலேசம் எதுவும் இருக்கிறதா? குற்ற உணர்வேதும் இருக்கிறதா? சமூக ஏணிப்படியின் அடித்தட்டில் உழலும் மக்களின் பிள்ளைகள் ஆயிரமாயிரமாய் மடிந்தார்களே அவர்களின் குடும்பங்களுக்கு ஏதாவது அங்கீகாரம் இருக்கிறதா? இயக்கத்துக்குப் போனதுகள் தொட்டுக் கொள்ள கூடாததுகள். அவர்களுக்கு இப்போது முகமே கிடையாது.

நாங்கள் சர்ச்சையில் சம்பந்தமில்லாதவர்கள், இந்த அசிங்கம் எங்களுக்கு சகிக்க முடியவில்லை என்று மூக்கால் தமிழ் கதைப்பவர்களின் பாணிபோடும் கனவான்களின் வானத்துக்கும் பூமிக்குமிடையிலான பாசாங்குத்தனமான பாய்ச்சல் தான் சகிக்க முடியவில்லை.

இவர்கள் தாம் பதிவிரதைகள் என்றும் மற்றவர்கள் விபச்சாரம் செய்பவர்கள் என்றும் பூடகமாகச் சொல்ல வருகிறாரகள். இதுவும் யாழ்மையவாதத்தின் கதையளப்புத்தான்.

நேரடியாக துப்பாக்கி ஏந்தி குற்றமிழைத்த சாதாரண இளைஞனை விட அதற்கான சித்தாந்தத்தை உருவாக்கி கொடுத்தவன் ஆபத்தானவன். இவர்களுக்கும் இந்த வகையறாக்களுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை.

சாதாரண இளைஞனும் யுவதியும் பிரக்ஞை பூர்வமாகவே தாங்கள் தேச விடுதலைக்குத்தான் போராடுவதாகக் கருதிக் கொணடார்கள்.. விதிவிலக்குகளும் பரவலாக இருந்திருக்கிறது.

பிரபாகரனையும் புலிகளையும் முள்ளிவாய்க்கால் வரை அனுப்பியவர்கள் இப்போதுள்ள கொஞ்சநஞ்ச இடைவெளியில் சமூகத்திற்கு சௌகரியமாக நஞ்சை வார்க்கத் தொடங்கி விட்டார்கள்

முன்னர் இயக்கங்களில இருந்து எல்லா தப்பு தண்டாவுக்கும் வழி வகுத்து விட்டு தங்களை புனிதர்களாகச் செபிப்பவரகளையும் சகிக்க முடியவில்லை.

வேற்றுமையில் ஒற்றுமை காணும் வெவ்வேறு சமூகங்களின் வரலாற்றுவழிப்பட்ட தனித்துவ அடையாளங்களை இவர்கள் ஆதரிக்க தயாரில்லை.

சுயநிர்ணம் தேசியம் பற்றிய கோரிக்கைளை வர்க்கப் பிரச்சினைக்கும் இவற்றுக்கிடையே பெரும் தடைமதில் சுவர்களை எழுப்பமுடியாது.

எகிப்தில் தல் அஹிர் சதுக்கத்தில் ஜனத் திரள் முபராக்கை வீழ்த்தியது. அதற்குப் பதிலீடாக அமைந்த இராணுவத்தையும் பொதுஜனங்கள் வேண்டாம் என்று விட்டார்கள். தற்போது தேர்தல் நடைபெற்றிருக்கிறது. ஆனால் இது புக்குஜோமா கூறியது போல் வரலாற்றின் முடிவல்ல.

மத்திய கிழக்கிலும் வடஆபிரிக்காவிலும் இராணுவ வகைப்பட்ட பழமைவாத சர்வாதிகாரிகளுக்கெதிராக கிளர்ச்சிகள் நடந்தேற, அமெரிக்கா தொடக்கம் கிரேக்கம் வரை வளங்கள் சமத்துவமாகப் பகிரப்படவேண்டும் - ஒரு சிலர் நாட்டின் செல்வத்தை சூறையாட அனுமதிக்கமுடியாது என பல்தேசிய பகாசுரர்களுக்கு மேற்கின் வடஅமெரிக்காவின் சாமானிய மக்கள் வீதிகளில் இறங்கி சவால் விடுத்துள்ளனர். ஆக்கிரமிப்பு காலனி ஆதிக்கத்திற்கெதிராகவும் அவர்கள் குரல் எழுப்புகின்றனர். இந்த இரு போக்குகளும் ஒன்றோடொன்று இயக்கவியல் தொடர்பு கொண்டவை.

புக்குஜோமா சோவியத்யூனியனின வீழ்ச்சி மற்றும் 90களில் ஏற்பட்ட மாற்றங்களையொட்டி சரித்திரத்தின் முடிவு பற்றி எழுதினார். தற்போதைய தாராளவாத முறைமையே நிரந்தரமானது என எழுதினார். பல்தேசிய கம்பனி களின் உலகம் புக்குஜோமாவின் எழுத்தை தூக்கிப் பிடித்தது. வரலாற் றின் இயக்கவியலை நிராகரித்த இந்த எழுத்து எவ்வளவு தூரம் எதார்த்தத்திற்கு புறம்பானது என்பதை பகுத்தறிவுள்ளவர்கள் புரிந்து கொள்வார்கள். அதிக காலம் பிடிக்கவில்லை.. வரலாறு சும்மாவிடவில்லை. 15 வருடங்களுக்குள்ளேயே புக்குஜோமாவின் முகத்தில் கோரமாக அறைந்துள்ளது.

இலங்கை தழுவிய அளவில் இந்து சமுத்திரப் பிராந்தியம் தழுவிய அளவில் உலகளாவிய அளவில் எமது சிந்தனையை விசாலப்படுத்துவது அவசியமானது.

இலங்கை ஜனநாயகப்படுவதும் பல்லின நாடாக மாறுவதும் அவசியமானது. இதற்கு இலங்கையின் சகல சமூகங்கள் மத்தியிலும் ஊடாட்டம் இருப்பது அவசியமானது.

மாக்சியவாதிகள் அல்லாத அறிஞர்களும் சுயநிர்ணய உரிமை பற்றி பேசியிருக்கிறார்கள். 1980களின் முற்பகுதி சமகாலத்தில் பெனடிக் அண்டர்சன் முக்கியமானவர். இவர் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் அடிப்படையிலேயே தனது ஆராய்ச்சிகளை மேற்கொண்டதாக கூறப்படுகிறது. அதாவது ஆதிவாசிமக்கள் போலவோ அன்றி நிலமானிய சமூகத்தின் மக்கள் போன்றோ அல்லாமல் ஒருவரை ஒருவர் நேரடியாக அறியாமல் தம்மை ஒரு சமூகமாக (தேசமாக) உணர்வு நிலையில் கருதுபவர்கள் பற்றியும் அவர் குறிப்பிடுகிறார். பல புதிய ஆய்வாளர்கள் என்று சொல்லப்படுபவர்களால் இவர் மேற்கோள் காட்டப்படுகிறார்.

நிலமானிய சமூகத்தின் வீழ்ச்சி, கைத்தொழில் புரட்சி, சந்தைக்கான பொதுமொழி, கலாசாரம் என்பவற்றின் அடிப்படையிலேயே மாக்சியம் தேசியம் சுயநிர்ணய உரிமை பற்றிய ஆரம்ப கருத்துக்களை உருவாக்கியது.

'ஓடும் நீரை திரும்ப அதே இடத்தில் அள்ள முடியாது.' என்ற ஹெரிகிளிட்டஸ்சின் பிரபல வார்த்தைபோல் கருத்துநிலைகளில் மாற்றங்கள் நிகழும் செழுமையுறும்.

பேஸ்புக், ருவிட்டர் காலத்தில் சுயநிர்ணயம் தேசத்தின் அர்த்தங்கள் இன்னும் விசாலமாகலாம்..

ஒன்று மட்டும் உண்மை. சமூகம் எந்தளவுக்கு ஜனநாயக மயப்படுகிறதோ அந்தளவிற்கு மக்கள் மனதளவில் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான நிலைமைகள் ஏற்படும். சமூக பொருளாதார அபவிருத்தி என்பதும் அவ்வாறுதான்.

நாடு, வெவ்வேறு சமூகங்கள், தனி மனிதர் இவர்களிடையிலான இயங்கியல் உறவு விளங்கிக் கொள்ளப்பட வேண்டும்.

> "ஈழப்போராட்டத்தில் பங்குபற்றி மறைந்து போன மலையக இளைஞர்கள் பற்றி ஏன் முஸ்லீம் இளைஞர்கள் பற்றி மனக கிலேசம் எதுவும் இருக்கிறதா? குற்ற உணர்வேதும் இருக்கிறதா? சமூக ஏணிப்படியின் அடித்தட்டில் உழலும் மக்களின் பிள்ளைகள் ஆயிரமாயிரமாய் மடிந்தார்களே அவர்களின் குடும்பங்களுக்கு ஏதாவது அங்கீகாரம் இருக்கிறதா? இயக்கத்துக்குப் போனதுகள் தொட்டுக் கொள்ள கூடாததுகள். அவர்களுக்கு இப்போது முகமே கிடையாது."

# யாருக்காக அழுதார்கள்?

கடந்த 60 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரேயொரு குடும்பம்தான் வட கொரியாவை ஆட்சி செய்து வருகிறது. 1948இல் வட கொரியா உருவானதிலிருந்து 1994ஆம் ஆண்டுவரை கிம் இல்-சுங் ஆட்சியில் இருந்தார். அவரது மறைவுக்குப் பிறகு அவரது மகன் கிம் ஜோங்-இல் ஆட்சிக்கு வந்தார். 17 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த அவர், கடந்த 17ஆம் திகதி இறந்துவிட்டார். மாரடைப்பு காரணமாக அவர் உயிர் பிரிந்ததாக வட கொரிய அரசு அறிவித்தது.

கிம் ஜோங் இல் இறந்த செய்தி வெளியானதும், பலர் மார்பில் அடித்துக் கொண்டு வீதிகளில் ஓடியதை தொலைக்காட்சியில் காட்டினார்கள். பெண்கள் வீதிகளில் விழுந்து அழுது புரண்டனர். கண்ணீர் பெருக்கெடுத்து ஓடும் முகங்களையும், தரையில் கைகளை அறைந்தபடி அழுது கொண்டிருந்த மக்களையும் காண முடிந்தது. நேரடி ஒளிபரப்பு நிகழ்ச்சியில், செய்தி வாசிப்பாளரே அழுகையை அடக்க முடியாமல் கண்ணீர் விட்டார். சர்வாதிகாரிகள் மீது மக்களுக்கு இவ்வளவு அன்பா?

வடகொரியாவில் ஆட்சியாளருக்கு ஆண்டவனுக்கு நிகரான இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. நம்மூர் தொலைக்காட்சிகளில் பக்திப்பாடல்களைப் பாடுவது போல அங்கு ஆட்சியாளரைப் புகழ்ந்து பாடல்கள் ஒளிபரப்பாகும். அவரது பராக்கிரமங்களைக் கூறும் நிகழ்ச்சிகள் முக்கிய இடம்பிடிக்கும். அவரது பிறந்த ஊரின் மகிமை போற்றப்படும். செய்தித்தாள்கள், வானொலி, தொலைக்காட்சி எல்லாம் அரசின் பிடியில் இருக்கின்றன. சினிமா, கலை போன்றவைகூட ஆட்சியாளரின் சொல்படிதான் நடக்க வேண்டும்.

இப்படிப்பட்ட நாட்டில், ஆட்சியாளரின் மரணத்துக்காக மக்கள் அழுகிறார்கள் என்றால் அது உண்மையானதாக இருக்காது, இராணுவ நிர்ப்பந்தம் காரணமாக இருக்கும் என்று சிலர் விமர்சிக்கிறார்கள். அல்லது நாட்டின் எதிர்காலத்தை பற்றிய பயத்தின் காரணமாகவும் மக்கள் அழுதிருக்கலாம் என்கிறார்கள். ஆனால், பஞ்சத்திலும் பட்டினியிலும் சிக்கியிருந்த ஒரு நாட்டை மீட்டு, நெருக்கடியான தருணங்களில் வழிநடத்தி, உலக அளவில் தனியிடத்தை உருவாக்கித் தந்த ஒருவரின் பிரிவால் மக்கள் வருந்துவது இயல்பானதாகவும் இருக்கக்கூடும்.

இப்போது பதவிக்கு வரும் கிம் ஜோங்-உன்னுக்கு இன்னும் 30 வயதுகூட ஆகவில்லை. தந்தை உருவாக்கி வைத்திருக்கும் கட்டுக்கோப்பான நிர்வாகத்தின் காரணமாக அவரால் எந்தப் போட்டியும் இல்லாமல் தலைமைப்பதவிக்கு வர முடிந்திருக்கிறது.



மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டு வடகொரியா மீது நீண்டகாலமாக இருக்கின்றன. உணவுக்காக் சீனா போன்ற நாடுகளிடம் கையேந்த வேண்டியிருக்கிறது. வேலைவாய்ப்பின்மையும் பெரிய தலைவலியாக இருந்து வருகிறது. கொஞ்சம் அலட்சியமாக இருந்தாலும் ஈராக், லிபியா போன்ற நாடுகளைப் போல வழிக்குக்கொண்டுவர மேற்கத்திய நாடுகள் துடித்துக்கொண்டிருக்கின்றன.

பொதுவுடைமைக்கும் முதலாளித்துவத்துக்கும் இடையே தடுமாறிக்கொண்டிருக்கும் சீனாவை, வடகொரியா நீண்டகாலத்துக்கு நம்பியிருக்க முடியாது. நல்லதோ கெட்டதோ, அழிவுசக்தியான அணு ஆயுதத்தை மட்டும் நம்பியிருக்கும் நிலையில்தான் வடகொரியா இருக்கிறது. அதைச் சாமர்த்தியமாக கையாளுவதுதான் மக்களின் கண்ணீர் பற்றிய கேள்விக்கு புதிய தலைவர் தரும் பதிலாக இருக்கும்.

**- புளியங்குடி பூலியன்**

# வடக்கின் தற்போதைய நிலவரம் யாழ். வந்த கனேடிய குழு ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடபகுதியில் பொதுமக்களின் வாழ்வியல் நிலவரங்கள் குறித்தும், வாழ்வாதாரம் மற்றும் வீட்டு வசதிகள் குறித்தும் கனேடிய நாடாளுமன்றத்தின் குடிவரவு மற்றும் பல்கலாசார செயலாளர் சுங்செனவெங் தலைமையிலான குழுவினர் ஆராய்ந்துள்ளனர்.

யாழ். மாவட்டத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்ட போதே நேற்றுக்காலை 11.00 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் அரச அதிபரைச் சந்தித்து மேற்படி விடயங்கள் குறித்து கலந்துரையாடினர்.

யாழ். மாவட்டத்தில் போருக்குப் பின்னரான அபிவிருத்தி செயற்பாடுகள், சுகாதார வசதிகள், இந்திய வீட்டுத் திட்டங்கள் போன்றவை இதுவரை நிறைவு செய்யப்பட்டிருக்கின்றதா என்பது குறித்தும் அவற்றின் முன்னேற்றம் குறித்தும் இக்குழுவினருக்கு விளக்கமளிக்கப்பட்டது.

மேலும் வடபகுதி மாணவர்களின் கல்விச்செயற்பாடுகள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகள் குறித்தும் கல்வி ஆய்வுகூடங்களின் தேவை குறித்தும் ஊர்காவற்றுறை, மண்டைதீவு ஆகிய பகுதிகளில் குடிநீர் பிரச்சினை நிலவி வருவதாகவும் அவற்றைத் தீர்ப்பதற்கான உதவிகளை செய்யுமாறும் மேற்படி கனடா நாட்டு குழுவினரிடம் யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார் கோரிக்கை விடுத்துள்ளார்.

அரச அதிபரின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு பதிலளித்த கனடா நாடாளுமன்ற் குடிவரவு மற்றும் பல்கலாசார செயலாளர் சுங்செனவெங், சீன அரசாங்கம் குடிநீர் தொடர்பான பிரச்சினைகளை முன்னெடுத்துள்ளதாகவும், யாழ். குடாநாட்டின் அபிவிருத்தி மற்றும் கல்விச் செயற்பாடுகள் தொடர்பாகவே கனடா அரசாங்கம் உதவி செய்ய முன்வரும் என உறுதியளித்தார். (எஸ்)

## வேகமாக பரவுகிறது...

அவர்களில் 17 பேருக்கு தைபஸ் காய்ச்சல் என உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக அப்பிரிவு தெரிவித்துள்ளது.

இத்தொகையில் கடந்த டிசம்பர் மாதத்தில் மட்டும் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 36 பேரும், உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 33 பேரும் காய்ச்சல் அறிகுறிகளுடன் அவதானிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் குறித்த பகுதிகளிலேயே இக்காய்ச்சலினால் பீடிக்கப்பட்டவர்கள் இனங்காணப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வயல் நிலங்கள், பற்றைகள், குப்பை கூழங்கள், பூண்டுகள் செறிந்து காணப்படும் பகுதிகளிலேயே குறித்த தைபஸ் காய்ச்சல் ஒட்டுண்ணி மூலம் வெகுவாகப் பரவக்கூடிய சூழல் தென்படுவதாகவும் மக்கள் தமது பகுதிகளில் உள்ள இவ்வாறு அடையாளம் காணப்படும் பகுதிகளில் நடமாடும்போது முன்னெச்சரிக்கையுடன் நடந்துகொள்வதுடன், தமது பகுதிகளை சுத்தமாக வைத்திருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (பா)

## இலங்கையை...

தமிழர்களுக்கு மட்டுமன்றி இலங்கையில் யாவருக்கும் நன்மையளிக்கும்.

1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தம் பற்றி கருத்துத் தெரிவித்த ஜி.பார்த்தசாரதி, இந்திய அமைதிப்படை சமாதானத்தை பேணும் அதேவேளை புலிகளுடன் போராட வேண்டியிருந்ததால் ஒரு இக்கட்டான சூழலில் செயற்பட்டது. இரண்டு தரப்பினருமே அத்துமீறலில் ஈடுபட்டனர்.

புலிகள் இயக்கம் இலட்சிய பிடிப்போடு ஈவிரக்கமின்றி செயற்பட்டதெனவும் தலைவரின் வார்த்தையே சட்டமாக இருந்ததெனவும் கூறிய அவர், வீரம் இருந்தளவுக்கு அவர்களுக்கு தூரப்பார்வை இருக்கவில்லையெனவும் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமை மீறல் தொடர்பில் இலங்கையை கண்டிப்பதில் பிரயோசனம் இல்லை. இந்த விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபை இந்தியாவை ஆதரிக்கலாம். ஆனால் அமெரிக்கா ஒரு நிலைப்பாட்டில் இல்லை. பீஜிங், இஸ்லாமிய நாடுகள் ஏன் முழு ஆசிய நாடுகளுமே மனித உரிமை தொடர்பில் இலங்கையைத் தண்டிக்கும் எந்த நடவடிக்கையையும் எதிர்க்குமெனவும் அவர் கூறினார்.

## வடமாகாண சபைத்...

உள்ளே வந்து எதிர்ப்பதற்கும் வித்தியாசம் உள்ளதென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெருமை தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகளுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை கோருவதற்கு முன்னர் வட மாகாண சபையை நிறுவவும் அதற்கான தேர்தலை நடத்தவும் அரசாங்கத்தை கூட்டமைப்பு வலியுறுத்த வேண்டும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் அவர்களின் பிரச்சினைகளை தீர்க்கவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அவசியம் இருப்பின் அரசாங்கத்துடன் ஒத்துழைப்புடன் செயற்படவேண்டும். தமிழ் மக்களின் 35 வீதமான வாக்குகள் எங்களுக்கும் கிடைத்துள்ளன எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

கடந்த 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதவிக்கு வந்ததும் இரண்டு தடவைகள் புலிகளுடன் பேச்சு நடத்தினார். ஆனால் புலிகள் அவற்றை புறக்கணித்தனர். பல்வேறு விமர்சனங்களுக்கு மத்தியில் இதனை அரசாங்கம் முன்னெடுத்தது. அதாவது பேச்சு வார்த்தையூடான தீர்வில் எமது அர்ப்பணிப்பு அப்போது வெளிப்பட்டது. அதற்காகவே இதனை நினைவூட்டுகின்றேன்.

தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளுள் அதிக ஆசனங்களைப் பெற்றுள்ள கட்சி தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்று கூறுவதனை யாரும் மறுக்கமாட்டார்கள்.

அவ்வாறு தமிழ் மக்களின் அதிக பிரதிநிதித்துவங்களை பெற்றுள்ள கட்சி ஒன்று எவ்வாறு செயற்படவேண்டும். அந்த மக்களின் பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் அரசாங்கத்துடன் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கு காணப்படுகின்ற சந்தர்ப்பங்களை இழக்கக் கூடாது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஜனநாயக அரசியலுக்கு உதாரணமாக திகழ்கின்றவர். அவருக்கு நாங்கள் உயர்ந்த கௌரவத்தை செலுத்திவருகின்றோம். இந்நிலையில் ஜனநாயக அரசியல் செயற்பாட்டில் அவர்கள் நம்பிக்கை வைத்து அரசாங்கத்துடன் ஒத்துழைப்புடன் செயற்படவேண்டும்.

அனைத்துக் கட்சிகளுடனும் கலந்துரையாடி பொது இணக்கப்பாட்டின் அடிப்படையில் தீர்வு ஒன்றை காண்பதற்காக நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அந்த ஜனநாயக செயற்பாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கெடுக்கவேண்டும்.

ஆனால் அதில் பங்கெடுக்காமல் எதிர்ப்பதற்கும் உள்ளே வந்து எதிர்ப்பதற்கும் வித்தியாசம் இருக்கின்றது. தெரிவுக்குழுவில் பங்கெடுக்காமல் அதனை எதிர்ப்பதாயின் அதில் வேறு நோக்கங்கள் இருப்பதாகவே நாங்கள் சந்தேகிக்கவேண்டிவரும்.

30 வருட கால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழுகின்ற பிரதேசங்களின் நன்மை கருதியே கூட்டமைப்பு செயற்படவேண்டும் எனவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

## வேட்டைக்கு...

சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து சடலம் மீட்கப்பட்டு விசாரணை தொடர்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. (04)

## கிளிநொச்சி...

இதனையடுத்து அடுத்த கட்டமாக பதினைந்து கிராம அலுவலர் பிரிவுகளுக்கு ஒரு சமுர்த்தி வங்கி என்ற அடிப்படையில் வங்கிகள் ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய இந்த ஆலோசனைக் கூட்டத்தில் சமுர்த்தித் திட்டத்தின் உதவி ஆணையாளர் நடேசராசா, யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் சிவஸ்ரீ, மேலதிக அரசாங்க அதிபர் ஸ்ரீனிவாசன், திட்டப்பணிப்பாளர் திருமதி ஜெயராணி ஆகியோர் கலந்துகொண்டனர்.

## தூக்கில்...

வசிப்பிடத்துக்கு பின்புறமாக உள்ள பலாமரத்தில் 20 அடி உயரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாகக் காணப்பட்டார்.

தகவல்அறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த கோப்பாய் பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டனர்.

மரணவிசாரணைகளை பதில் நீதவான் மு.திருநாவுக்கரசு மேற்கொண்டார். மரண விசாரணைகளின் பின்னர் சடலம் உடற்கூற்றியல் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இறந்தவர் மயிலிட்டியில் இருந்து இடம்பெயர்ந்து, உரும்பிராய் அகதிமுகாமில் வசித்து வந்தவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# கோலாகல தைப்பொங்கல் நகரிலிருந்து பஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

தமிழர் திருநாள் பொங்கல் நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் பொதுமக்கள் நலன்கருதி மேலதிக பிரயாண வசதிகளை இலங்கை போக்குவரத்து சபை ஒழுங்குசெய்துள்ளது.

இம்மாதம் 11 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை யாழ். நகரின் பல்வேறு பகுதிகளுக்குச் செல்ல போக்குவரத்து ஒழுங்குசெய்யப்பட்டுள்ளதுடன், தினமும் யாழ். குடாவின் அனைத்துப் பகுதிகளுக்கும் யாழ். முற்றவெளியிலிருந்து கடைசி பஸ் சேவை இரவு 10.00 மணிக்கு நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## போரினால் அழிவடைந்த...

வேண்டுகோள் விடுத்துள்ளார். நேற்றுப் பிற்பகல் 3.00 மணியளவில் ஆயர் இல்லத்தில் கனடா நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோய் டானியல் தலைமையிலான குழுவினருடான சந்திப்பின் போதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

முன்னதாக ஆயரைச் சந்தித்த கனடா நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோய் டானியல் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் இலங்கைக்கு உதவி புரியுமுகமாகவே தமது குழுவினரது விஜயம் அமைந்திருப்பதாக குறிப்பிட்டதுடன், எதிர்பார்க்கும் உதவிகளைக் குறிப்பிடுமாறும் ஆயரைக் கேட்டுக் கொண்டார்.

இதற்குப் பதிலளித்த ஆயர் யுத்தத்தின்போது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் 80 வீதமான வீடுகள் முற்றாக அழிவடைந்து போயிருப்பதாக குறிப்பிட்டதுடன், இலங்கை அரசாங்கம் இவ்வாறான பொதுமக்களது வீடுகளை நிர்மாணித்துக்கொடுத்து வருகின்ற போதிலும் அது போதுமானதாக இல்லை. இவ்விடயத்தில் கனேடிய அரசாங்கம் தன்னாலான உதவியைப் புரியவேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் பெருமளவு இளைஞர்கள் தொழிலின்றியுள்ளனர். அவர்கள் வேறு வழிகளில் திசைதிரும்பாமல் இருப்பதற்கு அவர்களுக்கு தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்குமுகமாக தொழிற்சாலைகள் அமைக்கப்படல் வேண்டும், பொதுமக்களுக்கு சுத்தமான குடிநீர் கிடைப்பதற்கு வசதி செய்து கொடுக்கப்படல் வேண்டும், கனடாவில் பெரும் எண்ணிக்கையிலான தமிழர்கள் வசித்து வருகின்றனர். அவர்களுக்காக கனேடிய அரசாங்கம் தமிழ்மக்களுக்கான அரசியல் தீர்வை பெற்றுத்தருவதற்கு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும் எனவும் தெரிவித்ததுடன், யாழ். மாவட்டத்தில் 80 வீதமானவர்கள் இந்துக்கள், 20 வீதமானவர்களே கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் எனவும் தெரிவித்தார்.

ஆயர் இல்லத்தில் சந்திப்பை முடித்த குழுவினர் பிற்பகல் யாழ். நகரின் பகுதிகளுக்கும் விஜயம் செய்தனர். இச்சந்திப்பின் போது குழுவினருடன் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரும் கலந்துகொண்டிருந்தார். (பா)

## ஆணைக்குழுவின்....


பலவும் வலியுறுத்துகின்றன. இவற்றுக்கு பதிலளிக்கும் வகையிலேயே உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை அமைந்துள்ளது.

மிகவும் சுயாதீனமாகவும் சட்ட ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவுமே நல்லிணக்க ஆணைக்குழு கடந்த பல மாத காலமாக பொதுமக்களிடமிருந்தும் சம்பந்தப்பட்ட தரப்புகளிடமிருந்தும் சாட்சியங்களைப் பெற்றுக்கொண்டது. நல்லிணக்க ஆணைக்குழு பல பரிந்துரைகளைக் கூறியுள்ளதுடன், போர் இடம்பெற்ற காலப்பகுதியில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளுக்கும் வலியுறுத்தியுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதத்தில் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அமர்விலும் இலங்கையின் மனிதவுரிமை தொடர்பிலான முன்னேற்றங்கள் குறித்து வெளிப்படுத்த முடியும். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடம்பெற்றால்தான் அரசியல் தீர்வு என்பது யதார்த்தமாகும். எனவே கூட்டமைப்பு அதில் பங்கெடுக்கவேண்டும்.

அரசாங்கத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சு நடத்தினாலும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் இடம்பெறுவது அவசியமானதாகும். காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட மேலும் பல கட்சிகளுடன் தீர்வு விடயம் தொடர்பில் பேச்சு நடத்த வேண்டும் எது எவ்வாறெனினும் அரசியல் தீர்வு செயற்பாட்டில் பொலிஸ் அதிகாரங்களை உள்ளடக்குவது சாத்தியமற்ற விடயமாகும்.

இலங்கை போன்றதொரு நாட்டில் மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது சாத்தியமற்றதாகவே காணப்படுகின்றது எனவும் அமைச்சர் கூறினார்.



# வீட்டுத் திட்டங்களின் தாமதம் இந்திய நன்மதிப்பைப் பாதிக்கும்

## துணைத் தூதுவர் மகாலிங்கம்

(கொழும்பு)

இந்திய வீட்டுத்திட்டம் அமைப்பதில் ஏற்படும் தடங்கல்களை நீக்குவதில் யாழ்ப்பாணத்திற்கு வருகைதரும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா அதிக கவனம் செலுத்துவார் என யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதுவர் எஸ்.மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

அரசியல் தீர்வுத்திட்டத்திலும் பார்க்க இந்திய வீட்டுத்திட்டத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்படவுள்ளதாக தெரிவித்துள்ள மாகாலிங்கம், இவ்வீட்டுத் திட்டங்கள் இந்திய நிறுவனத்தால் அமைக்கப்பட்டு வருகின்றது.

எண்ணிக்கையில் குறைந்தளவான வீடுகளே இதுவரை அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வீட்டுத்திட்டங்களின் தாமதம் இந்திய அரசாங்கத்தின் நன்மதிப்பைப் பாதிக்கின்றது. எனவே, இவற்றைத் துரிதப்படுத்துவதற்காக இலங்கைக்கு வரும் வெளிவிவகார அமைச்சர் கிருஸ்ணா மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சும் இணைந்து நடவடிக்கைகளை எடுக்கவுள்ளன.

இவற்றை அமைப்பதை துரிதப்படுத்துவதற்கான வழிவகைக்கேற்ப பயனாளிகள் நேரடியாக வீடுகளை அமைப்பதற்கு தற்போது கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

பயனாளிகள் வீடுகளை அமைக்கும்போது வேலை முன்னேற்றத்திற்கேற்ப இந்திய தூதரகத்தினால் வங்கி ஊடாக இவர்களுக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இந்த அடிப்படையில் 38 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படுவதற்கும் 6 ஆயிரம் வீடுகள் பயனாளிகளால் அமைக்க முடியாத காரணத்தால் ஒப்பந்தகாரர் மூலம் அமைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவ்வீடுகள் அமைக்கும் விடயத்தில் நீண்டகால அனுபவத்தைக் கொண்டிருக்கும் ஐ.நா. நிறுவனமான யுனப்சின் திட்டமுகாமைத்துவ ஆலோசனையும் பெறப்படவுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் 9 ஆயிரம் வீட்டுத்திட்டத்தில் அரியாலையில் கட்டப்பட்டுள்ள 30 வீடுகளே எதிர்வரும் 18 ஆம் திகதி இந்திய வெளிவிவகார அமைச்சரால் பயனாளிகளிடம் கையளிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## முல்லைத் தேர்தல் கலந்துரையாடல்

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒத்தி வைக்கப்பட்ட புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபைகளுக்கான தேர்தல் தொகுதிகளில் தேர்தல்களை நடாத்துவது தொடர்பில் தேர்தல் செயலகம் கவனம் செலுத்திவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரு பிரதேச சபைகளுக்குமான தேர்தல்களை எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதி நடத்துவது தொடர்பில் கட்சி செயலாளர்களுடன் கலந்தாலோசிக்க திர்மானித்துள்ளதாகவும் தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

இத்தேர்தல் தொகுதிகளில் கண்ணிவெடிகள் அகற்றப்படாமையின் காரணமாக மக்கள் மீள்குடியேறவில்லை. இதனால் இங்கு தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### கொக்குத்தொடுவாயில் மீள்குடியமர்வு ஆரம்பம்

கடந்த கால போர் நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாமில் வசித்து வந்த கொக்குத்தொடுவாய் மக்கள் தங்களது சொந்த இடங்களில் மீண்டும் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் பணிமனையின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்ற இம்மீள் குடியேற்ற நடவடிக்கையின் போது அப்பகுதியில் சுமார் 21 குடும்பங்களைச் சேர்ந்த 57 பேர் குடியமர்த்தப்பட்டனர்.

கடந்த காலத்தில் இப்பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றுவது தாமதமடைந்து வந்ததன் காரணமாக மீள்குடியேற்றம் இப்பகுதியில் சாத்தியமற்று காணப்பட்டது. எனினும் அண்மையில் குறித்த பகுதியில் கண்ணிவெடி அகற்றப்பட்டதை அடுத்து மீள்குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (17)

# மீள்மதிப்பீட்டின் பின்னர் பெறுபேற்றில் மாற்றம்

## கூறுகிறார் கல்வி அமைச்சர்

(கொழும்பு)

க.பொ.த உயர்தரப் பெறுபேற்றின் மீள்மதிப்பீட்டின் பின்னர் பரீட்சைப் பெறுபேறுகளில் மாற்றம் ஏற்பட வாய்ப்புள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயர்தரப் பரீட்சையில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலைமையைத் தீர்க்கும் நோக்கில் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவினர் என்னிடம் இது வரையில் தகவல்களைக் கோரவில்லை.

எனினும், தகவல்கள் கோரினால் வழங்கத் தயார் நிலையில் உள்ளேன்.

மீள்மதிப்பீட்டின் மூலம் இலாபம் உழைக்க முடியாது. விடைத்தாள் மீள் மதிப்பீட்டினால் பாரியளவில் செலவு ஏற்படும் எனத் தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்

## திருமதி. இந்திராணி ஞானதுரை



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், ஒக்லாந்து, நியூசிலாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திராணி ஞானதுரை 07.01.2012 ஆம் திகதி சனிக்கிழமை இரவு ஒக்லாந்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை பொன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மூத்த புதல்வியும், காலம்சென்ற அம்பலவாணர் குஞ்சிப் பிள்ளை தம்பதிகளின் மருமகளும், அம்பலவாணர் ஞானதுரை (நியூசிலாந்து) அவர்களின் அன்பு மனைவியும், அருந்தயாபரன் (அருண் - நியூசிலாந்து), தயாநந்தி (சிட்னி), கிருபாநந்தி (கிருபா - பிரிஸ்பேன்), கலைச்செல்வி (செல்வி-நியூசிலாந்து), விவேகானந்தி (ஆனந்தி - நியூசிலாந்து), மயூரானந்தி (மைனா-சிட்னி) ஆகியோரின் பாசமிகு அம்மாவும், கீதா (நியூசிலாந்து) திருநந்தகுமார் (சிட்னி), கந்தராஜா (காந்தன் - பிரிஸ்பேன்), கந்தகுமார் (குமார் - நியூசிலாந்து) சுரேஸ் (சிட்னி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், வேதகி, அபிராமி, ஆதித்தன், பிரணவன், பிரணோஜன், காருண்யா, கபிலன், துளசி, சாய்ராம், கீர்த்திகன், மைதிலி ஆகியோரின் பாசமிகு பேத்தியாரும்,

பாலச்சந்திரன் (இணுவில்), லதாராணி (இணுவில்) ரவிச்சந்திரன் (கொழும்பு) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற சிவேஸ்வர தம்பி (இணுவில்), சித்திரா (கொழும்பு), காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் கணபதிப்பிள்ளை, பவளரத்தினம் திருநாவுக்கரசு ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 11.01.2012 நாளை புதன்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு ஒக்லாந்தில் இடம்பெற்று தகனம் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C/143)

# கட்டுநாயக்கவில் தரையிறங்கிய மிகப்பெரிய பயணிகள் விமானம்



(கொழும்பு)

உலகின் மிகப்பெரிய பயணிகள் விமானம் முதற்தடவையாக இன்று கட்டுநாயக்கவில் தரையிறங்கியது

உலகின் மிகப்பெரிய பயணிகள் விமானமான எயார்பஸ் - யு380 முதற்தடவையாக நேற்றைய தினம் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்ததாக விமான நிலைய தகவல்கள் தெரிவித்தன.

எமிரேட்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமான இந்த விமானம் நேற்று அதிகாலை 4.20 மணியளவில் அவுஸ்ரேலியா சிட்னி நகரில் இருந்து வந்தவேளை எரிபொருள் நிரப்புவதற்காக கட்டுநாயக்கவில் தரையிறங்கியது. அதன்பின்னர் அதிகாலை 5.40 மணியளவில் மீண்டும் டுபாய் நகரை நோக்கி பயணித்துள்ளது.

பிரான்ஸ் நாட்டின் தயாரிப்பான இந்த விமானத்தில் சுமார் ஆயிரம் பயணிகள் பயணிக்க முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அழைப்பை நிராகரிக்கவில்லை வெளிவிவகார அமைச்சு மறுப்பு

(கொழும்பு)

தென்னாபிரிக்காவின் ஆளும் கட்சியான ஆபிரிக்கத் தேசிய காங்கிரசின் நூற்றாண்டு விழாவுக்கு விடுக்கப்பட்ட அழைப்பை புறக்கணிக்கவில்லை என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

உலகத் தமிழர் பேரவைக்கும் அழைப்பு விடுக்கப்பட்டதால், இந்த நிகழ்வுக்கான அழைப்பை இலங்கை அரசாங்கம் நிராகரித்துவிட்டதாக கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று தகவல் வெளியிட்டிருந்தது.

இதுதொடர்பாக வெளி விவகார அமைச்சின் பேச்சாளர் சரத் திசநாயக்க கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிடுகையில், அரசாங்கம் ஆபிரிக்கத் தேசிய காங்கிரசின் அழைப்பை நிராகரிக்கவில்லை.

அந்த நிகழ்வில் அரசின் சார்பில் தென்னாபிரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் சிகான் ரத்னவேல் பங்குபற்றினார். அவரே அந்த நிகழ்வுக்குச் சென்ற இலங்கையின் ஒரே பிரதிநிதி என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# கனரக வாகனங்களுக்கான இறக்குமதி வரி நீக்கம்

பயணிகள் பேருந்து கனகர வாகனங்கள் மற்றும் புதிய வாகன இயந்திர வகைகளுக்கான இறக்குமதி வரிகள் நேற்று முதல் முற்றாக நீங்கியுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.

2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் அடிப்படையில் இந்தத் தீர்வை இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தவிர கனரக வாகனங்கள் மற்றும் பேருந்துகளின் சில்லுகளுக்கான தீர்வையினை ஐம்பது சதவீத்தால் குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

சுற்றுலா மற்றும் பொது பயண சேவைகளை மேம்படுத்தும் முகமாகவும், சரக்குகளைக் காவிச் செல்லும் நடவடிக்கைகளை திறன்பட மேற்கொள்ளும் நோக்கிலேயே தீர்வைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விடயம் குறித்த வர்த்தமானி அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளதாக நிதியமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# புலிகளின் தபால்முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது

## இலங்கை தபால் திணைக்களம் தெரிவிப்பு



(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தபால் முத்திரை விவகாரத்தில் சர்வதேச தபால் சட்டங்களை அமுல்படுத்த முடியாது என இலங்கை தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய படங்கள் பொறிக்கப்பட்டதபால் முத்திரைகளை இலங்கை தபால் திணைக்களம் ஏற்றுக்கொள்ளாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக சில நாடுகளில் புலிகளின் தபால் முத்திரைகள் புழக்கத்தில் விடப்பட்டுள்ள போதிலும், அவற்றைப் பயன்படுத்தி இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படும் தபால்கள் மற்றும் தபால் பொதிகளை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என தபால் திணைக்கள ஆணையாளர் கே.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ், பிரிட்டன், கனடா போன்ற நாடுகளில் விடுதலைப் புலிகளின் தபால் முத்திரைகள் பயன்படுத்தப்படுவதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச தபால் சட்ட ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள நாடுகள் அதன்விதிமுறைகளுக்கு இணங்க செயற்பட வேண்டியது அவசியமானதாகும்.

எனினும், புலி முத்திரைகள் தொடர்பில் அந்த சட்டங்களை அமுல்படுத்துவது நடைமுறைச் சாத்தியமற்றது என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் உள்நாட்டு சட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்பு இலங்கையில் தடை செய்யப்பட்ட ஓர் இயக்கமாகும், எனவே புலிகளைக் குறிக்கும் தபால் முத்திரை பயன்பாடு ரத்து செய்யப்படும் எனஅவர் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஜனவரி 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.